
# வட அல்வை முருகேசனார்

# - பன்முகப்பார்வை -



# வட அல்வை முருகேசனார் பன்முகப் பார்வை

தொகுப்பாசிரியர்

**மு. அநாதரட்சகன்**

வெளியீடு
"ஆனந்த கானம்"
ஆவரங்கால், புத்தூர்.

27-02-2005

**வட அல்வை முருகேசனார்,**
**பன்முகப் பார்வை**
**(கட்டுரைத் தொகுதி)**

| | | |
|---|---|---|
| பதிப்புரிமை | : | மு.இராஜவரோதயன் |
| முதற்பதிப்பு | : | 2005 பெப் 27 |
| அச்சமைப்பு<br>அட்டை வடிவமைப்பு | : | கரிகணன் பிறிண்டேர்ஸ்,<br>424, காங்கேசன்துறை சாலை,<br>யாழ்ப்பாணம். |
| வெளியீடு | : | "ஆனந்தகானம்"<br>ஆவரங்கால், புத்தூர். |

**Vada Alvai Murugesanaar,**
**Multi Faceteral View**

| | | |
|---|---|---|
| Published | : | By. M.Rajavarothayan |
| First Edition | : | 2005 Feb 27 |
| Layout &Cover design | : | Hariganan Printers,<br>424, K.K.S Road, Jaffna. |
| Publishers | : | "Ananthaganam"<br>Avarangal, Puttur |

# வெளியீட்டுக் குழு

**தொகுப்பாசிரியர்**

| | |
|---|---|
| திரு.மு.அநாதரட்சகன் | (ஆசிரியர், யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம். |

**மலர்க்குழு**

| | |
|---|---|
| திரு.சி.கிருஸ்ணபிள்ளை | சமாதான நீதவான் (ஓய்வுபெற்ற அரச நிர்வாக உத்தியோகத்தர் |
| திரு.இ.சிவஞானம் | (சமாதான நீதவான்) |
| திரு.நா.சிவஞானம் | (அதிபர், யா/புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்) |
| திரு.வே.வேதநாயகம் | (ஓய்வு பெற்ற இ.போ.ச.உத்தியோகத்தர்) |
| திரு.கி.கணேசன் | (ஓய்வு பெற்ற அதிபர்) |
| திரு.க.சின்னராசா | (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்) |
| திரு.சி.மகேந்திரன் | (தபால் உத்தியோகத்தர்) |

# தொகுப்பாசிரியர் பார்வையில்

எம் அனைவரதும் அன்புக்கும், மதிப்புக்கும் உரியவராக வாழ்ந்தவர் அமரர் க.முருகேசு வாத்தியார். எமது சமூகத்தின் அடையாளமாக 94 ஆண்டுகள் எம்முடன் வாழ்ந்து மறைந்த அவரது சமூகப் பாத்திர ஏற்புகளை நன்றியுடன் நினைவு கூரவேண்டியது எமது கடனாகும். அந்த நன்றிக் கடனின் வெளிப்பாடே இந்நூலாகும்.

இந்நூல் தனிமனிதனின் புகழ் பாடும் அமரகாவியமல்ல சமூகத்தின் ஒரு காலகட்ட வரலாற்றினைப் பேசுகின்ற ஆவணமாகும்.

தமிழர் சமூகத்தில் ஒரு பிரிவினரின் வாழ்வியல் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டிருந்தபோது , சம உரிமைக்கும், சம நீதிக்கும், சுதந்திரத்துக்குமான போராட்டம் முன்னெடுக்கப்படவேண்டிய தேவை இருந்தது. அந்த வரலாற்றுக் கடமையைத் தோள்களில் சுமந்து விடுதலையைப் பெற்றுத்தர பல முன்னோடிகள் முன்வந்தனர். அவர்களது நோக்கம் ஒன்றாயினும் வடிவங்கள் வேறாயின. அத்தகைய முன்னோடிகள் வரிசையில் அமரர்.க.மு. வும் ஒருவர். அவரது சமூக விடுதலைக்கான போராட்ட உபாயங்கள் வித்தியாசமானவை.

அமரர்.க.மு.தான் வாழ்ந்த சமூகக் களத்தில் இயக்கமாகவும், கோட்பாடாகவும், வரலாற்று வெளிப்பாடாகவும் வாழ்ந்தவர். அவரைப்பற்றி விரிவாக எடுத்தியம்ப இந்நூல் போதுமானதல்ல. ஆயினும் அவரது வாழ்வின் சில வெட்டு முகங்களை இதில் தரிசிக்க முடியும் என நம்புகிறோம்.

யாழ்ப்பாணச் சமூகப் படிநிலை முறைமையை ஆராயப் புகும் சமூகவியல் மாணவனுக்கு உதவக்கூடிய உண்மைகள் பல இதனுள் உறங்கிக் கிடக்கின்றன.

இந்நூல் விடயத்தை முழுமையாக அணுகும் அத்தியாய நிலையில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு அல்ல. இதனால் இந்த நூலில் கூறியது கூறல் என்பது தவிர்க்க முடியாதது. ஆனால் அதனையும் மீறி, அமரர் க.மு.பற்றிய முழுமையான பார்வைக்கு முதல் படியாக இது அமையும் என்பது எனது வலுவான நம்பிக்கையாகும்.

நன்றி

தொகுப்பாசிரியர்

# பதிப்புரை

02/01/2005 அன்று அமரத்துவமடைந்த எனது தந்தையார் அமரர் க.முருகேசு (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்கள் நினைவாக இந்நூல் வெளிவருகின்றது.

இலங்கைத் தமிழர்களின் ஒருபிரிவினரின் ஒரு காலகட்ட வரலாற்றைக் கூறி நிற்கின்றது. அக்காலத்தில் நடைபெற்ற போராட்டங்களில் அவரது பங்கும்பணியும் பற்றி இந்நூல் கூறுகின்றது. அத்துடன் அவரது ஸ்தாபக நிறுவனங்களின் செயற்பாடுகள், சாதனைகள் பற்றியெல்லாம் எடுத்துக்கூறுகின்றது. அவை பற்றி பல்வேறு துறை சார்ந்த பெரியோர்களால் நன்கு ஆராய்கின்றது.

இக்கட்டுரைகள் , கவிதைகளை, நல்கி உதவிய அன்பர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கட்டுரைகளின் கருத்துக் களுக்கு அக்கட்டுரைகளை எழுதியவர்களே பொறுப்புடையவர்களாவார். அத்துடன் புகழ் பூத்த கவிஞர்களின் கவிதைகளும் நூலில் இடம்பெற்றுள்ளன. அவற்றை ஆக்கித்தந்த கவிஞர்களுக்கும் எனது நன்றிகள்.

வட அல்வை முருகேசனார் பன்முகப் பார்வை என்ற இந்நூல் வெளிவர சகல வழிகளிலும் உழைத்த வெளியீட்டுக் குழுவுக்கும், உதவிகள் செய்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலை அழகுற அச்சுப்பதிப்பு செய்து, முன் அட்டை வடிவமைத்த "கரிகணன் பிறிண்டேர்ஸ்" ஸ்தாபனத்தாருக்கும் எனது

மு.இராஜவரோதயன்
"ஆனந்தகானம்"
ஆவரங்கால், புத்தூர்.
27.02.2005

# 1

## அமரர் க.முருகேசு வாத்தியார் வரலாற்றுப் பதிவுகள்

அநாதரட்சகன் ஆசிரியர்,
யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்.

"ஒருவரின் சாதனைகளை அவர் கண்டவெற்றிகளின் எண்ணிக் கையை வைத்துப்பார்ப்பதை விட, அவ்வெற்றிகளின் பயன்பாடுகளைக் கொண்டு கணக்கிடுவதே சிறந்தது"

என்பது மேனாட்டறிஞர் ஒருவரது கருத்து இக்கருத்துக்கு அடையாள மாக வாழ்ந்த மகா புருஷர்களில் நம் காலத்தைய உதாரணமாக விளங்குபவர் அமரர். கந்தப்பு முருகேசு ஆசிரியர் அவர்களாவர். இந்த உதாரண புருஷர் எம்மோடு வாழ்ந்து இதுவரை சாதித்து வரிசைப்படுத்தியுள்ள சாதனைகள் எந்த அளவிற்கு அவரை நம்பியிருந்த மக்களுக்கும், குறிப்பாக அவர் சார்ந்த சமூகத்துக்கும் பயன்தருவிதமாக அமைந்தன என்பதனை, அவர் காலமாகி விட்ட இவ்வேளையில் சற்று நினைவுபடுத்திப்பார்ப்பது அவசியமாகும்.

அமரர் திரு.க.முருகேசு அவர்கள் ஒரு ஆசிரியராக, அதிபராக, சமூகத்தலைவராக, அரசியல் வாதியாக, நிறுவனங்களின் ஸ்தாபகராக, அரசியல் வாதியாக, நாடகக்கலை ஆர்வலராக, பண்பகாட்டுக்காவலராக பன்முக ஆளுமையுடன் எம்முடன் வாழ்ந்து தனது வாழ்வை நிறைவு செய்தவர்.

அமரர் க.மு. அவர்கள் தாம் வாழ்ந்த அல்வாய், புத்தூர் உட்பட ஏனைய பகுதிகளிலும் பரந்து வாழும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக, கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக அரும்பணியாற்றி மறைந்துள்ளார்.

இக்காலப்பகுதியில் பொதுவாழ்விலும், குடும்பவாழ்விலும் அவர் சாதித்துச் சென்றவை பதிவு செய்யவேண்டிய பதிவுகளாக எம்முன் விரிந்து கிடக்கின்றன.

அமரர் க. மு. வின் வரலாற்றில் அவரது தனிப்பட்ட குடும்பவரலாறு மட்டுமன்றி, அவர் வாழ்ந்த சமூகத்தின், கிராமங்களின் வரலாறும் இழைந்து வேரோடிப்போய் நிற்கிறது.

அமரர் க.மு அல்வாய்வடக்கு தகனை கந்தப்பு - மயிலம்மை தம்பதிகளுக்கு மூத்த புத்திரனாக 26-11-1910ல் துன்னாலையில் பிறந்தார். இவரது தகப்பனார் அன்றைய திண்ணைப்பள்ளியின் ஆசிரியராவார். தமிழர் பூர்வீகக் கல்விமரபில் திண்ணைப்பள்ளிகளே அன்று கல்வியை வழங்கி வந்தன என்பது குறிப்பிடித்தக்க ஒன்று, வதிரி தேவரையாளிச் சைவவித்தியா சாலை 1917ல்ஸ்தாபித்மாவதற்கு முன்பு வதிரியில் "வண்ணஞ்சிமா" என்ற இடத்தில் இயங்கிய திண்ணைப்பள்ளியிலேயே அமரர் க.மு வின் தந்தை கந்தப்பு அவர்கள் ஆசிரியப்பணி புரிந்துள்ளார்.

அமரர் க.மு.வின் ஆரம்பக்கல்வி கிறிஸ்தவப் பாடசாலையிலேயே ஆரம்பமாகிறது. அல்வாய் வடக்கில் வெள்ளைப்புற்றடி எனும் இடத்தில் இயங்கிய வெஸ்லியன் மிசன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கற்றார் பின்னர், தனது இடைநிலைக் கல்வியை 1921ல் தேவரையாளி சைவ வித்தியாசாலையில் தொடர்ந்து அங்கு மூன்றாண்டுகள் கல்விகற்று 1923ல் நடைபெற்ற சுயபாஷா பாடசாலை விடுகை தராதரப் பத்திரப் பரீட்சையில் (V.S.L.C) தேறினார். தனது பதின்மூன்றாவது வயதில் எட்டாம் வகுப்பில் சித்தியடைந்தார். அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையாவும் அமரர் க.மு வும் சமகாலத்தில் அங்கு கல்வி கற்று வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைப் புகுமுகப்பரீட்சைக்குத் தோற்றுவ தற்குப் பதினெட்டுவயது பூர்த்தியடையவேண்டுமென்பது அன்றைய நியதி. அதனால் அமரர் க.மு மூன்றாண்டுகள் பாடசாலையிலிருந்து விலகி இருந்து பின்னர் 1927ல் தனது 17வது வயதில் தேவரையாளி சைவவித்தியாசாலையில் மாணவ ஆசிரியராகப் பணியினை ஏற்றார்.

அமரர் க.மு. அவர்கள் அங்கு ஆசிரியப்பணியில் காலடிவைக்க, கவிஞர் மு.செ. அவர்களும் கோப்பாய் ஆசிரியகலாசாலையில் பயிற்சியை முடித்து ஆசிரியப்பணி புரிய ஆரம்பித்தார்.

இக்காலப்பகுதியிலேயே, வடபகுதியில் பாடசாலைகள் கலாசாலை களில் சம ஆசன, சமபோசன உரிமை கோரிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கம் 1928ல் அமெரிக்க மிசனரிமாரின் உதவியுடன் திரு. யோவல். போல் அவர்களினால் உடுவில் பெண்கள் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வுரிமைப் போராட்டம் பிற்படுத்தப்பட்ட மக்களிடையே

தமது இருப்பினை உணரவைத்தபோதும், சமூகத்தில் மேலாண்மை வகித்தோர் மத்தியில் பலத்த எதிர்ப்பினை எதிர்கொண்டது. இதன் எதிரொலியாக, வடபகுதியில் பதின்மூன்று பாடசாலைகள் தீக்கிரையாகின. அன்று பிற்படுத்தப்பட்ட சமூகத்து ஆசிரியர்கள் புகுமுகப்பரீட்சையில் சித்தியடைந்த போதும், ஆசிரியபயிற்சிக்கலாசாலைகளில் அனுமதி மறுக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். இத்தகைய துரதிஸ்டம் அமரர் க.மு.வின்ஆசிரிய வாழ்விலும் ஏற்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட இச்சமூகத்து முதல் ஆசிரியராகவும் அமரர் க. மு. வே. இருந்துள்ளார் என்பது மனங்கொள்ள வேண்டியதாகும்.

1929ல் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்ட அமரர் க.மு.கௌரவ உயர் தேசியத்தலைவர்கள் எனப்படுவோரின் சதி நடவடிக்கையால் அந்த வாய்ப்பை இழக்க நேரிட்டது. இது பற்றி அமரர் க.மு 'சரிநிகர்' பத்திரிகைக்களித்த பேட்டியில் கூறுவது கவனத்துக்குரியது.

"1929ம் ஆண்டு என்னையும் சேர்த்து 80 மாணவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு தெரிவுசெய்யப்பட்டனர். இதனைக் கேள்விப்பட்ட உயர்சாதியினர் சேர். பொன் இராமநாதனிடம் சென்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் இடமளிக்கக்கூடாது என முறையிட்டனர். இராமநாதனும் மகாதேசாதிபதியுடன் கதைத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் இடம் அளிக்கக்கூடாதென வாதாடினார். எனினும், மகாதேசாதிபதி அதற்குச் சம்மதிக்கவில்லை. இராமநாதன் அப்போது ஸ்ரேற் கவுன்சில் (State council) உறுப்பினராயிருந்தார்"

இச்சம ஆசன, சமபோசனப் போராட்டம் காரணமாக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிறிது காலம் மூடப்பட்டிருந்ததாகவும் அறியமுடிகிறது.

இதன் பின்னர், 1930 ம் ஆண்டு அமரர் க. மு. அவர்கள் தெல்லிப்பழை ஆசிரியகலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்டார். அங்கும் அமரர் க.மு வுக்கு சம உரிமை கிடைக்கப்பெறவில்லை. அவர் ஏனைய மாணவர்களுடன் சமமாக உட்கார்ந்து சாப்பிட அனுமதிக்கப்பட வில்லை. தனி அறையே அவருக்கு வழங்கப்பட்டது நெற்றியில் திருநீறு பூசுவதற்கும் தடைவிதிக்கப்பட்டிருந்தது. இத்தகைய நெருக்கடிகள், அவமானங்களுக்கிடையில்தான் அமரர் க. மு. தனது பயிற்சியை நிறைவு செய்தார். அன்றைய கல்வித்துறை அனுபவங்களைக் கேட்டால் தாம் அனுபவித்த கொடுமைகளை அமரர் க.மு உணர்ச்சிபூர்வமாக விபரிப்பதைக்கேட்டுள்ளோம். ஆசிரிய பயிற்சியினை 1932ல்

நிறைவு செய்து தேவரையாளிச் சைவவித்தியாசாலையில் மீண்டும் அமரர்.க .மு நியமனம் பெற்றார். தெல்லிப்பழை கிறிஸ்தவ ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்ட முதலாவது சைவ ஆசிரியன் என்ற பெருமையும் அவரையே வந்தடைகிறது.

அத்துடன், அல்வாய் வடக்கின் ஆசிரியப்பரம்பரையின் மூலவேர் அமரர் க.மு வின் தந்தையார் கந்தப்பு அவர்களிலாரம்பித்து, அமரர் க.மு.வின் வழியாக அகலக்கிளை பரப்பி நிற்கும் ஒன்றாகும்.

'தேவரையாளிச்சமூகம் ' என கிலாகித்துப பேசப்பட்டுவருகின்ற சமூக உருவாக்கத்தில் அல்வாய் வடக்கு ஆசிரிய முதல்வர்களின் பங்களிப்புப் பற்றிய பதிவுகள் எழுதப்படாத குறிப்புகளாக, வரலாற்றுத் தவிர்ப்புக் குள்ளாகியே வந்துள்ளது. ஆசாரியார் சூரன், அல்வாய் வேலுச்சோதிடர், கவிஞர் மு. செல்லையா, சைவப்புலவர் சி. வல்லிபுரம், ஆ.ம. செல்லத்துரை ஆகியோர் வரிசையில் அமரர். க.மு வும் கணிக்கப்படக்கூடிய தகைமை உடையவர் என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் ஆனால் அது பற்றி சரியாக எதிலும் குறிப்பிடப்படாமல் மூங்கையாகவே விடப்பட்டுள்ளது. தேவரையாளி சைவவித்தியாசாலையின் தோற்றம் வளர்ச்சி பற்றி எழுத முன் வந்தவர்கள் தம்மை முதனிலைப்படுத்தியும், அமரர்.க.மு.வை இருட்டடிப்புச் செய்துமே எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனை அமரர். க.மு. வின் மாணவரும், எழுத்தாளருமான தெணியானும் சுட்டிக்காட்டியுள்ளார். "தேவரையாளி இந்துக்கல்லூரி சார்ந்த தமது சுயவரலாறு என்பவற்றை எழுதியவர்களால் திரு .க.மு. அவர்கள் 1930ல், 32ல் மெல்லச் சுட்டிக்காட்டப்படுகின்றார். ஆனால் ஏனையவர்கள் போல். திரு.க.மு. அவர்களுக்கும் தேவரையாளிச் சைவ வித்தியாசாலையோடு இணைந்த முன்வரலாறு ஒன்றுண்டு"
(தெணியான், வடஅல்வை முருசேகனார்) பவளவிழாமலர்

அமரர் க.மு. பயிற்சிபெற்று தேவரையாளி சைவவித்தியாசாலையில் ஆசிரியராக நியமனம் பெற்ற காலத்திலேயே இல்லறவாழ்வில் இணைந்தார். தனது உறவுப் பெண்ணான இலட்சுமியை வாழ்க்கைத் துணையாகக் கொண்டார். அதன்பேறாக ஏகபுத்திரியாக இந்திராவை பெற்றெடுத்தனர்.

இக்காலகட்டத்தில் ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த அமரர் க.மு. பாலர் வகுப்பிலும், ஏனைய வகுப்புகளிலும் தனது வினைத்திறன் மிக்க கற்பித்தலை அதீத அக்கறையையுடன் செய்து வந்தார். பூமிசாத்திரம், சரித்திரம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதில் நிபுணத்துவமுடையவராக

மிளிர்ந்தார். அமரர் க.மு தேசப்படங்களை கரும்பலகையில் அநாயசமாகக் கீறும் ஆற்றலுடையவர் என அவடைய மாணவர்கள் இன்றும் விதந்து கூறுவர். அமரர் க.மு.வின் வினைத்திறனுள்ள கற்பித்தலுக்கு அவரிடம் இயல்பாகவேயிருந்த கையெழுத்து, ஓவியத்திறன் நடிப்பாற்றல், பாடத் தெளிவு, பொறுமை என்பன பலமாக இருந்தன. அக்காலத்தில் அமரர் க. மு தனது கற்பித்தல் முறையாக 'ஆற்றுகை' செயல் முறையையும் பயன்படுத்தியுள்ளார். இதனாலேயே நடிகமணி V.V வைரமுத்து என்ற நாடகக் கலைஞனின் குருவாகவும், வளர்ப்புத்தந்தையாகவும் அவரால் இருக்கமுடிந்தது. V.V வைரமுத்துவின் தகப்பனார் வேலப்பருடன் இருந்த நட்புக்காரணமாக, 1934ம் ஆண்டு V.V வைரமுத்துவை தனது வீட்டுக்கு அழைத்துவந்து தேவரையாளி சைவவித்தியாசாலையில் படிக்க வைத்தார்.

இயல்பாகவே கலையார்வம், அழகியல் உணர்வு நிரம்பப்பெற்ற அமரர் க.மு. நாடகங்களைப் பிரதியாக்கம் செய்து நெறிப்படுத்தி மேடையேற்றுவதில் வல்லவராக இருந்தார். நாடகப்போட்டிகளில் அவரது நாடகங்கள் வெற்றிக் கனிகளைப் பறித்தன. நாடக நடிகர்களுக்கு ஒப்பனை செய்வதிலும் கைதேர்ந்தவராக இருந்தார் என்பதை அரியாலையூர் நடிகர் இரத்தினம் அவர்கள் இன்றும் பெருமையாகக் கூறுவார். கலாநிதி VV.வைரமுத்து அவர்கள் பாடசாலையில் முதன்முதலில் நடித்தது அமரர் க.மு.வின் நாடகத்திலேயாகும். இதனை அமரரின் மருமகனும், நாடகக் கலாநிதியுமான காரை. செ. சந்தரம்பிள்ளையவர்கள் இவ்வாறு கூறியுள்ளார். "ஒரு சமயம் சிவராத்திரி விழாவின் போது, 'அப்பூதியடிகள்' நாடகத்தை ஆசிரியர் முருகேசு அவர்கள் பயிற்றி மேடையேற்றினார். இதில் அப்பூதியடிகளாக வைரமுத்து பாத்திரமேற்று நடித்துப்பலருடைய பாராட்டுதல்களையும் பெற்றார். பாடசாலையில் இவர் அரங்கேற்றியது இதுவே முதல் தடவையாகும். இதைத் தொடர்ந்து அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், மெய்ப்பொருள் நாயனார் ஆகிய பாத்திரங்களை யேற்று நடித்தார்."

(கலாநிதி. காரை செ. சந்தரம்பிள்ளை - நடிகமணி V.V வைரமுத்துவின் வாழ்வும், அரங்கும்)

பாமாவிஜயம், பக்தகுசேலர், மார்க்கண்டேயர், மயான காண்டம், சகுந்தலை போன்ற நாடகங்கள் அமரர் க.மு.வுக்கு நிலையான புகழைத்தேடித்தந்தவையாகும். யாழ் நகர மண்டபத்தில் பல பகுதிகளிலிருந்து வந்து போட்டியிட்ட நாடகங்களில் 'சகுந்தலை' முதலிடம் பெற்று வெற்றிவாகை சூடியமை அமரர் க.மு வின் நெறியாள்கைத்திறனுக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.

தவிர, அல்வாய் அரசடி விநாயகர் ஆலய முன்றலில் ஆண்டுதோறும் 'சிவராத்திரி' தினத்தன்று தவாறது தனது நாடகங்களை மேயையேற்றி வந்தார். இவரது வழிகாட்டலாலும், தூண்டுதலாலும் பலர் நடிகராயினர். அக்காலத்தில் அமரர் க.மு.வின் மைத்துனரான வித்துவான் ம. முருகேசு அவர்கள் நவரச நடிகனாகப் புகழ் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமரர் க.மு. வின் நாடகத்துறைசார்ந்த பங்களிப்பின் முதன்மையாகக் கூறத்தக்கது, நடிகமணி. கலாநிதி V.V வைரமுத்துவை ஈழத்து நாடக உலகுக்கு இனங்காட்டியமை எனலாம்.

அமரரிடம் காணப்பட்ட சிறந்த பண்பு விருந்தோம்பலும், தயாள குணமுமாகும். இதனாலேயே V.V வைரமுத்துவுக்கும், உறவினர்களில் சிலருக்கும் வளர்ப்புத் தந்தையாக இருந்து வழிகாட்டமுடிந்தது.

அமரர் க.மு தான் பிறந்த பிறந்து வளர்ந்த கிராமத்தின் மீதும், மக்கள் மீதும் மிகுந்த பற்றுதலும், அக்கறையும் கொண்டவர். ஐம்பதுகளின் நடுக்கூறு வரை அல்வாய் வடக்கை வாழ்விடமாகக் கொண்டிருந்ததால், அல்வாய் வடக்கின் சில முதன்மைக் காரியங்களுக்கு வித்திட்ட மூலவராகவும் விளங்கினார்.

அல்வாய் வடக்கில் முதன்முதலில் அமரர் க.மு. வினால் (1936ம் ஆண்டு) விக்கினேஸ்வரா வாசிகசாலை நிறுவப்பட்டது. இது அப்பகுதி மக்களின் அறிவுக்கண்ணைத்திறக்க வழிகோலியது. சிறு சிறு குழுக்களாக வாழ்ந்த மக்களை ஒன்றிணைக்கவும், கிராமத்தின் முழுமை நோக்கிய வளர்ச்சி கருதியும் தீர்க்கதரிசனத்துடன் இக்கைங்கரியத்தினை மேற்கொண்டார்.

இந்நிலையத்தினூடாக முறைசாராக் கல்விமுறைமையை அறிமுகம் செய்துவைத்தார். வளர்ந்தோருக்கான, கல்வி ஊக்குவிக்கப்பட்டது. குறிப்பாக அறநெறிக்கல்வியே பெரிதும் புகட்டப்பட்டது. சைவசமய பாடபோதனை நடைபெற்று விவேகானந்தசபையினரின் பரீட்சைகளுக்குத் தோற்ற வழி சமைத்தார். இதன் பயனாக, சமய அறிவும், ஆசாரமுடைய தோத்திரங்களுக்குப் பயன்சொல்லத்தக்க அறிவுடைய பெரியார்கள் சிலர் எம்மிடையே தோன்ற வழிவகுக்கப்பட்டது.

இக்கட்டத்தில், சமூகத்தின் அடித்தளமான பொருளாதாரக் கட்டுமானம் பலமடைந்தாலே அதன் மேலமைந்த கல்வி, கலை கலாசாரம் என்பனவும் மேம்பாடடையும் என்ற யதார்த்தத்தினை உணர்ந்து சமூகத்தின் பொரளாதார மேம்பாடுகருதி பல கட்டமைப்புக்களை நிறுவமுன்னின்றார்.

'சமூக புனருத்தாரண ஐக்கிய சங்கம்' என்பது இதன் ஒரு வெளிப்பாடேயாகும். இச்சங்கம் மூலம் 'பணவரவு' வைபவம் எம்மவர்க்கு அறிமுகமானது. எமது சமூகத்தவர் தமது தேவைகள், நலன்களை நிறைவு செய்ய இதில் கிடைத்த நிதிவளம் பயன்படுத்தப்பட்டது.

தவிர, அக்காலகட்டத்தில் நிலவுடமை மேலாதிக்கசக்திகளின் கீழ் உழைக்கும் வர்க்கமாக இருந்த எமது மக்களின் உழைப்பு பல வழிகளில் சுரண்டப்பட்டது. அன்றாட அடிப்படை வசதிகளைக் கூடப்பெற இயலாதவர் களாக பொருளாதாரப்பின்னடைவுக்குள் சிக்கியிருந்தனர். இதனால் சாதியத்தை அடையாளப்படுத்தும் தொழில்களையே செய்யத் தள்ளப் பட்டனர். அமரர் க.மு தூரநோக்குடன் இது பற்றி சிந்தித்து மக்களுக்கு மாற்றுத் தொழில்களை அறிமுகம் செய்ய முயன்றார். இதன் பயனாக, அல்வாய் வடக்கில், நெசவுசாலையை அல்வாய் அரசடிவிநாயகர் ஆலயச்சூழலில் நிறுவினார். அதில் இளைஞர், யுவதிகள் போதிய பயிற்சிபெற வைத்தார். இந்நெசவுசாலையில் முதல் மாணவனாகச் சேர்ந்து பயிற்சி பெற்றவர் மாறாம்புலம் பெருமாள் (சின்னப்பொடி) என்பவர் என அறியமுடிகிறது. அதைவிட, பெண்களுக்கென சுய தொழில் வாய்ப்பினை வழங்க வேண்டி 'பன்னசாலை' என்ற தொழிற்பயிற்சி நிலையத்தினையும் நிறுவினார்.

அத்துடன், அக்காலத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி யாகத் திகழ்ந்த சி. தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்ளின் அனுசரணையில் நடாத்தப்பட்ட கயிற்றுத்தொழிற்சாலைக்கு அல்வாய் வடக்கு இளைஞர்களை அனுப்பி அக் கைத்தொழிலைப் பயில வசதிகள் செய்தார்.

இவை, சாதியத்தின் பொருளாதாரக் கட்டிறுக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கான மார்க்கங்களை திசைப்படுத்திய அமரர் க. மு. வின் பொருளாதாரச் சிந்தனையின் வெளிப்பாடுகளாகும். இக்காலகட்டத்திலேயே இலங்கையின் முதல்இடது சாரி இயக்கமான சமசமாஜக்கட்சி வடபகுதியில் ஆரம்பமானது. 1937ல் தனது செயற்பாடுகளை தொடங்கியது. அக்கட்சியின் வடபகுதித்தலைவரான சட்டத்தரணி சி. தர்மகுலசிங்கம் (ஜெயம்) பிற்படுத்தப் பட்ட மக்களின் மீது மிகுந்த அக்கறையும், அனுதாபமும் உடையவராக விளங் கினார். யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் மேடைகளிலும் தீண்டாமைக்கு எதிரான குரல்கள் ஒலித்தன. இவைதவிர, சம ஆசனம், சமபோசனம் சட்டமாக்கப்பட்டமை, சர்வஜனவாக்குரிமை வழங்கப்பட்டமை போன்றவை இம் மக்களிடையே தமது இருப்பை உணர்வதற்கான சூழலை ஏற்படுத்தின.

கல்வி என்னும் கருவியே எம்மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தரும் என்ற க.மு. வின் சிந்தனையில், ஒரு சைவப்பாடசாலையை அல்வாய்

வடக்கில் தாபிக்கும் எண்ணம் கருக்கொண்டது. இதன் பயனாக 1937ம் ஆண்டு குருக்கட்டுப்பிள்ளையார் ஆலயத்துக்குத் தென்திசையில் 'தெவுளியானை' என்ற காணியில் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. ஆயினும் சில தடங்கல்கள் காரணமாக அது நிறைவுபெறவில்லை.

'தீண்டாமை' எனும் பேயை விரட்ட ஸ்தாபனமயப்பட்ட போராட்டமே பயன்தரும என்பதை அன்றுணர்ந்த அமரர் க.மு அதன் வழியில் செயற்பட முன்னின்றார். இதன் பயனாக, அன்றைய சமூகமுன்னோடிகளுடன் இணைந்து 19.04.1940ல் "வடமராட்சி சமூகசேவ சங்கம்" என்பதை உருவாக்கினார். இச்சங்கத்தின் மூலவர்களில் கரவெட்டி க. இரத்தினம் ஆசிரியரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகப்பணியுடன், ஆன்மீகப்பணியினையும் முன்னெடுத்த க.மு 1940ல் அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் ஆலயத்தின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கவென ஒரு பரிபாலன சபையை நிறுவி, அதன் செயலாளராகப் பதவியேற்று ஆலயத்துக்கென ஒரு யாப்பையும் உருவாக்கிக்கொடுத்தார்.

வடமாராட்சி சமூக சேவா சங்கத்தின் செயல் வினைஞராக விளங்கிய வேளை சங்கத்தின் நான்காவது மாநாடு அல்வாய் வடக்கு குருக்கட்டுப் பிள்ளையார் கோவிலின் முன்றலில் நடைபெற்றது. தேவரையாளி சைவவித்தியாசாலையிலிருந்து மக்கள் எழுச்சியுடன் ஆரம்பித்த பேரணி நெல்லியடிசென்று, அங்கிருந்து மாலிசந்தி ஊடாக அல்வாய் வடக்கினை வந்தடைந்தது. இதில் சமதர்மவாதி சி. தர்மகுலசிங்கத்தின் பிரதிநிதியாக திரு. ஜெயக்கொடி அவர்கள் (பின்னாளில் உடுப்பிட்டி பா.உ) கலந்து கொண்டிருந்தார்.

நாற்பதுகளில் யாழ். குடாநாட்டில் ஆங்காங்கே பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் பல்வேறு பெயர்களில் சமூக மேம்பாடு கருதி பல சங்கங்கள் உருவாகின. சன்மார்க்க ஐக்கிய வாலிபர்சங்கம், நல்லூரிமை ஊழியர்சங்கம், சமூக ஒற்றுமைவாலிபர் சங்கம், வடமராட்சி சமூகசேவா சங்கம், அளவெட்டி சமூக சீர்திருத்த மகாசபை, தெல்லிப்பளை வாலிபர் ஐக்கிய சங்கம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. சமூக விடுதலை கருதி இச்சங்கங்களின் தலைவர்கள் அன்று கூடி அனைவரையும் உள்ளடக்கிய பெரிய ஸ்தாபனம் ஒன்றை உருவாக்கினர். இதுவே 1940ல் உருவான வட இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை எனபெயர்பெற்றது. இதன் முதலாவது தலைவராக டொனமூர் ஆணைக்குழுவின் முன் இம்மக்களது நலன் குறித்து சாட்சிய மனிதவரான திரு. யோவெல்போல் தெரிவுசெய்யப்பட்டார். இச்சங்கம் பின்னர் 1944ல் அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபை' என பெயர் மாற்றம் பெற்றது.

இந்த அமைப்பின் உயர்மட்டத்தலைவர்களில் ஒருவராகவும், ஸ்தாபகர்களில் ஒருவராகவும் அமரர் க.மு. இருந்துள்ளார். போவெல் போல. J.Dஆசிர்வாதம், ஜி. நல்லையா, K.Dமாணிக்கம், மூப்பர்டி. ஜேம்ஸ் M.C சுப்பிரமணியம், ஆ.ம.செல்லத்துரை ஆ.ஏ முருசேசு வைத்தியர் சைவப்புலவர் சி. வல்லிபுரம், கவிஞர்.மு. செல்லையா ஆகியோர் இவரது சகபாடிகளாக இருந்தார். இவ்வமைப்பின் தீண்டாமைக்கெதிரான செயற்பாடுகளில் அமரர்.க.மு தீவிரமாக நின்று உழைத்தார்.

நாற்பதுகளின் நடுப்பகுதி அல்வாய் வடக்கு மக்களின் எழுச்சிக்கு வித்திடப்பட்ட காலப்பகுதி எனலாம். இந்த எழுச்சிக்கு அமரர். க.மு மக்களை அணிதிரட்டி தலைமைதாங்கி வழிநடாத்தினார். சர்வஜன வாக்குரிமையின விளைவு பிற்படுத்தப்பட்டோரின் அரசியல் பங்குபற்றலுக்கு வழிகோலியது. இதுவரையும் தேசிய, பிரதேச அரசியலில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட இம்மக்களை அரசியல் உணர்வு பெற்றனர். இதனால்.1944ல் வடமராட்சி சமூகசேவா சங்கத்தின் தலைமையில் கட்டைவேலி கிராமசபைத்தேர்தலில் இச்சமூகத்தலைவர்கள் ஐந்து பேர் போட்டியிட்டனர். திக்கம் வட்டாரத்துக்கு மு. மாணிக்கமும், அல்வாய் வட்டுவத்தைக்கு கவிஞர் மு. செல்லையாவும், கரவெட்டிக்கு வைத்தியர் மார்க்கண்டுவும், அல்வாய் வடக்குக்கு க.முருகேசுவும், சமரபாகுவுக்கு சின்னத்தம்பியும் களத்தில் நின்றனர். இவர்களில் அமரர். க.மு மட்டுமே வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. மிகவும் பரபரப்பான சூழலில் நடைபெற்ற இத்தேர்தல் வெற்றிக்கு சமதர்மவாதி சி. தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்களது ஆசியும், அல்வாய் வடக்கு மக்களின் ஒருமித்த ஆதரவும் அமரர் க.மு.க்கு துணை நின்றன. இவ் வெற்றி ஏனையபகுதிகளில் வசித்த எம்மவரிடையேயும் எழுச்சியை ஏற்படுத்தத் தவறவில்லை.

அமரர் க.மு வின் முன்முயற்சியால் பல சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1947ம் ஆண்டு சமூகப்புனருத்தாரண ஐக்கிய சங்கத்தின்வருடாந்த மாநாடு அமரரின் தலைமையில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பிரதம விருந்தினராக ச. தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்கள் கலந்து கொண்டார். மாநாட்டில் எடுத்த தீர்மானத்துக்கமைய, குச்சம் வைரவர் ஆலயத்தில் பாரம்பரியமாக நடைபெற்று வந்த வேள்விமுறை நிறுத்தப்பட்டு, பதிலாக ஆடிப்பூரத்தினை சைவாகமப்படி நடாத்த வழிசமைக்கப்பட்டது. அத்துடன், வதிரி தேவரையாளி சைவவித்தியாசாலையில் கல்வி கற்று வந்த இப்பகுதி மாணவர்களின் நலனுக்காக அல்வாய் வடக்கு வீரபத்திரா கோவிலடியிலிருந்து பாடசாலை வரை வான் போக்கு வரத்துச்சேவையை (தட்டிவான் சேவை) ஏற்பாடு செய்து உதவினார். இச்சேவை அமரர் க.மு வினால் 1945 முதல் 1948 வரை ஏற்படுத்தப்பட்டதாக அறிய முடிகின்றது.

இக்கால வேளையில்தான் அமரர் க.மு குடும்பவாழ்வில் பேரிழப் பொன்றினை சந்திக்கவேண்டி இருந்தது. 1948இல் மனைவி இலட்சுமியை இழந்தமையே அதுவாகும். இத்துயரத்தில் இருந்து மீண்டு கொள்ள பொதுப்பணிகளே அவருக்கு உதவின.

இவ்வாண்டிலேயே (1948) முதலாவது பாராளுமன்றத்தேர்தல் நடைபெற்றது. பருத்தித்துறைத் தொகுதியில் சி.தர்மகுலசிங்கம் (ஜெயம்) போட்டிக்கு நின்றார். இடது சாரித்தலைவரான ஜெயத்தின் வெற்றிக்காக அமரர் க.மு அரும்பாடுபட்டார். எமது மக்களின் முழுமையான ஆதரவினைப் பெற்றுக் கொடுப்பதற்கு கவிஞர் மு.செல்லையா ஆ.ம. செல்லத்துரை ஆகியோருடன் இணைந்துசெயற்பட்டார்.

இவ்வேளையில் அமரர் க.மு வின் கவனம் பத்திரிகைத் துறையிலும் சென்றது. ஒரு பழப்பெரும் பத்திரிகாசிரியராக இத்துறையில் கால் பதித்தார் இது பற்றி எழுத்தாளர் தெணியான் குறிப்பிடுவதை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமானது. "யாழ் வைத்தியர் முருகேசு அவர்கள் "தூதன்" பத்திரிகை யை வெளியிட்டு வந்தார். பின்னர் அவரிடமிருந்து "தூதன்" பொறுப்பினை ஏற்றுக்கொண்ட திரு.க.மு அவர்கள் சிலகாலம் அதன் ஆசிரியராக இருந்து தொடர்ந்து அதனை வெளியிட்டார். திரு.க. மு. அவர்கள் ஆசிரியராக இருந்து வெளியிட்டு வந்த தூதன் பதிரிகையில்தான் பிரபல எழுத்தாளர் கே.டானியலின் முதற்படைப்பு வெளியானது என்பதுவும் குறிப்பிடத்தக்கது. (தெணியான், வடஅல்வை முருகேசனார், பவளவிழாமலர்)
இதுவும் க.மு.வின் பன்முக ஆளுமையின் வெளிப்பாடு எனலாம்.

இவ்வாண்டிலேயே (1948) க.மு வின் இல்லற வாழ்விலும் ஒரு திருப்புமுனை ஏற்படுகிறது. தனது வாழ்க்கைத் துணைவியாக கமலவேணியை ஏற்றுக்கொண்டமையைக் குறிப்பிடலாம்.

கிராமசபைத்தேர்தல்களில் இருதடவைகள் வெற்றிபெற்று ஏழு ஆண்டுகள் அங்கத்தவராகப் பணியாற்றினார். மூன்றாவது முறையாக 1952 ல் நடைபெற்ற தேர்தலில் மேலாண்மைச் சமூகத்தினரின் சதி நடவடிக்கையினால் தோல்வியைத்தழுவநேர்ந்தது. சாதிவெறியர்கள் க.மு.வை யும், சமூகத்தையும் அவமானப்படுத்தும் வகையில் ஆர்ப்பரித்தனர். இதனால் இருபகுதியி னருக்கு மிடையில் கலவரம் மூண்டது. இரத்தக்களரிகள் ஏற்பட்டன. மேலாதிக்க சக்திகளின் பக்கமே அரச படையினர் நின்றனர். இயல்பாகவே போர்க்குணமிக்க அல்லாய் வடக்கு மக்கள் கிளர்ந்தெழுந்து அடக்கு முறையை எதிர்கொண்டனர். பொலிசாருடனும் நேருக்குநேர் மோதியதால் அவர்கள் தரப்பிலும் சிலர் காயமுற்றனர். இறுதியில் பெருமளவில் பொலிசார்

குவிக்கப்பட்டு மக்களில் பலர் கைதுசெய்யப்பட்டனர். மறுநாள் க.மு தனது சகாக்கள் சிலருடன் பொலிஸ் நிலையம் சென்று சகலரையும் மீட்டு வந்தார் என்பது அல்வாய் வடக்கின் வீரஞ்செறிந்த வரலாறாகும். சாதி வெறியர் களுடனான இருபதுக்கு மேற்பட்டவழக்குகளை எதிர்கொள்ளவேண்டிய நிலமை அமரர் க.மு.வுக்கு இருந்தது. அக்காலத்தில் எமக்குச் சார்பாக எந்தவொரு தமிழ் சட்டத்தரணிகளும் வாதிட முன்வராதபோது, இடது சாரியான சி. தர்மகுலசிங்கம் (ஜெயம்) ஒருவர் மட்டுமே எமக்காக நீதிமன்றங்களில் ஏறி வாதிட்டார். என்பதை நன்றியுடன் நினைவு கூரவேண்டும். சமதர்மவாதி ஜெயத்தினால் ஆதரிக்கப்பட்ட எம்மவர்கள் பின்தாள் தர்மகுலசிங்கம், சமரக்கொடி, சமதர்மபாலன் என்ற பெயர்களை சூட்டி மகிழ்ந்தனர். என்பதும் மனதில் கொள்றளப்படவேண்டியதே. அல்வாய் வடக்கில் இடது சாரி அரசியல் கால் கொள்ள சி.தர்மகுலசிங்கத்தின் மீது மக்களுக்கிருந்த ஈர்ப்பும் விசுவாசமும் ஒரு காரணமாயிருந்தது.

கிராமசபைத்தேர்தலைத் தொடர்ந்து சம்பவித்த நேரடி மோதல்களில் தோல்விகண்ட நிலவுடமை ஆதிக்க சக்தியினர் மக்கள் மீது பொருளாதாரத் தடையை விதிக்க முற்பட்டனர். ஜீவனோபாயத் தொழில்களை மக்கள் இழக்கவேண்டியநிலை ஏற்பட்டது. இந்நிலையில் தொழில்களை இழந்த தனது மக்களுக்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு அமரர் க.மு. க்கு ஏற்பட்டது. இதனால் க.மு.வே முன் வந்து முல்லைத்தீவு, அலம்பில் , சிலாவத்தை, புதுக்குடியிருப்பு, கனராசன்குளம், வவுனியா, தம்பலகாமல் போன்ற வெளிமாவட்டங்களில் கள்ளுத் தவறணை களைக் குத்தகைக்கு எடுத்து சி. வேலுப்பிள்ளையிடம் அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பினை ஒப்படைத்தார். இதனால் பின்நாளில் சி. வேலுப்பிள்ளை அவர்கள் "குத்தகைகாரன்' என்ற சுட்டுப்பெயரைப்பெற்றார் என்பதுவும் குறிப்பிடத் தக்கது.

வடமராட்சியில் வாழ்ந்த தேவரையாளிச் சமூகத்தின் முன்னோடிகள் எனப்படுவோரிலிருந்து அமரர் க.மு.வை விலக்கி வைத்துப்பார்க்கக்கூடிய அம்சங்கள் உள்ளன.

குறிப்பாக போர்க்குணமுள்ளவராகவும், தேவையான போது வன் முறையை ஆதரிப்பவராகவும், மக்கள் களத்தில் நின்று வழிகாட்டுபவராகவும், பிரதேசவாத உணர்வற்றவராகவும் வாழ்ந்து காட்டியுள்ளார். இதனால் தன் பின்னால் ஒரு மக்கள் படையணியையே பின் பலமாகக் கொண்டிருந்தார். என்பதனையும் மனங்க கொள்ளவேண்டும். அமரர் க.மு சமூகப்போராட்ட வேளைகளில் உயிர் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகி வந்துள்ளார். இவ்வாறான அச்சுறுத்தல்களின் போது இ. இராசையா (இருப்பு) சி. மகாலிங்கம்(

நெருப்பு) சகோதரன் சின்னப் பொடி சின்னத்துரை, இ. கோவிந்தசாமி, கந்தசாமி போன்றோர் க.மு. வுக்கு மெய்ப்பாதுகாவலர்களாக இருந்து பாதுகாப்பை உறுதி செய்துள்ளனர்.

அமரர் க.மு வின் பொதுப்பணிகளுக்கு அவரது குடும்பத்தினரும் பக்கபலமாக இருந்துவந்துள்ளனர். மக்கள் பலத்துடன் நின்றவருக்கு சின்னப் பொடி (இளையதம்பி) கனகம்மா, போவிந்தசாமி(அப்பையா) தங்கம்மா, மணிமேகலை, சின்னப்பிள்ளை( பவா) ஆகியோரை உடன்பிறப்புகளாகவும், சி.வேலுப்பிள்ளை, ஆ.காசிநாதர், தம்பிராசா வித்துவான் ம. முருகேசு ஆசிரியர் ஆகியோரை நல்ல மைத்துணர்களாகவும் அமைந்தனர்.

1936ல் க.மு வினால் தாபிக்கப்பட்ட விக்கினேஸ்வரா வாசிகசாலை பெயர்மாற்றத்துக்குள்ளாகியது.1952 இல் நேரு சனசமூக நிலையம் என்ற பெயரில் குருக்கட்டுப் பிள்ளையார் ஆலயச் சூழலில் புதியகட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது, இதனை பிரபல அரசியல் வாதியும், பொதுவுடமைக் கட்சியின் தலைவருமான பீற்றர் கெனமன் திறந்து வைத்தார் என்பது குறிப்பிடத் தக்க விடயமாகும். இதுவே பின்னர் இளங்கோ சனசமூக நிலையம், முத்தமிழ் மன்றப்படிப்பகம் என்பதாயிற்று,

அமரர் க.மு.சமூக போராட்டங்களுடன்மட்டும் திருப்தி கொண்ட வரல்லர். மதத்தின் பேரில் தீண்டாமையை நியாயப்படுத்த முயன்றவர்களு டனும் போராட வேண்டிய நிலைமை அவருக்கிருந்தது. அன்று மேலாதிக்கப் பிழைப்பை நடாத்தவேண்டியிருந்தவர்களுக்கு சாதியும், மதமும் இன்றியமை யாதவையாக இருந்தன. 1953 இல் க.மு.சைவசமயத்திற்குள் ஒரு கலக்கத்தை ஏற்படுத்திய கலகக் காரனாகவும் தன்னை இனங்காட்டிக் கொண்டார். இது நியாயசிந்தை படைத்த சைவர்கள் மத்தியில் ஒரு சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு க.மு.வின் வாழ்வில்ஏற்பட்ட ஒரு சம்பவமே. பின்னணியாகிற்று. அல்வாயில் பிரசித்திபெற்ற கோவில் முத்துமாரியம்மன் கோவில் என்பது யாவரும் அறிந்தது. இங்கு பாரம் பரியமாக ஒன்பதாந் திருவிழா உபயகாரர்கள்அல்வாய் வடக்கில் வாழும் எம்மவர்களே, உபயகாரர்கள் திருவிழாவின்போது பூசைப் பொருட்களையும், பணத்தையும் நிர்வாகத்திட்டம் கையளித்துவிட்டு, கோவிலுக்கு வெறியே கைகட்டி வாய்பொத்தி நிற்பவர்களாக இருந்தனர். எம்மவர்கள் சுவாமியை நெருங்கவோ, கற்பூரச்சட்டி எடுக்கவோ முடியாதவர்களாக விலக்கியே வைக்கப்பட்டிருந்தனர். 1953 ம் ஆண்டு பெண்பக்தை ஒருவர் கற்பூரச்சட்டி எடுத்தபோது ஆலயத்தின் நிர்வாகியொருவர் அதனை தலையிலிருந்து தட்டி வீழ்த்திய சம்பவமொன்று நிகழ்ந்தது.

இச்சம்பவம் அமரர் க.மு.வை கொதித்தெழவைத்தது. அன்றிலிருந்து இக்கோவிலைத் தரிசனம் செய்வதில்லை என பிரதிக்ஞை எடுத்துக் கொண்டவர் தான் இறக்கும் வரை அக்கோவிலின் வாசலை நாடியதில்லை என்பதும் குறிப்பிடப்படவேண்டியதாகும்.

இச்சம்பவத்தின் எதிரொலியாக 27.05.1953ல் ஒரு துண்டுப்பிரசுரம் மூலம் தனது மக்களுக்கு பகிரங்க அழைப்பொன்றினை விடுத்தார். அது "எல்லோரும் வாருங்கள் புத்தமதமே எமக்குக் கதி அளிக்கும்" என அறை கூவலை விடுப்பதாக இருந்தது. அத்துடன் அமைதியடையாது, தமது இல்லத்துக்கும் "சித்தார்த்தரகம்" என்ற பெயரையும் சூட்டிக்கொண்டார். க.மு. வின் அழைப்பை ஏற்ற அல்வாய்வடக்கு மக்களின்சிலர் மஞ்சள் ஆடை அணிந்து புத்த சமயத்தை ஆதரிக்கவும் செய்தனர் என்பது வரலாறு.

இது இந்தியாவில் ஒடுக்கப்பட்டோரின் தலைவர் டாக்டர். க்ஷ.சு அம்பேத்கார் ஜாதியை ஒழிக்க மதமாற்றமே வழி என 1936ல் வெளியிட்ட கருத்து க.மு வையும் பாதித்தன் வெளிப்பாடெனலாம்.

இதனையறிந்த இந்துசமய பீடங்களும், சமயத் தலைவர்களும் விழிப்படைந்து அமரர். க.மு.வை அணுகி சமரசம் செய்யமுற்பட்டனர். இதன் விளைவாக 'சைவ ஹிரிஜனர் சங்கம்' என்பது அமைக்கப்பட்டது. இக்குறிப்பு இதனைத் தெளிவுபடுத்துகிறது. "எனவே, இந்த முயற்சியை தடுக்க வேண்டுமெனஅவர்கள் கருதி, தமிழ் நாட்டிலிருந்து வருகைதந்த திருவாசக மணி கே.எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், யாழ்மாநகரசபை மண்டபத்தில் கூட்டம் ஒன்றைக் கூட்டினர். இக்கூட்டத்தின் இறுதியில் "சைவ ஹரிஜனர் சங்கம்" என சைவர்களுக்குள் ஒடுக்கப்பட்டோருக்கென பிரத்தியே கமாக ஒரு சங்கத்தினை நிறுவிக்கொடுத்தார்கள். அச்சங்கத்தின் தலைவராக கவிஞர் மு. செ அவர்களும், செயலாளராக திரு க.மு அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். என்பது வேடிக்கையும், விசனமும் மிக்க ஒரு சம்பவம் எனலாம்"

(தெணியான், வடஅல்லை முருகேசனர் - பவளவிழா மலர்)

அல்வாய் வடக்கில் 1937ல் கருக்கொண்டிருந்த நிகழ்வொன்று அமரர் க.மு.வின் முன்முயற்சியினால் நிறைவடைகிறது. அதுவே, ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் உருவாக்கமாகும். இதற்கான சூழலும் கனிந்துவர அதற்கு க.மு செயல்வடிவம் கொடுத்தார்.

தேவரையாளிச் சைவவித்தியாசாலையில் தலைமை ஆசிரியராக இருந்த கவிஞர் மு.செல்லையா அவர்களுக்கும், நிர்வாகத்துக்குமிடையில்

கருத்துவேறுபாடு ஏற்பட்டு பாடசாலையை விட்டு வெளியேறவேண்டிய இக்கட்டுக்கு கவிஞர் மு.செ உள்ளானார். இது பற்றி சைவப்பெரியார் க. சூரன் தனது சுயசரிதையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"01.01.1954ல் பாடசாலையால் விலகும்படியும், அந்த இடத்துக்கு மு.சி சீனித்தம்பியை நியமித்திருக்கென்றும், விரும்பினால் உதவி ஆசிரியராக இருக்கலாமென்றும், தலைமை ஆசிரியர் மு.செ.க்கு மனேஜர் மூ.சி. நோட்டீஸ் அனுப்பியுள்ளார். இதற்குமுன் மு.செ.ஆசிரியர் தான் எழுதிக் கொடுத்த பொருத்தனைக்கடிதத்தை வாபஸ் வாங்குகிறேன் என்று மனேஜருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். அவர் அதனை ஏற்கமுடியாதென்று திருப்பி அனுப்பிவிட்டார். இவ்வளவில் இருவருக்கும் விஷயம் பெரும்சிக்கல் முத்தலாயின"
(கா.சூரன்-சூரன் சயசரிதை)

கவிஞர் மு. செல்லையா அவர்களுடன் மிகவும் ஆத்மார்த்தமான உறவைப்பேணியவர் அமரர். க.மு அவருக்கு ஒரு பாடசாலையை அமைத்துகொடுக்க வேண்டியவராக இருந்தார். அதற்கான செயல்திறனும், மக்கள் பலமும் அவ்வேளை க.மு விடமே இருந்தது. இதில் மு.செ யின் பங்கும் சிறப்பானது. இதுவே 07.10.1954 ல் அல்வாய் வடக்கில் ஸ்ரீலங்கா வித்தியா சாலை உருவானதன் பின்னணியாகும். அவ்வேளை பாடசாலைக் கான நிலத்தினை உரிமையாளர்கள் பெருமனத்துடன் வழங்கி உதவினர். இதற்கான மூலநிதி சமுகப்புனருத்தாரண ஐக்கிய சங்கத்தின் சேமிப்பில் இருந்த பணம் பயன்படுத்தப்பட்டது. அதன் செயலாளராக இருந்த திரு.மு.செல்லப்பாக்கியம் ஆசிரியர் சங்க அங்கத்தினரின் ஒப்புதலில் வழங்கி னார். கிராம மக்களது பணத்துடன் க.மு வின் சொந்தப்பணமும் இதற்கெனச் செலவிடப்பட்டது. அப்போது தொழிலின் நிமித்தம் யாழ்நகரில் வசித்த தனவந்தர்களான சி. சிவகுரு கா.ஏரம்பு ஆகியோரும் பெரும் உதவிகளைச் செய்தனர். அத்துடன் கிராம மக்களின் முழுமையான பங்களிப்பும், ஆதரவும் இருந்ததால் குறுகிய காலத்தினுள் புதிய கட்டிடம் நிறைவு பெற்றது.

அன்றைய சூழலில் இரட்டையர்களாகச் செயற்பட்ட க.மு.வும், கவிஞர் மு. செயும் பாடசாலைக்கு தேசிய நோக்கில் "ஸ்ரீலங்கா வித்தியாசாலை" என்ற பெயரைச் சூட்டவேண்டிய தேவை இருந்தது.

அன்று அல்வாய் வடக்கு மக்கள் சங்கக்கடையில் பொருட்களை வாங்குவதற்கு அல்வாய் முததுமாரி அம்மன் கோவில் சூழலில் அமைந்திருந்த அம்பிகா ஐக்கிய பண்டகசாலைக்கு போய்வருவருவது வழமை. ஏற்கனவே, கோவிலில் ஏற்பட்ட முறுகல் நிலைகாரணமாக

மேலாதிக்க சக்திகள் பல இன்னல்களை விளைவித்தனர். இது அல்லாய் வடக்கில் சங்கக்கடையொன்றை நிறுவவேண்டிய அவசியத்தினை அமரர் க.மு. க்கு உணர்த்திற்று. இந்நிலையில் அவர் குமுதெணியில் வசித்த நா. சீனித்தம்பி என்பவருடன் இணைந்து சங்கக் கடையொன்றை உருவாக்கினார். இக்கடை அல்வாய் வடக்கில் வயல் பசுபதி பரியாரியாரின் வீட்டில் இயங்கியது. இதனால் மக்கள் இலகுவாகப் பொருட்களைப் பெறமுடிந்தது. இதுவே பின்னர் அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா ப.நோ.கூ. சங்கக்கிளையாகப் பரிணமித்தது.

ஒரு சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளுக்குகிடையிலான போராட்டங்கள் தான் அச்சமூகத்தை அடுத்த கட்ட பாய்ச்சலுக்கு இட்டுச்செல்கின்றது என்ற யதார்த்தம் அல்வாய் வடக்கில் நிதர்சனமானது. இந்தப் பாய்ச்சலுக்கு வழிகாட்டியவர்களில் அமரர் க.மு. வின் பங்கு புறக்கணிக்கப்படமுடியாதது.

அகில இலங்கைச் சிறு பான்மைத் தமிழர் மகாசபையின் செயற்பாடுகளில் க.மு முக்கியசெயல் வினைஞராக இருந்துவந்துள்ளார் என்பதை மகாசபையின் ஆண்டுமலர்களை பார்க்கும் போது தெரியவருகின்றது. இம்மகாசபையின் 12வது மாநாடு வடமராட்சி தேவரையாளி இந்துக்கலூரியில் 1955ல் நடைபெற்றது. மாநாட்டின் செயலாளராக ஆ.ம செல்லத்துரை பங்குகொண்டார். அதில் க.மு. வும் முக்கிய செயற்பாட்டாளராக பங்கெடுத்தார்.

அடுத்த ஆண்டில் (1956) இலங்கைப் பாராளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறுகிறது. பருத்தித்துறைத் தொகுதியில் சமவுடமைக்கட்சி சார்பில் பொன் கந்தையா போட்டியிட்டார். இத்தேர்தலில் பிற்படுத்தப்பட்ட மக்களும், தேவரையாளிச் சமூக மூலவர்களும் பொன் கந்ததையாவையே ஆதரித்து நின்றனர். இது அவரின் வெற்றிக்கு வழிகோலியது.

அக்காலகட்டத்தில் மகாசபையினுள் இருகருத்தியல் சார்ந்தோர் இருந்தனர். ஒரு பிரிவினர் இடது சாரிகளாகவும், மறு பிரிவினர் தமிழரசுக் கட்சியை ஆதரிப்போராகவும் இருந்தனர். அமரர். க.மு. ஜி நல்லையா ஆ.ம. செல்லத்துரை, கவிஞர். மு.செல்லையா, சைவப்புலவர் சி.வல்லிபுரம் கணபதிநாதன், ஞானப்பிரகாசம் போன்றோர் தமிழரசுக்கட்சியின் சார்பினராக இருந்தனர்.

தேவரையாளிக் கல்விப் பாரம்பரியத்தின் வழிவந்தவர்கள் சைவநெறியிலும், காந்தியவழி முறையிலும நின்று சமூக விடுதலை பற்றிச் சிந்தித்தவர்கள். இதனால் அவர்கள் அரசியலில் மிதவாதப் போக்கினையுடையவர்களாக இருந்தனர் எனக் கூறுவதில் தவறில்லை.

மகாசபையில் செயற்படும்போதே க.மு தமிழரசுக்கட்சியின் பால் ஈர்க்கப்பட்டு அதன் தீவிர ஆதரவாளரானார். கட்சியின் உயர்மட்டத்தலைவர் களான தந்தை செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், அ.அமிர்தலிங்கம், இராஜவரோதயம், க.துரைரத்தினம், ஆகியோரின் நன்மதிப்பையும் பெற்றவராக விளங்கினர். இதனால் 1956ம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் அங்கத்தவராக நீண்டகாலம் பதவி வகித்தார்.

இக்காலத்தில் தமிழரசுக்கட்சி பிற்படுத்தப்பட்டோர் சார்பாக எடுத்த தீர்மானங்களுக்கும் காரணகர்த்தராக இருந்தவர் க.மு. அவர்களாவர்.

1957ல் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் 14வது மாநாடு யாழ் நகரசபை மண்டபத்தில் அமரர் க.மு. வின் தலைமையில் நடைபெற்றது. அன்றைய அரசின் சமூகசேவை உதவி அமைச்சர் எம். பி.டி சொய்சா அவர்களை சிறப்புவிருந்தினராக அழைக்கவும் ஏற்படாகியிருந்தது. தனிச் சிங்கள மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வேளை அது அமைச்சரின் வடபகுதி விஜயத்தைப் பகிஸ்கரிக்கவேண்டுமென தமிழரசுக்கட்சி கோரிக்கை விடுத்தது. இதனை மகாசபையில் க.மு. போன் றோர் ஆதரித்து நின்றனர். இதனால் மாநாடு குழப்பத்தில் முடிவடைய நேர்ந்தது. சமவுடமைவாதி பொன் கந்தையாவின் தேர்தல் வெற்றிமகா சபையில் இடது சாரிகளின் பலமதிகரிக்க ஏதுவானது. மகாசபையின் உபதலைவராக இருந்த க.மு அன்றே வெளியேறினார்.

இதன் பின்னர் க.மு, ஆ.ம. செல்லத்துரை, கணபதிநாதன் ஞானப்பிரகாசம் ஆகியோர் 'மக்கள் முன்னேற்றக் கழகம்' என்ற சங்கத்தினை உருவாக்கினர்.

தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகளில் பிரதான பங்காளியாக இருந்து கொண்டு, பிற்படுத்தப்பட்டோரின் உரிமைகளுக்காக உட்கட்சிப்போராட்டங் களையும் அமரர். க.மு. நடாத்தத்தவறவில்லை. ஆரம்பத்தில் இம்மக்களுக்கு செனட்சபை நியமனம் வழங்குவதாக உறுதியளித்து, பின்னர் கட்சி பின் வாங்கியபோது, சீற்றமடைந்த க.மு. "சிறுபான்மைத் தமிழருக்குக் கிடைத்த ஏமாற்றம்" என்ற தலைப்பில் கட்சிக்கெதிராகத் துண்டுப் பிரசுரம் வெளியிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"சிறுபான்மைத் தமிழச் சமூக மாணவர்களை அனுமதிக்காத பாடசாலைகளை அரசு அங்கீகரிக்கக்கூடாது" என ஐம்பதுகளில் சிறுபான் மைத்தமிழர் மகாசபையினர் குரல் எழுப்பினர். இதனால் தமிழசுக் கட்சியினர் 1955ல் மகாசபையுடன் ஒரு உடன்பாட்டை ஏற்படுத்திகொண்டனர். இந்த

முயற்சிக்குப் பின்னணியில் நின்றவர் க.மு. அவர்களே இதன் பயனாகவே தமிழரசுக் கட்சியினர் 'தீண்டாமை ஒழிப்பு மசோதா" வைப்பாராளுமன்றத்தில் கொண்டுவர வழியேற்பட்டது. இம்மசோதாவை N.Rஇராசவரோதயம் (திருமலை பா.உ) முன்மொழிய சி.வன்னியசிங்கம் (கோப்பாய் பா.உ) அவர்கள் வழிமொழிந்தார். சபையில் இட்து சாரிகளின் ஆதரவையும் பெற்று மசோதா ஏகமனதாக நிறைவேறியது.

தவிர, 1957ல் நடைபெற்ற செனட்சபைத்தேர்தலின் போது திரு ஜி.நல்லையா தமிழரசுக்கட்சியின் சார்பாக நியமிக்கப்பட்டார். இப்பதவியை அமரர். க.முவுக்கே வழங்க கு. வன்னியசிங்கம் விரும்பியபோதும் அதனைப் பெருந்தன்மையுடன் மறுத்து ஜி. நல்லையாவுக்குகிடைக்க வழி செய்தார்.

பிற்படுத்தப்பட்டோர் தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய அவர்களுக்கென தனியான தொகுதிகள் ஒதுக்கப்படல் வேண்டும் என்ற கருத்தில் க.மு. உறுதியாகவே நின்றார். தூரநோக்குப் பார்வையில் இம்மக்களது முன்னேற்றம் என்பது அவர்கள் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதன் மூலமே அடையக் கூடியதாக இருக்கும். இத்தகைய அரசியல் பலமே ஏனைய சமூகத்தவர் இ;சசமூகத்தின் ஆதரவை நாடுவதற்கும், எமது தேவைகளை அங்கீகரிக்கவும் கூடிய நிலைமையை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையை அமரர். க.மு. கொண்டிருந்தார். இதனால், இம்மக்களுக்கென தனியான கொகுதிகள் ஒதுக்கப்பட வேண்டுமென தமிழரசுக் கட்சிக்குள் இருந்து போராடி வந்துள்ளார். அத்துடன் இது குறித்து தோதல் தொகுதி நிர்ணயஆணைக்குழுமுன் தோன்றி சாட்சியமும் அளித்துள்ளார். அமரர். க.மு. வின் இந்நடவடிக்கைகள் இந்தியாவில் அம்பேத்காருக்கும், காந்தி தலைமையிலான இந்து மகா சபையினருக்கும் இடையில் 1932ல் ஏற்பட்ட" புனா ஒப்பந்தம்" என்ற வரலாற்று நிகழ்வை நினைவூட்டுகிறது.

இக்காலப்பகுதியில் அமரர் க.மு.வும், அவரது சகாக்களும் யாழ் நகரத்தில் பிரசித்திபெற்ற சைவ ஆலயங்களை சகல மக்களதும் வழிபாட்டுக் காகத் திறந்து விடுகின்ற பணியினைப் பக்குவமாக மேற்கொண்டார். இது பற்றிய குறிப்பு வருமாறு

"இந்தவேளையில் கவிஞர், சைவப்புலவர், ஆ.ம. செ என்பவர்களுடன் திரு.க. முருகேசு அவர்களும் இணைந்து நின்று 'அகில இலங்கைச் சைவசமய சமரச சங்கம்" என்ற தாபனத்தினை தோற்றுவிக்கின்றார்கள் இச் சங்கம் மேற்கொண்ட முயற்சியினால், திருவாளர்கள் உ. குமாரசாமி, ஸ்ரீகாந்தா, ஸ்ரீஸ்காந்தராசா ஸ்ரீ பத்மநாதன், சிவஞான சுந்தரம் ஆகிய பெரியயோர்கள் முன்னின்று 09.07.1957ல் நல்லூர் கந்தசாமி கோவில், வண்ணை சிவன்கோலில்,

வண்ணை வரதராஜப்பெருமாள் கோவில் ஆகிய யாழ் நகரத்து ஆலயங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் சென்று வழிபடுவதற்காக திறந்து விடப்பட்டன. தாழ்த்தப்பட்ட மக்கள் வரலாற்றில் உன்னதமாக இடம் பெற்ற இச்சம்பவம் தேவரையாளி சமூகத்தினால் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்துக்குப் பெற்றுக்கொடுக்கப்பெற்ற பெருவெற்றி திரு. க. மு. இந்தவெற்றியின் ஒரு பங்காளியாவார்"

(தெணியான், வட அல்வை முருகேசனார் -பவள விழாமலர்)

இக்காலப்பகுதியில் புத்தூர் கிராமத்தில் கல்வித்துறையில் பிற்படுத்தப் பட்ட சமூகத்தவர்களுக்கு பாகுபாடுகளும், புறக்கணிப்புக்களுமே தொடர்ந்தன. இந்துப்பாடசாலைகளில் காலடி வைக்கமுடியாத நிலைநிலவிய இந்த காலத்தில் மிசனரிப்பாடசாலையே இச்சமூகத்துப்பிள்ளைகளுக்கு சொற்ப அளவில் அனுமதி வழங்கின. அங்கும் சமத்துவம் என்பது எட்டாக் கனியாகவே இருந்தது. இந்நிலையில் இக்கிராமத்து முன்னோடிகள் தமது பிள்ளைகள் சுதந்திரமாகக் கல்வியைப் பெறுவதற்கு பாடசாலை ஒன்றின் அவசியத்தை உணரத்தலைப்பட்டனர். அல்வாய் வடக்கில் உருவான பாடசாலை பற்றி அறிந்து அவர்கள் க.மு வையும், கவிஞர் மு.செல்லைய வையும் அணுகினர். இக்கிராமத்தின் கல்வித்தேவையை புரிந்துகொண்ட க.மு. புத்தூரில் பாடசாலை நிறுவத்திடசங்கற்பம் பூண்டார். அவருக்கு பக்கத்துணை யாக இக்கிராமப் பெரியார்கள் துணை நின்றனர். இதன்பேறாக ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் 1957ல் உருவானது. அதன் முதல் அதிபராக க.மு வே பதவி ஏற்றார். 'ஹின்டு போட்' இராசரத்தினம் அவர்களது நிர்வாகத்தின் கீழ் உருவான இப்பாடசாலைக்கு அரசினர் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு க.மு.வும் ஊரவர்களும் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. கு.வன்னியசிங்கம் அவர்களின் உதவியை நாடினர். அவரும் அதனை 1959ல் நிறைவேற்றி வைத்தார்.

அமரர் க.மு புத்தூர் பாடசாலையில் அதிபராகப் பதவியேற்றதிலிருந்து அவ்வூரை வசிப்பிடமாக்கிக் கொண்டார். பாடசாலைக்கு அருகில் செல்லர் என்பவரது வீட்டில் குடியேறினார். க.மு. வுக்கு இருப்பிட வசதி செய்து கொடுத்ததில் வடிவேலு என்பவரும் குறிப்பிடத்தக்கவர். இவர்களுடன் அவ்வூர்ப் பெரியவர்களான இளையதம்பி, கந்தையா போன்றோரும் உறுதுணையாக இருந்து க.மு. க்கு உதவினர். அங்கு மக்களுடன் மக்களாக வாழ்ந்து கல்வி சமயம், கலை விளையாட்டு, நீதிச்சேவை, வள்ளன்மை எனப் பல்வேறு பரிணாமங்களில் தனது பணிகளை முன்னெடுத்தார். இதனால் புத்தூர் மக்களின் இதயங்களில் நிலையான இடத்தைப் பெற்றுச் சேவாதிலகம் எனப்போற்றப்பட்டார். இவரது பதவிக்காலத்தில் பாடசாலை துரித வளர்ச்சி கண்டது. அயல் கிராமங்களில் இருந்தும் பிள்ளைகள் கல்விகற்றுச் சென்றனர்.

பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களிலும் விடுமுறை தினங்களிலும், இரவுவேளைகளிலும் மேலதிக வகுப்புக்களை ஒழுங்கமைத்து மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு துணைநின்றார்.

அமரர் க.மு. வின் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட மார்க்கண்டேயர் என்ற நாடகம் பாடசாலைக்கு பெருமையைத் தேடிக்கொடுத்தது. பாடசாலைகளின் மட்டத்திலும், வட்டார, மாவட்ட மட்டங்களிலும் முதல் பரிசுக்கான தெரிவினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. அடுத்து பெண்பிள்ளைகளை மட்டும் நடிக்க வைத்துச்சாதனை படைத்தார். க.மு. வின் சகுந்தலை என்ற இந்த நாடகமும் மக்களின் பாராட்டு தலைப் பெற்று நாடக உலகில் அவருக்கு தனி முத்திரையைப் பதித்தது.

அமரர் க.மு மாணவர்களின் உடல், உள விருத்திக்கு முக்கியத்துவம் வழங்கும் தன்மையைக் கொண்டவர். இதனால் பாடசாலையில் விளையாட்டுத் துறையின் வளர்ச்சியிலும் கவனம் எடுத்துள்ளார். புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகத்தினர் நடாத்திய உதைபந்தாட்டப் போட்டிக்கு தனது ஆத்ம நண்பனும், புகழ் பூத்த கவிஞருமான மு.செல்லையா அவர்களின் ஞாபகார்த்தமாக சுற்றுக்கேடயத்தை வழங்கித்தனது நண்பனைக் கௌரவப் படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தனது இருப்பிடமாகக் கொண்ட புத்தூர்க்கிராமத்தில் மக்களிடையே ஆன்மீகப் பண்பினை மேம்படுத்துவதிலும க.மு முன்னிற்றார். ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வளர்ச்சியிலும தன்னை இணைத்துக் கொண்டு திருப்பணிச்சபை யொன்றை அமைத்து அதன் செயலாளராக இருந்து தனது பங்களிப்பினை வழங்கினார். அம்பாளின் திருப்பணி வேலைகளில் தானும் கல், மண் சுமந்து அதனை நிறைவேற்றி வைத்தார்.

புத்தூர் மக்களிடையே எழுந்த சிறுசிறு பிணக்குகளை சுமுகமாகத் தீர்த்து வைக்கும் நோக்கில் கலையகம் ச.ச.நிலையத்தினரால் அமைக்கப்பட்ட இணக்க மன்றத்தின் செயலாளராகவும் க.மு. நீதிச் சேவையாற்றி யுள்ளார். அவ்வேளை இணக்கமன்றுக்கு வந்த பிரச்சனைகளை நுட்பமாக அணுகி இரு பகுதியினரையும் பாதிக்காத வகையில் சுமுகத் தீர்வினை வழங்கினார். இதை விட அரசாங்கத்தினால் புத்தூர்பகுதிக்கென உருவாக்கப்பட்ட இணக்க மன்றிலும் உறுப்பினராக இருந்து தனது பணினை நிறைவாகச் செய்துள்ளார்.

அமரர் க.மு வின் பல்துறை சார்ந்த பணிகளை கௌரவிக்கும் வகையில் 1982ல் ஆண்டு கலையாக்கம் சனசமூக நிலையத்தினர்

"சேவாதிலகம்" எனும் பட்டத்தினை வழங்கி மகிழ்ந்தனரென்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

அமரர் க.மு போன்ற சமூக முன்னோடிகள் தமது சமூகத்தவரின் வழிபாட்டுக்காக பூட்டியிருந்த கோவில்களை திறந்து விடுவதற்குப் போராடியது போல பல பாடசாலைகளின் கதவுகளையும் திறக்க வேண்டியவர்களாக இருந்துள்ளனர்.

"அந்தக் காலத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் கதவுகள் கோயில் கதவுகளைப் போல தாழ்த்தப்பட்ட சமூகமாணவிகள் உள்ளே புகாத வண்ணம் மூடிக்கிடந்தது. அந்தக்கதவையும் திறந்து வைப்பதற்கு திரு.க. முருகேசு அவர்கள் உள்ளம் கொண்டார். அப்பொழுது அரசினர் பகிரங்கப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஓர் ஆண்டுகாலம் மாத்திரம் மகளுக்கு இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்திலும் சமூகமேம்பாடு ஒன்றினையே தமது நோக்கமாகக் கொண்டு தமது மகளை வடமராட்சி இந்து மகளீர் கல்லூரிக்குக் கொண்டு வந்து சேர்ந்ததன் மூலம் அந்தக்கதவையும் திறந்து வைத்தார்"
(தெணியான், வடஅல்வை முருகேசனார் - பவளவிழா மலர்)

அந்த வகையில் அக்காலத்தில் சாதிவரன்முறையைக் கட்டிக்காப்பதில் மிகவும் கண்டிப்புடன இயங்கிய பாடசாலை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி என்பதை யாவரும் அறிவர். மிகுந்த பிரயத்தனத்தின் மத்தியில் க.மு தனது மூத்தமகன் கந்தவரோதயனை இக்கல்லூரியில் சேர்த்ததன்மூலம் இதன் கதவையும் திறந்து வைத்தார்.

இக்கல்லூரியை அரசு பொறுபேற்று பதினைந்து வருடங்களின் பின்பே இச்சமூகப்பிள்ளைகளுக்குக்காக கதவுகள் திறக்கப்பட்டன என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்

1960ல் பாராளுமன்றத் தேர்தல் வந்தபோது அமரர் க.மு. தமிழரசுக் கட்சியின் வெற்றிக்கு அயராது உழைத்தார். பருத்தித்துறைத் தொகுதியில் கட்சியின் வேட்பாளராக நின்ற திரு. க.துரைரத்தினம் அவர்களை ஆதரித்தது டன் அல்வாய் வடக்கு மக்களின் முழுமையான ஆதரவினையும் பெற்றுக் கொடுத்தார். அத்தேர்தலில் க. துரைரத்தினத்திற்கான கட்டுப் பணத்தினை அல்வாய் வடக்கு மக்களின் சார்பாக திரு. வே. பாலசண்முகம் அவர்கள் கட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

1961ல் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம் அல்வாய் வடக்கிலும் ஒரு எழுச்சியை ஏற்படுத்தத் தவறவில்லை. யாழ்ப்பாணக்

கச்சேரிக்கு முன்பதாக நடைபெற்ற இப்போராட்டத்தில் கலந்து கொள்ள அல்வாய் வடக்கு மக்ளையும் அணிதிரட்டி கலந்து கொள்ள வைத்தவர் க.மு. அன்று அல்வாய் வடக்குத் தகனைப்பெருந் தெருவில்மண் அளைந்து விளையாடுகின்ற என் போன்ற சிறுவர்கள் மத்தியிலும்,

"தூக்குமேடை பஞ்சு மெத்தை"
"துப்பாக்கிக் குண்டுக்கு அஞ்சமாட்டோம்"
"போடு புள்ளி வீட்டுக்கு நேரே"
"எங்கள் இரத்தினம், துரை இரத்தனம்"

போன்ற கோஷங்கள் பிரசித்தமானவையாக இருந்தன. சிறுவர்கள் நாம் இரு பிரிவாக நின்று தேர்தல் நடாத்தி விளையாடியதும் நினைவில் உள்ளது. இது அன்று இப்பகுதி தமிழரசுக்கட்சி சார்பான ஒரு அரசியல் புறச்சூழலுக்கு சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஆட்பட்டிருந்தனர் என்பதை உறுதி செய்கின்றது. இதற்கான சூத்திரதாரியாக இருந்தவர் அமரா க.மு. வே. பின்பு இந்த அரசியல் புறச்சூழலில் இடதுசாரி அரசியலும் உள்வாங்கிக் கொள்ளப் பட்டது என்பதையும் மனங்கொள்ளவேண்டும்.

பின்நாளில் தமிழரசுக் கட்சியினர் நடாத்திய 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டத்திலும் அவரது பங்களிப்பு இருந்துள்ளது. இப்போராட்டத்தில் ஈடுபட்ட சி. தங்கத்துரை (க.மு. வின் வளர்ப்புமகன்) கைது செய்யப்பட்டு 14 நாட்கள் தடுப்புக்காவிலில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அமரர் க.மு தமிழரசட்கக்கட்சியின் மாநாடு மட்டக்களப்பு கல்முனையில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பிதாவின் தொழிலைக் கேட்பது நிறுத்தப் படவேண்டுமென்பதை வன்மையாக வலியுறுத்தி நின்றார்.

கட்சித் தலைவர்களுள் திருகோணமலைப் பிரதிநிதி N.R இராஜ வரோதயத்தினால் கவரப்பட்ட க.மு தனது புதல்வர்களுக்கு கந்தவரோதயன், இராஜவரோதயன், இந்திரோதயன் எனப் பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தார் என்பதுஅவரது கட்சிப்பற்று தலை எடுத்துக்காட்டுகின்றது.

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் வளர்ச்சியில் கவிஞர் மு. செல்லையாவுக்கு முதன்மையான இடமுண்டு தனது அயராத உழைப்பினை உரமாக்கி பாடசாலையை மேன்நிலைக்குக் கொண்டுவந்தவர். அவர். 1968ல் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். இவரது காலத்தில் கடமை புரிந்த தொண்டைமானாறு கிருஷ்ணபிள்ளை ஆசிரியர், மாறாம்புலம் கணேசமூர்த்தி ஆசிரியர். மு. செல்வப்பாக்கியம் ஆசிரியர், நாயன்மார்க்கட்டு வ. இராசமணி

ஆசிரியர், செல்வி சிவபாக்கியம் ஆசிரியை, வித்துவான் ம.முருகேசு ஆசிரியர் ஆகியோரது சேவை விதந்து கூறத்தக்கது.

கவிஞர் மு. செ. ஓய்வு பெற பாடசாலையின் அதிபர் பதவியினை அமரர் க.மு. ஏற்கவேண்டியவரானார். தனது பதவிக்காலத்தில் பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணாயிருந்தார். இக்காலகட்டத்தில் வடபகுதியில் பௌத்த சங்கம் ஒன்று தாபிதமானது. பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியில் மதமாற்றம் செய்விக்கும் பெருமுயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. வடஇலங்கை பௌத்தசங்கம் என்ற இச்சங்கத்தின் தலைவராக திரு. வைரமுத்து இருந்தார். அவரது முயற்சியில் ஸ்ரீ நாரதாவித்தியாலயம் கரவெட்டி, பன்ஞாசீக வித்தியாலயம் புத்தூர், ஸ்ரீ சேமகே வித்தியாலயம் அல்வாய், ஸ்ரீ விபசீ வித்தியாலயம் அச்சுவேலி ஆகிய பௌத்த பாடசாலைகள் உருவாகின. மதமாற்றம் எமது பிரச்சனைகளுக்குத் தீர்வாகாது என்பதில் அமரர். க.மு. அவ்வேளை உறுதியாக இருந்தார். இடது சாரிக்கட்சிகளும் இந்நிலைப் பாட்டிலேயே இருந்தன. இச்செயலைக்கண்டித்ததன் விளைவாக க.மு அரசினால் சில இடையூறுகளைச் சந்திக்கவேண்டியிருந்தது. இதனால் அவரை அதிபர் சேவையில் இருந்து ஓராண்டுக்கு முன்பதாக 1969ல் ஓய்வு பெற வேண்டியதாயிற்று.

அமரர் க.மு. தனது குடும்ப வாழ்விலும் சகல பாக்கியங்களையும் பெற்றவராக வாழ்ந்து சென்றார். தனது குடுப்த்தவர்களின் முன்னேற்றத்திலும் அக்கறையாயிருந்தார்.

திருமதி. இந்திராவதி. சந்தரம் பிள்ளை (லண்டன்) கந்தவரோதயன் (சுவிஸ்) இரஜவரோதபன் (ஆசிரியர்) இந்திரோதயன்(லண்டன்) ஆகியோரது தந்தையாகவும் சி. தங்கத்துரை J.P (ஓய்வுபெற்ற சிரேஸ்ட வ.பி.போ.ச சாலைப்பரிசோதகர்) திருமதி இந்திராதேவி முருகதாஸ் ஆகியோரது வளர்ப்புத் தந்தையாகவுமிருந்து அவர்களது வாழ்வு சிறப்புற அமைய வழிகாட்டியவர். ஒருகாலத்தில் கொழும்பில் பிரபல்யம் பெற்றிருந்த கணக்கியல் விரிவுரையாளர் வே. கருணாநிதி அவர்கள் க. மு. வின் சொந்த மருமகனாவார். இவரையும் தன்னுடன் வைத்து கல்வி புகட்டி ஆளாக்கினார்.

ஈழத்தில் கவிஞர், விரிவுரையாளர், கலாசாலை அதிபர், நாடகக் கலாநிதி எனப்பல துறைகளிலும நன்கு அறியப்பட்டவரான கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை அவர்களையும் ஆசிரியர் ஆ. முருகதாஸ் அவர்களையும் மருமகன்மாராகப் பெற்ற பெருமைக்குரியவர்.

வெளிநாடுகளிலிருந்த அமரரின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், அவர் உயிருடனிருந்த வேளை, அவ்வப்போது நேரில் வந்து பார்த்து அமரரின் அன்பில் திளைத்து உறவாடிச் செல்வது வழமையாக இருந்தது.

அமரர் தான் ஓய்வுபெற்ற காலத்தில் சமூகத்தொண்டுகள், இறைத் தொண்டுகளிலில் ஈடுபட்டுவந்ததுடன், இளையதலைமுறையினருக்கு நல்ல ஆலோசகராக இருந்து வழிகாட்டிவந்துள்ளார். தான் வாழ்ந்த கிராமங்களில் நடைபெற்ற பொது விழாக்கள், வைபவங்களில் அவரது பிரசன்னம் இல்லாமலிருந்ததில்லை. அவரது வருகையால் நிகழ்வுகள் சிறப்படைந்தன. தனது தள்ளாத வயதிலும் நல்ல விவசாயியாக மண்வெட்டிபிடித்து நிலத்தைப் பண்படுத்திப் பயிர்செய்து வந்தவர். வீட்டுக்கு வருவோரை அகமகிழ்ந்து வரவேற்று விருந்தோம்பல் செய்து உபசரிப்பது அவரின் உயர்ந்த பண்பாக இருந்தது.

அமரர் க.மு.வுக்கு உள்ள தனிச்சிறப்பு யாதெனில் உயிர்வாழும்போதே மக்களால் பாராட்டப்பட்டவர் என்பதே. தான் வாழ்ந்த இரு கிராமங்களிலும் மக்களால் விழா எடுத்து கௌரவிக்கப்பட்டிருக்கிறார். அல்வாய் வடக்கு மக்கள் அவரது பன்முகப்பட்ட பணிகளை மதித்து 1993இல் பவளவிழாவினை விமரிசையாக எடுத்தனர். இது வரலாறு காணாத விழாவாக அமைந்தது. அமரரை நெகிழ்வடைய வைத்தது. இவ்விழாவில் "பவளவிழா" மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. அது அமரர் குறித்த காத்திரமான பதிவுகளைக் கொண்ட நூல் ஆகும்.

அமரர் க.மு தான் வாழ்ந்த சமூகத்தின் நிலை மாற்றத்தின் அனைத்துப் பண்புகளையும் தழுவிய அணுகுமுறையை முன்னெடுத்தார். அவரது பன்முகப்பாங்கான வாழ்வின் சாராம்சங்களை நோக்கின் பல தரிசனங்கள் எம்முன்னே விரிந்து கிடக்கின்றன.

* கல்வியில் புறக்கணிப்புக்குள்ளான சமூகத்தில் கல்விக்கான வாய்ப்புக்களை உருவாக்கி கல்விப்பங்குபற்றவைக்க தூண்டியமை.
* சமூக விடுதலைக்கு கல்வியின் அவசியத்தை உணர்த்தி முறைசார் கல்வி முறைசாராக் கல்வி நிறுவனங்களை நிறுவி, ஆசிரியப் பரம்பரையின் உருவாக்கத்துக்கு உதவியமை.
* சாதியக் கட்டமைப்பின் வழிவந்த பாரம்பரிய பொருளாதார முறைமையின் கட்டுறுக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக மார்க்கங்களைக் காட்டியமை.

* தமிழத் தேசிய அரசியல் நீரோட்ட இணைவின் ஊடாக பிற்படுத்தப்பட்டோருக்கு அரசியல் விடுதலை பெற்றுக்கொடுக்க முனைந்தமை.
* சமய,பண்பாட்டு, கலாசார விழுமியங்களின் பால் ஆசாரநிலை நின்று தனது சமுகத்துக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்க விளைந்தமை.
* தான் வாழ்ந்த இடங்களில் 'வாததியார்' என்ற பதத்துக்கு ஏக உரித்துடையவராகவும், அங்கீகாரமுடையவராகவும் வாழ்ந்தமை.

மொத்தத்தில் அமரர் கந்தப்பு முரகேசு வாத்தியாரின் வாழ்வு குன்றா உழைப்பும், குறையா முயற்சியும் என்றும் சாதிக்கும் என்ற வாக்கினை எமக்கு நிதர்சனப்படுத்தி நிற்கின்றது.

# 2

# தமிழீழத்தின் அம்பேத்கார் முதல்வர் முருகேசனார்

மா.க.ஈழவேந்தன்,
நாடாளுமன்ற உறுப்பினர்.

சாதிவெறியை சாடியவராக சமூகப் பணியாளராக தான் தோன்றிய குலம் கல்வியில் உயர்ந்து விளங்கப் பணியாற்றியவர் நம் கந்தமுருகேசனாராவார். இவையனைத்திற்கும் மேலாக தந்தை செல்வாவின் தலைமையில் இயங்கிய தமிழரசுக்கட்சியின் முக்கிய தொண்டனாக, தலைவராக விளங்கிய பெருமை இவரையே சாரும். ஒருவர் ஒரு துறையில் துலங்குவது எளிது. பல்துறையில் துலங்குவது கடினம். ஆனால் பல்துறை வல்லுநராக தன் ஆளுமையை நிலைநாட்டியவர் நம் கந்த முருகேசனாராவார். இவர் 1917ஆம் ஆண்டு தேவரையாளி இந்துக்கல்லூரியில் பயின்றவர். இவரின் சிந்தனை வளத்திற்கு தேவரையாளி இந்துக்கல்லூரியின் பங்களிப்பு பெரிதாகும். உருசியாவில் புரட்சி ஏற்பட்ட ஆண்டு 1917ஆம் ஆண்டாகும். இப்புரட்சியை அக்டோபர் புரட்சி என்று கூறுவர். இவ்வாண்டில்தான் இக்கல்லூரி தொடக்கப்பட்டது என்பது இங்கு நினைவுகொள்ளத்தக்கது. பள்ளர் சமூகத்தை பாதுகாக்க இப்பள்ளியை தொடக்கி வைத்தவர் திரு.கா.சூரன் அவர்கள். அவருடைய பணி தனித்து அராய்வதற்குரியது.

26-11-1910 தகனைகந்தப்பு அவர்களுக்கும் மயிலம்மை அவர்களுக்கும் மகனாகத் தோன்றிய இவர் நிறைவாழ்வு வாழ்ந்து தனது 95ஆவது அகவையில் 02-01-2005இல் தனது வாழ்வை இனிது முடித்துக்கொண்டார். சமுதாயப் புரட்சி செய்த முருகேசனாரின் தோற்றம் 26-11-1910 இல் அமைய தமிழினத்தின் விடிவெள்ளியாக விளங்கும் பிரபாகரனுடைய தோற்றம் 26-11-1954 இல் அமைந்துள்ளது. இங்கு ஒப்புநோக்கி மகிழ்தற்குரியது. 95 ஆண்டுகள் இம்மண்ணில் இவர் சீரோடும்

சிறப்போடும் வாழ்ந்துள்ளார். இவர் மேலும் 5 ஆண்டுகள் வாழ்ந்து நூறு ஆண்டுகளை நிறைவு செய்திருப்பின் எம்மவர் மகிழ்வுற்று இருப்பர். அத்துடன் எம் தமிழ்ச் சமுதாயமும் பெரும் பயனை அடைந்திருக்கும். எவ்வளவுதான் அறிவியல் வளர்ச்சி உலகில் ஏற்பட்டிருந்தாலும் நாம் எவ்வளவு காலம் இம்மண்ணில் வாழப்போகின்றோம் என்பது கேள்விக்குரியதே. எனவேதான் 95 ஆண்டுகள் வாழ்ந்தது போதும் நீ என்னிடம் மீண்டும் வருக என்ற எம் இறைவன் கட்டளைக்கமைய அவர் நூற்றாண்டை அடைவதற்கு 5 ஆண்டுகள் இருந்த நிலையில் எம்மை விட்டு அவர் பிரிந்துள்ளார். அவர் பிரிவு எமக்கு துயரை தரினும் இப்பெருமகன் எம்மிடையே இவ்வளவு காலமும் வாழ்வதற்கு கொடுத்து வைத்தவர்கள் நாம். இப்பெருமகன் இவ்வளவு காலமும் எம்மிடையே வாழ்வதற்கு துணைநின்ற இறைவனுக்கு நன்றியை தெரிவித்து அவர் இன்னுயிர் இறையோடு இரண்டறக் கலந்திருக்க இறைஞ்சி நிற்போமாக.

**சாதிவெறியைச் சாடிய சான்றோன்**

இக்கட்டுரையாளருக்கு சாதிவெறியுமில்லை. சமய வெறியுமில்லை. சமுதாய நலனை மட்டுமே எண்ணி பணிபுரிபவன் யான். ஆனால் இவருடைய காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் சாதி வெறி, புரையோடிய புண்ணாக விளங்கியதென்பதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். இவர் தோன்றிய காலத்தில் சாதி வெறி தலைதூக்கித் தாண்டவமாடியது. பண்டைத் தமிழ் இலக்கியம் பெரிதும் உவந்து போற்றும் பள்ளுப்பாட்டு, பள்ளு இலக்கியம் ஆகியவற்றிற்கு உரிய வகுப்பை சேர்ந்தவர் இவர். இந்த வகுப்பை சார்ந்தவர்களைத் தாழ்த்திக் கூறுவதோ, ஒதுக்கி வைப்பதோ மன்னிக்க முடியாத செயலாகும்.

எனினும் எளிதில் விளக்கமுடியாத காரணங்களால் எம் தமிழ்ச் சமுதாயம் சாதிவெறிக்கு அடிமையாகி தமக்குள் முட்டி மோதிய வரலாறு இருந்ததை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும். 7ஆம் நூற்றாண்டு எழுச்சி பெற்ற காலம் என்று எம் பக்தி இலக்கியம் பறைசாற்றும். அண்ணல் காந்தியின் முன்னோடியாக அறவழிப் போராட்டத்தை நடாத்தியவர் நம் அப்பரடிகள். அவர் தம் பாடல்களில் ஏனைய நாயன்மார்களை மிஞ்சுகின்ற அளவிற்கு சாதி வெறியைச் சாடியுள்ளார். சாத்திரம் பல பேசும் சழுக்கர்கால் கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர் என்று இடித்துரைத்த இப்பெருமகன் சங்கநிதி,

பதுமநிதி என்ற தன் பாடலில் "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று அன்பிற்கடிமை இறைவன் என்பதை இனிது எடுத்துக் காட்டியுள்ளார்.

"கண்ணப்பர் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என்னப்பன் என்னையன் என்னையும் ஆட்கொண்டார்" என்று வேட்டுவன் கண்ணப்பரின் ஈடிணையற்ற அன்பிற்கு அடிபணிந்து பேசுகின்ற பார்ப்பன வகுப்பைச் சார்ந்த மாணிக்கவாசகரின் மொழி எம் சமுதாயத்தில் சாதி வெறி தலைதூக்கக் கூடாதென்பதை இனிது எடுத்தியம்புகின்றது. இதே மணிவாசகப் பெருந்தகை "சாதி குலம் பிறப்பென்னுஞ் சுழிபட்டுத் தடுமாறும் ஆதமிலி நாயேனை அல்லல் அறுத்தாட்கொண்ட இறையோனை" கெஞ்சிக் கேட்கின்ற திருவாசக சொற்றொடரையும் நாம் நினைவு கொள்வோமாக.

**வடலூரார் தொடங்கி நாமக்கல் கவிஞர் வரை**

பின்பு நீண்ட இடைவெளிக்குப் பின் தமிழகத்தில் தலைதூக்கிய சாதிவெறியைச் சாடுகின்ற பாடல்களாக வடலூர் வள்ளலாரின் பாடல்கள் அமைகின்றன. இதனையடுத்து அனைத்து கவிஞர்களையும் மிஞ்சுகின்ற அளவிற்கு பாட்டுக்கொரு புலவன் பாரதி 'சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" என்றும் கூறியதோடு நிறைவடையாது " இங்குள்ள பறையர்க்கும் பள்ளர்க்கும் விடுதலை" என்று பாடி தமிழ்ச் சமுதாயத்தில் மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியதை வரலாறு சாற்றி நிற்கும். இவரின் தாசன் பாரதிதாசனோ தமிழினத்தைப் பீடித்துள்ள சாதி நீக்கப்படின் தமிழரின் பாதிச் சிக்கல் தானாக தீர்ந்து விடுமென்று பாடியுள்ளார். 'பார்ப்பானை ஐயனென்ற காலமும் போச்சே' என்று பாரதி பாடியதனால்த்தான் பாரதியின் தாசனாக பாரதிதாசன் விளங்கினார்.

நம் காந்தியக் கவிஞர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களோ

"தீண்டாமை எனும் தீய வழக்கம் தீரத்தொலைந்திட நாளாச்சு
இந்த வழக்கம் நாளுக்குநாளாய் இந்து மதத்தினை வெட்டுது வாளாய்
நிந்தை மிகுந்து அழிந்திடும் முன்னே நீக்கிட யாரும் வந்திடும் இன்னே" என்ற பாடலில் தீண்டாமையின் பேயாட்டம் இந்து மதத்தினை சீரழிக்கிறது எனப் பாடியுள்ளார். நாம் மேலும் ஒருபடி சென்று தீண்டாமை எனும் தீய பேய் இந்து

மதத்தினை மட்டுமல்ல செந்தமிழ் இனத்தையும் வேரோடு சாய்க்கும் நோயாக விளங்குகிறதென்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இன்று தமிழரிடையே சாதி வெறியோ, மதவெறியோ பெரிதும் தலைதூக்காது மங்கி மறைவது வரவேற்கத்தக்க நிகழ்ச்சியாகும். எனினும் அங்கொன்றும் இங்கொன்றுமாக இவ்வெறியாட்டம் சில இடங்களில் நடைபெறுவதை நாம் மறுப்பதற்கில்லை. தமிழீழவிடுதலைப்புலிகளின் புரட்சிகர சிந்தனை இத்தகைய வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ள தென்பதை நடுநிலையாளர் ஏற்றேயாவர்.

**படிப்பில் முன்னேற முருகேசனார் எதிர்நோக்கிய தடை**

ஆனால் நம் கந்த முருகேசனார் தோன்றிய காலத்தில் தடித்த சாதி வெறியினரால் இவரின் வகுப்பினர் ஒதுக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட நிகழ்ச்சிகளை நாம் மறுப்பதற்கில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பு எனக் கூறப்படுவோர் கோயில் கும்பிட முடியாத நிலை தேநீர்க்கடைகளில் தேநீர் அருந்த முடியாத நிலை இவையனைத்திற்கும் மேலாகப் பள்ளிக்கூடம் சென்று பயிலமுடியாத கசப்பான நிலை அன்று நிலவியதை நாம் வெட்கத்தை விட்டு ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

கல்வி பயின்று முன்னேறிய திரு.முருகேசனாருடைய வாழ்க்கையில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சென்று பயில முடியாத அளவிற்கு படித்தவர் என்று கூறப்படுபவரிடம் சாதிவெறி தலைதூக்கியிருந்ததை இவரது வாழ்க்கை வரலாறு எடுத்துக்காட்டுகிறது. " ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமூலரது திருமந்திரத்தை அறியாத ஆசிரியர்கள் அன்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இருந்தனர் என்பது எமக்கு வியப்பை தருவதாக உள்ளது. கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிலமுடியாத நிலையில் இருந்த இவரை தென்னிந்திய திருச்சபை அணைத்து, ஆளாக்கியதை வரலாறு குறித்துச் செல்கின்றது.

இவருக்கு பயிலும் வாய்ப்பினை வழங்கிய தென்னிந்தியத் திருச்சபை இவரை மதம்மாற்ற முயலவில்லை. இவரும் அந்த மாயவலையில் சிக்கவில்லை. இது தென்னிந்திய திருச்சபைக்கும் முருகேசனாருக்கும் சிறப்புச் சேர்க்கின்ற நிகழ்ச்சியாகும்.

**கல்விக் கண்ணைத்திறந்தவர்**

அடக்கி ஒடுக்கப்பட்ட தம் சமுதாயத்திற்கு வாழ்வு கொடுப்பதற்காகவே இவர் 1954இல் அல்வாய் சிறிலங்கா வித்தியாலயம், 1957இல் புத்தூர் சிறிவிஷ்ணு வித்தியாலயம் என்பனவற்றையும் தோற்றுவித்தார். அத்தோடு இக்கல்லூரியில் முதல்வராகவும் இவர் பணியாற்றியது இங்கு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

**கலையுணர்வு படைத்த முருகேசனார்**

இதுவரையில் இவரின் சமுதாயப் பணிபற்றி நாம் விளக்கியுள்ளோம். ஆனால் இவருக்கு கலைகளிலும் ஈடுபாடு இருந்தது. நாடகத்துறையில் இவருக்கிருந்த நாட்டம் மிகப் பெரிது. வைரமுத்து அவர்களை நாடகத்துறையில் புகழ்பெற்றவராக மாற்றிய பெருமை இவரையே சாரும். திரு.வைரமுத்து அவர்களின் வளர்ப்புத்தந்தை எனவும் இவரைப் பலர் கூறுவர்.

இவையனைத்திற்கும் மேலாக தம் சமுதாயம் உயர்சாதி மக்களினால் அடக்கி ஒடுக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்ட நிலையிலும் அவர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறவில்லை. இவர் வாழ்ந்த பகுதிகளில் புத்தமத பள்ளிகளும் தோற்றுவிக்கப்பட்டு இவரின் சமூகத்தை திசைதிருப்ப முயன்றபோதும் சிவனெறிப்பற்றில் உறுதியுடன் இருந்தார். அத்தோடு அறவழியில், உயர்ந்த சாதியினரிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தினார்.

**தமிழரசுக் கட்சியின் தூண்**

இவையனைத்திற்கும் மேலாக இவரது அரசியல் விழிப்புணர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இலங்கை தமிழரசுக் கட்சியின் தூணாக விளங்கியவர் முருகேசனார். மறைந்த தந்தை செல்வா, வாழ்வகத்தை காத்த வன்னியசிங்கம், திருமலை தந்த இராஜவரோதயம் அவர்கள் இவரது நெருங்கிய நண்பர்களாக விளங்கினர். மேற்குறித்த இவர்களின் துணைகொண்டு தாழ்த்தப்பட்ட சமுதாயம் தலைதூக்குகின்ற முறையில் சாதி ஒழிப்பு மசோதாக்களை நாடாளுமன்றில் நிறைவேற்ற பக்கபலமாக விளங்கியவர் இவர். மூதவை உறுப்பினர் பதவி இவரை நாடிவந்த போதும் அதனை வேண்டாமென்று ஒதுக்கி மற்றைய தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த திரு. நல்லையா அவர்களை மூதவை உறுப்பினராக்க பெருமுயற்சி எடுத்து வெற்றியும் கண்டவர். நான் பெரிது அல்ல. நாம் பெரிது என்ற கொள்கைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் இவர்.

**58 இல் சிறி எதிர்ப்பு**

1958 இல் "நண்டெழுத்து வேண்டாம் நமக்கு" என்று தமிழரசுக் கட்சி சிறி எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தியபோது, திரு.முருகேசனாரும், அவரின் மகன் தங்கத்துரை உட்பட இளம் தலைமுறையினரும் இவ் எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். இப்போராட்டத்திற்கு பருத்தித்துறை யின் மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரத்தினம் தலைமை தாங்கினார் என்பதை வரலாற்று அடிப்படையில் நாம் குறிப்பிட விரும்பு கின்றோம்.

**61இல் அறப்போர்**

இன்றைய யாழ்ப்பாண செயலகத்திற்கு முன்பு அன்றைய கச்சேரிக்கு முன்பு நடைபெற்ற இலங்கையின் வரலாற்றை மாற்றியமைக்கின்ற முறையில் நடத்தப்பட்ட அறப் போராட்டத்தில் கலந்து கொண்டதன் விளைவு இவர் 2 கிழமைகள் சிறிமா அரசினால் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார் என்பதையும் நாம் நினைவு கூர்தல் நலம். 1961இல் நடைபெற்ற இவ்அறப் போராட்டத்தில்தான் தமிழரசுக்கட்சி தனித்து முத்திரை வெளியிட்டு உலகின் கவனத்தை ஈர்த்த நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

**முருகேசனாரின் முதிர்ச்சி பெற்ற அரசியல் சிந்தனையும், விலைபோக மறுக்கின்ற தமிழ் உணர்வும்**

1957ஆம் ஆண்டு யூலை மாதம் சிறுபான்மைத் தமிழரின் மகா சபையின் 14ம் ஆண்டு மாநாடு யாழ் மாநகரசபை மண்டபத்தின் துணைத்தலைவர் திரு.முருகேசனார் தலைமையில் நடைபெற்றது. மகாநாட்டில் இச்சபையின் முக்கிய பேராளர் அனைவரும் கலந்து கொண்டனர். இதில் திரு.முருகேசு அவர்கள் தன் தலைமை உரையை நிகழ்த்துகையில் பின்வரும் கருத்தினை வெளிப்படையாக வெளியிட்டார். 'நாங்களும் தமிழர்கள்தான். உயர் சாதித் தமிழர்கள் என்று கூறப்படுகின்ற வர்கள். எங்களுக்கு அநீதி செய்கிறார்கள் தான் அதற்காக நாங்கள் அவர்களை விட்டு விலகிச் செல்லமுடியாது. அவர்களோடு சேர்ந்து இருந்து வாழ்ந்துதான் எங்கள் உரிமைகளைப் பெறவேண்டும். சலுகைகளுக்காக இனத்தை விற்றால் சமுதாயம் எங்களை மன்னிக்காது". இவருடைய மேற்குறித்த கருத்து எம்மிடையே எத்தகைய வேறுபாடு இருந்தாலும், சலுகைகளுக்காக எம் இனத்தை விற்கக்கூடாது என்ற கொள்கை உறுதி கண்டு நாம் பெருமிதம் கொள்ளலாம். சலுகைகள் கெஞ்சிப் பெறுவது, உரிமைகள்

கேட்டுப் பெறுவது, விடுதலை என்பது நமக்கு நாமே நிலைநாட்டிக் கொள்வது என்ற கொள்கை உறுதிப்பாடு அவருக்கு இருந்தது. எனவேதான், இவரின் நிலைத்த கோட்பாட்டுக்கு மதிப்பு அளித்து, வீரகேசரி செய்தி இதழ் "அநீதி இழைத்தாலும் தமிழரை விட்டு விலகோம்" தலைவர் - பண்டிதர், முருகேசு முழக்கம்' என்று கொட்டை எழுத்துக்களில் வீரகேசரி அன்று செய்தி வெளியிட்டதும் அவருக்குப் பெருமை சேர்த்த விடயமாகும்.

சுருங்கக் கூறின் தம் சமூகத்தின் குல விடிவிளக்காய்த் தோன்றிய முருகேசனார் தாம் எடுத்த செயலை எறும்பு என முடிக்கும் ஏற்றம் பெற்றிருந்தார். அத்தோடு அடுத்துக் கெடுப்போர் சதியை முறியடிக்கும் மிக்க ஆண்மை கொண்டவராக, களம் பல கண்டவராக, மாண்புறு மனிதராக இவர் விளங்கனார். மாணவச் செல்வங்கள் கல்வியில் கரைகாண கலங்கரை விளக்கமாக விளங்கிய இவர்தான் நாடகத்துறையில் தனி முத்திரை பதித்திருந்த வைரமுத்தை நடிகமணியாக்கி வளர்த்தெடுத்த வள்ளலாகவும் விளங்கினார் என்பதை வரலாறு வரைந்துதான் தீரும்.

**தமிழீழத்தின் அம்பேத்கார்**

பாதித்ததமிழர் சாதி வெறிக்கு அடிமையாய் இருந்தபோது, அவர்களோடு மோதி, கிராமசபைத் தேர்தலில் இருமுறை வெற்றியீட்டிய பெருமையும் இவரைச் சாரும். இத்தகைய புரட்சியாளனை தமிழீழத்தின் "அம்பேத்கார்" என இயம்பின், அதனை மிக்கூற்று என எவரும் கொள்ள முடியாது. நம் கந்த முருகேசனாரை வட அல்வை சின்னராஜா அவர்கள் எம் உள்ளம் தொடுகின்ற முறையில்

"முத்தமிழில் முதிர்ச்சி பெற்ற
முதுபெரும் அறிஞனே!
நாடகத் தமிழுக்கு நற்பணிகள் பல புரிந்த
நாடறிந்த கலைஞனே!
நடிப்புலக மாமேதை நடிகமணி வைரமுத்துவினை
வளர்த்தெடுத்த தந்தையே!
தங்கள் நற்பெயரும் தூய பெரும் புகழும்
என்றும் நிலைத்திடவே எப்போதும் வாழ்த்துகின்றோம்"

என்று வாழ்த்தியதற்கமைய நாமும் மறைந்த நம் முருகேசனாரை மறவாது அவர் புகழ் பாடுவோமாக. வாழும் போதே செத்தவர்கள் பலர். செத்தும் வாழ்பவர்கள் சிலர். அதில் இவரும் ஒருவர்.

# 3

## இருள் சூழ்ந்த வேளை ஒளி தந்த விடிவெள்ளி...

இ.சிவநேசன்
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

பழம் பெரும் சமூகப் பற்றாளரான முருகேசு உபாத்தியாயரின் உயிர் பிரிந்த செய்தி ஒரு கணம் எமது சமூக உறவுகளின் உதிரத்தை உறைய வைத்தது. அவரின் பிரிவுச் செய்தி அறிந்தும், அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள வாய்ப்புக் கிட்டாமையை நினைத்து இன்றும் வேதனை யடைகின்றேன்.

கல்வி, கலாசாரம், பண்பாடு பொருளாதாரத்தால் உயர்ந்துகொள்ள முடியாது உரிமைகள் மறுக்கப்பட்ட எம் மக்களின் மத்தியில் பிறந்து எமது வாழ்வுரிமைக்காக சாத்வீக வழியில் போராடிய பேராசான்.

கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணி அளப்பரியது எம்மக்கள் தம்மை வளர்த்துக்கொள்ள மதம் மாறிய காலங்களில், அவற்றைத் தடை செய்து, நாம் சுதந்திரமான கல்வி பெற புத்தூர் விஸ்ணு வித்தியாலயம், அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை போன்றவற்றை உருவாக்கிய ஸ்தாபகர்.

எம் உரிமைக்காக ஆயுதம் ஏந்தி போராடிய காலங்களில் எமது மக்களிற்கு சமய உணர்வினை ஊட்டி, சாத்வீக வழியில் உரிமைகளை வென்றெடுக்க உபாயங்களை வகுத்து உழைத்து வெற்றிகண்ட பெரியார்.

இவ்வாறாக எமது சமூக மக்களை கல்வியால் உயரவைத்து , கலாச்சார பண்பாடுகளால் உயர வழிகாட்டி, அறநீதியுடைய சமூக மக்களாக எமை வளர்த்து ஒற்றுமையை வலியுறுத்தி இன்று எம்மக்கள் சமூகத்தில்

மதிப்புள்ளவராக மாறுவதற்கு அடிக்கற்களாக தம்மை மாற்றிக்கொண்ட பெரியார்கள் வரிசையில் இவரும் ஒருவர் என்பது உண்மை.

முருகேசு உபாத்தியாயரின் பிரிவு என்பது சமூக மக்களின் முதல் ஆசானையும், நல்ல தலைவரையும், ஆற்றல் மிகுந்த ஆலோசகரையும், வல்லமை மிக்க ஓர் வழிகாட்டியையும் இழந்த துயரத்துடன் இருப்பதை உணர்த்தியுள்ளது. இருள் சூழ்ந்த வேளை ஒளி தந்த விடிவெள்ளி மறைந்ததற்கு ஒப்பானது.

அவரின் பாதையில் நின்று தொடர்ந்தும் எமது உயர்வை நோக்கி ஒற்றுமையுடனும், உணர்வுடனும் செயற்படுதலே அவரின் ஆன்மசாந்திக்கு வழி.

பெருமகனின் பிரிவால் துயரத்தில் உள்ள குடும்பத்தார், சுற்றத்தார் அனைவருடனும் நானும் எனது துயரத்தை பகிர்ந்து கொள்கின்றேன்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறையருளை வேண்டுகிறேன்.

# 4

## சமய, சமூக, இன விடுதலையின் குரல்

சுரேஸ் பிரேமச்சந்திரன்
பாராளுமன்ற உறுப்பினர்

அமரர் திரு.க.முருகேசு ஆசிரியர் காலமானதையிட்டு அவரது துணைவியார் மக்கள், மருமக்கள் உட்பட குடும்பத்தினர் அனைவருக்கும் எனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் நினைவு மலருக்கு அவரைப் பற்றி சில வார்த்தைகள் எழுதுவது சாலப்பொருந்துமென நினைக்கிறேன்.

நான் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும்கூட பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருவது கோப்பாய் தேர்தல் தொகுதியில் ஆகும். ஆசிரியர் முருகேசு அவர்களும் கோப்பாய் தேர்தல் தொகுதியை தனது வாழ்விடமாகக் கொண்டு, ஆசிரியராக, அதிபராக கடமையாற்றி சமூகத்தை விழித்து எழ வைத்தவர். அந்த வகையில் அவருக்கு நன்றி செலுத்தும் உணர்வுடன் செலுத்தும் இந்தச் செய்தியைத் தருகிறேன்.

திரு.க.முருகேசு ஆசிரியர் காலத்தால் மூத்தவராவார். வாழ்ந்த காலத்தில் செயற்பட்ட நேரங்களில் சமூக ஏற்றத்தாழ்வுகள் உச்சக்கட்டத்திலிருந்தது. இதை இல்லாமற் செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் செயற்பட்டார். இதற்காக அவர் உயர் சாதியினருடன் வன்முறையில் ஈடுபடவில்லை. அவர் இன விடுதலையை மையமாகக் கொண்ட தமிழரசுக் கட்சியின் தலைவர்களுடன் தன்னை நெருக்கமாக்கி அவர்கள் மூலமும் தன்னோடு ஒத்த தன் சமூகத்துக்கு இளைஞர்களை ஒன்று திரட்டினார். இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்ததனால் சில இறுக்கமான சமூக கட்டுகள் உடைந்தது. ஆலயப் பிரவேசம் தேனீர்க் கடைப்பிரவேசம்

எல்லாம் இதற்குச் சான்றுகள். ஆலயப் பிரவேசத்தின் போதெல்லாம் அதை வீம்புக்காகச் செய்யாது தான் ஒரு உண்மையான இந்து சமய தத்துவங்களை உணர்ந்த ஒரு அடியனாக புனிதனாக ஆலயத்தில் கால்அடி எடுத்து வைத்தார். என நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர் நடாத்திய போராட்டங்கள் அதனால்அவருக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் இன்றைய அவரின் சமூக இளைஞர்களுக்கு பெரிதாக தெரியாவிட்டாலும் கூட அந்த வளர்ச்சிக்கு அவரது சேவை அளப்பரியது என்று கூறத்தான் வேண்டும்.

நான் அவருடன் நெருங்கிப் பழகாத ஒருவன். தேர்தல் காலத்தில் வாக்கு வேட்டையாடுவதற்காக, அவரின் இல்லம் சென்ற போது அவரது மகன் இராஜவரோதயன், பெறாமகன் தங்கத்துரை ஆகியோருடன் உரையாடும் போது அவர் தள்ளாத வயதிலும் சூரிய நமஸ்காரம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

மேலும் அமரர் முருகேசு அவர்கள் தான் சார்ந்த சமூகத்தின் வளர்ச்சிக்காக சமூக சமய பொருளாதார கலை கலாசார பண்புகளை அடித்தளமாகக் கொண்டு தன்பால் ஆன பங்களிப்பைச் செய்து இவ்வையகத்தில் தொண்ணூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்து மரணித்துள்ளார்.

எமது இனம் விடுதலை அடைந்து தன் மண்ணில் நிம்மதியாக வாழும்போது சமூக விடுதலைக்காகவும் இனவிடுதலைக்காகவும் சமய விடுதலைக்காகவும் போராடிய தலைமை ஆசிரியர் திரு.க.முருகேசு அவர்களை நன்றியுடன் நினைவு கூரும் என நிச்சயமாக நம்புகின்றேன்.

# 5

# 'முருகேசு மாஸ்ரர்' ஒரு தமிழ்வாத்தி அல்ல!

புதுவை இரத்தினதுரை

புத்தூர்!

சொல்லிப் பீற்றுவதற்கு எந்தப் பெருமையுமற்ற

ஒரு வெள்ளைக் கிராமம்

சோமாஸ்கந்தக் கல்லூரியைத் தூக்கிவிட்டால்

முகவரியற்றுவிடும் அவ்வூருக்கு அப்போது

என்ன தவம் செய்தேனோ அறியேன்

இங்கேதான் என்பிறப்பு நிகழ்ந்தது

நான் சிறுவமாய் வளையமுருட்டிய நாளில்

நெற்றியில் திரிபுண்டரம் துலங்க

சந்தனப் பொட்டுத் தரித்த சாந்தசொரூபமொன்று

மணற்பாதியில் உலவியது

நுனுவிற் குளத்துக்கும், வயல்வெளிக்கும்

தெற்கேயிருந்தது என் வீடு

வயல்வெளிக்கு வடக்கேயிருந்துதான்

'சந்தனப்பொருட்டு' பஸ்சேற வருவதுண்டு

இப்போது போலல்ல

அப்போதது ஏழைபட்ட இடம்

புத்தகலட்டியென்ற புராதன நாமமொன்றும்

இருந்ததாய் நினைவு இவ்விடத்துக்கு

முருகேசு மாஸ்ரர்!
நூறுபேருக்குள்ளும் துருத்திக்கொண்டு தெரியும்
சிரிப்புக்கும், செந்தளிப்புக்கும் சொந்தக்காரர்
அல்வாயிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட ஆளென்றும்
ஒருகாலம் ஊர்சொல்லிற்று இவரை
அழகிய வடிவும்
ஆசிரிய மிடுக்கும்
சமய சின்னங்கள் தரித்த ஜொலிப்புமாக
'வாத்தியார்" இருந்தார்
மேற்குத் தெருவிலும் வாத்திமார் இருந்தனர்
என்றாலும் இவரே வடிவ
வடிவு மட்டுமல்ல ;
விடயமுள்ளவராயும் இவரே விளங்கினார்
நான் சின்னப்பொடியன் என்பதால்
இவருடன் பேசி அறியேன்
பார்த்திருந்தேன் என்பதான பழக்கம் மட்டுமே
சரியாக நினைவிற் தட்டுப்படவில்லை
அது 1970களின் காலமாயிருக்கலாம்
கொஞ்சம் முன்பின்னாகவும் இருக்கலாம்
'பத்தகலட்டி'யிலும்
'சொக்கதிடலி'லும்
பள்ளிக்கூடங்கள் இரண்டு விதைக்கப்பட்டு
முளை கொண்டிருந்த நேரம்
ஒருநாள் 'டானியல்' என்னை ஏற்றி
வீடொன்றின் முன்னே இறக்கினார்
வாசல்வரை வந்து வரவேற்று
உள்ளே அழைத்துச் சென்றது 'உத்தரியச் சால்வை'
நெடுநேரமாய் டானியல் பேசினார்

திரிபுரண்டரமும், நானும் கேட்டபடியிருந்தோம்
'மாஸ்ரர் இவரைத் தெரியுமா?'
என்னைக் காட்டி டானியல் கேட்டார்
பார்த்திருக்கின்றேன் பழக்கமில்லையென
சின்னச்சிரிப்போடு சொன்னது 'சந்தனப்பொட்டு'
'பெரிய நெருப்பை உள்ளே புதைத்துள்ள
சின்னத் தீக்குச்சி'
இப்படித்தான் முருகேசு மாஸ்ரருக்கு
என்னை அறிமுகம் செய்தார் டானியல்
1972 ஆம் ஆண்டு
என் 'வானம் சிவக்கிறது' வெளியீட்டு விழாவுக்கு
நேரிற் சென்று அழைத்தேன்
வாத்தியார் வந்தார் விழாவுக்கு
மெத்த மகிழ்ச்சியில் மிதந்து
பத்துரூபா தந்து புத்தகம் வாங்கினார்
பின்னரும் நெருக்கமென்றில்லையெனினும்
கண்டால் கதைப்போம்
சிரிப்புதிர்ப்போம்
காலம் புத்தூரிலிருந்து என்னைப் பிடுங்கியெறிய
எங்கெங்கோ எடுத்துச்சென்றது காற்று
சந்தனப்பொட்டுக்கும் எனக்குமான உறவு தொடர
சாத்தியமற்றுப் போனது துயரம்தான்
இப்போ முருகேசுமாஸ்ரரும் அமரராகி விட்டாராம்
இனி எதையெழுதியென்ன
வெற்றிடமாகி விட்டது வெளிச்சமிருந்த இடம்
முருகேசு மாஸ்ரர்
சாதாரண தமிழ் வாத்தியல்ல
கீழே கிடந்தழுந்திய ஒரு சமூகத்தில்

கீற்றாயெழுந்து
பிரகாசமாய் இலங்கிய அறி வுச்சுடர்,
நிழல்தரு மரமாய் நின் று
விழுதிறக்கி முதிர்ந்த் விசாலித்த ஆலமரம்,
ஞானமும் அறி வும் கொண்டிலங்கி
பொலிந்த பெருந்தகை,
எந்தச் 'சைக்கோ' வுமற்ற இனியன்,
உதாரணம் காட்டவல்ல உயர்ந்தோன்,
காலமொன் றின் பழுதாங்கி,
மனிதன்
மாசற்றோன்
முருகேசு மாஸ்ரருடன் பழகியிருந்தேனென்ற
பெருமையொன்றே போ தும் எனக்கு.

# 6

## யார் இந்த முருகேசு ?

சி.கிருஷ்ணபிள்ளை (சமாதான நீதிவான்)
ஓய்வுபெற்ற அரச,
நிர்வாக உத்தியோகத்தர்
ஆவரங்கால்

1954, 55 ஆம் ஆண்டு காலப் பகுதி

பிரதமர் சர்.ஜோன் கொத்தலாவெல தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் அமர்ந்திருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திரு.எஸ்.டபிள்யூ. ஆர்டி. பண்டார நாயக்காவைத் தலைவராகவும், எதிர்கட்சித் தலைவராகவும் கொண்டு எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்தது.

சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக இருக்க வேண்டும் என்னும் கோஷம் இரு தரப்பினர்களிடமிருந்தும் தென்னிலங்கையில் ஏட்டிக்குப் போட்டியாக ஏககாலத்தில் ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்தது.

இணைப்பாட்சி அரசியல் அமைப்பு முறையை ஏற்படுத்துதல், தமிழ் மக்களுக்கிடையேயுள்ள எற்றத்தாள்வுகளை சிறப்பாக தீண்டாமையை ஒளித்தல், மலையகத் தமிழர் அனைவருக்கும் பிரஜா உரிமை, வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் அரசகரும மொழியாக பிரகடனம் செய்தல் ஆகிய நான்கு கொள்கைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு 1949 செப்ரம்பர் 18 ஆந் தேதி தந்தை செல்வநாயகம் அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்கி, 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற சுதந்திர இலங்கையின் இரண்டாவது பொதுத்தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட அமரர்களை திரு.சி.வன்னியசிங்கம், திரு.ஆர் இராஜவ

ரோதயம் ஆகிய இரு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்தது.

திருவாளர்கள் எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சி.வன்னியசிங்கம், ஏ. அமிர்தலிங்கம் முதலான தமிழ் அரசுக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் வரவிருக்கும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலை எதிர்நோக்கி இணைப்பாட்சி அரசியல் அமைப்பு முறை, மலையகத் தமிழர்களின் பிரஜா உரிமை, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் அரச கரும மொழியாகப் பிரகடனம் ஆகியவைகளை முன்னிலைப்படுத்தி முழு அளவில் தீவிரமான பரப்புரை களில் ஈடுபட்டிருந்தனர்.

தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக பரப்புரைகளில் அவர்கள் அக்கறை செலுத்தவில்லை. அல்லது தவிர்த்துக்கொண்டனர். என்றே கூறலாம்.

வன்னியிலிருந்து அடங்காத் தமிழர் திரு.சி.சுந்தரலிங்கம், பாராளு மன்ற உறுப்பினர். " தனித்தமிழ் ராஜ்யமே" பிரச்சனை தீவிர வழி " என்ற தனது அபிப்பிராயத்தை நிலைப்பாட்டை இடைக்கிடை பத்திரிகை அறிக்கைகள் வாயிலாக வலியுறுத்திக்கொண்டிருந்தார்.

திரு சுந்தரலிங்கம் 1952 இல் சமஷ்டி (இணையாட்சி) அரசியல் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் பின்வருமாறு குரல் குரலெழுப்பியவராவார்.

"தமிழ் மக்களுள்ளே ஒரு பகுதி மக்கள் தீண்டத் தகாதவர்களாக ஒதுக்கப்பட்டிருக்கும்வரை விஷேசமாக யாழ்ப்பாணத்திலே தீண்டாமைக்கு சிரஞ்சீவி ஆயுள் கொடுக்கப்பட்டிருக்கும் வரை தமிழ் மக்களுக்கு என ஒரு தனியரசு தமிழரசு சமஸ்டி கோருவது அசாத்தியமாகும்.

இதனை மேற்கோள்காட்டி 1955 ஆம் ஆண்டில் என்னால் எழுதப்பட்ட கட்டுரை வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைளில் ஆசிரிய ருக்கு கடிதம் என்ற பகுதியில் வெளிவந்தது.

இதைப் படித்த சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் உபதலைவர் அமரர் க.மு.அவர்களின் கோரிக்கையின் மீது செயலாளர் திரு.ஆ.ம.செல்லத் துரை ஆசிரியர் அவர்கள் என்னைத் தேடி வந்து சந்தித்தது இது சம்பந்தமான விரிவான தகவல்களையும் பத்திரிகை நறுக்குகளையும் பெற்றுக்கொண்டார்.

தமிழ்த் தலைவர்கள் வரிசையில் இருந்த சா.கந்தையா வைத்தியநாதன், திரு.சு.நடேசபிள்ளை, திரு.வே.குமாரசாமி ஆகியோர் சா.ஜோன் கொத்தலாவெல யின் ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் அமைச்சர் பதவிகள் வகித்து மக்களால் அளிக்கப்படும் விழாக்களில், வைபவங்களில் சைவத்தினதும், தமிழ் மொழியினதும் சிறப்பு, வளர்ச்சி பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள்.

இத்தகைய நெருக்கடியான - அமர்க்களமான பரப்புரைகளுக்கு மத்தியில் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் உபதலைவராக அப்போது பதவி வகித்த அமரர் க.முருகேசு ஆசிரியர், செயலாளர் திரு.ஆ.ம.செல்லத்துரை ஆசிரியர் ஆகியவர்களின்அறிக்கைகள் பேச்சுக்கள் இடையிடையே பத்திரிகைகளில் கனதியான செய்திகளாக வெளிவந்து கொண்டிருந்தன.

அவைகளில் சில பின்வருமாறு;

"தனித்தமிழ் ராஜ்யமும், சமஸ்டியும்
நன்மை பயக்காது"
"நாயிலும் கடையர்களாக மதிக்கப்படுகின்றோம்."
" பறை ஜாதித் தமிழன் என பௌத்த பிக்கு
பேசியதைக் கேட்டுக் கொதித்தெழுவோர்
தம்முள் ஒரு பகுதியினரை ஒதுக்குவதுஏன்?"
"அரசியல் விடுதலைக்கு முன்னர்; சமூக விடுதலை வேண்டும்"
"சாதி பார்க்கும் பாடசாலைகளை அரசு
அங்கீகரிக்கக் கூடாது"

இச்செய்திகளைப் பார்த்து படித்து உணர்ந்த தமிழ் அரசுக் கட்சித் தலைவர்கள், சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர்களுடன், அச்சமூகமக்களின் முன்னேற்றத்தை மையமாகக் கொண்டு பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக 1955 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒப்பந்தம் ஒன்று செய்து கொண்டனர்.

இந்த நன்முயற்சியில் முன்னோடியாக நின்று செயற்பட்டவர்களில் முதன்மையானவர் சபையின் உபதலைவரான அமரர்க.முருகேசு ஆசிரியராவார்.

நிபந்தனைகள் பின்வருமாறு

1. தமிழரக்கட்சி தனது பரப்புரைக் கூட்டங்களில் தீண்டாமை ஒழிப்பு சம்பந்தமாக தீவிரமாக பரப்புரை செய்யும்
2. எதிர்வரும் பொதுத்தேர்தலின் பின்னர் தமிழரசுக் கட்சி தீண்டாமை ஒழிப்பு மசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றும்
3. செனெற் சபையில் சிறுபான்மைத் தமிழர் ஒருவர் நியமனம் பெறத் தக்கதாக தமிழரசுக் கட்சி செயற்படும்.

மேற்கூறப்பட்ட மூன்று நிபந்தனைகளும் அவ்வப்போது குறுகிய காலகட்டத்தில் நிறைவு செய்யப்பட்டன.

1956 ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினராக சிறுபான்மைத் தமிழ் மக்கள் சார்பாக ஏகபிரதிநிதியாக முதன்முதலில் அமரர் முருகேசு ஆசிரியர் அவர்கள் நியமனம் பெற்றமை மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் நிறைவு செய்யப்படுவதற்கும், பயனுறுதியுள்ள செயற்பாடு களாக அமைவதற்கும் ஒரு தூண்டுகோலாக உறுதுணையாக உந்துசக்தியாக அமைந்திருந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

தீண்டாமை ஒழிப்பு பரப்புரையை தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தங்கள் கூட்டங்களில் சிறப்பாக 1956 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது தங்கள் கொள்கை விளக்கக் கூட்டங்களில் மிகத் தீவிரமாகப் பரப்புரை செய்தார்கள்.

1956 ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமோக வெற்றியீட்டியதன் பின்னர் பாராளுமன்றத்தில் "தீண்டாமை ஒழிப்பு மசோதா" திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.என்.ஆர். இராஜவரோதயம் அவர்களால் முன்மொழியப்பட்டு கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.வன்னிய சிங்கம் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1957 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற செனெற் சபைக்கான தேர்தலில் திரு.ஜி.நல்லையா அவர்கள் தமிழரசுக் கட்சியால் அக்கட்சிக்கு கிடைத்த முதலாவது செனெற்றராக நியமிக்கப்பட்டார்.

இப்பதவிக்கு அமரர் க.முருகேசு ஆசிரியர் அவர்களையே நியமிக்க வேண்டும் என அப்போதய தமிழரசுக் கட்சித் தலைவர் திரு.சி.வன்னியசிங்கம் பெரிதும் விரும்பினார்.

ஆனால் அமரர் க.முருகேசு ஆசிரியர் அவர்கள் தமது பெயரை இவ்விடயத்தில் தவிர்த்து திருவாளர்கள் ஜே.எஸ் சுந்தரம், வீ.கே.பரமநாயகம், ஜி.நல்லையா ஆகிய மூவரில் ஒருவருக்கே செனெற்றர் நியமனம் அளிக்கப்படல் வேண்டும் என விரும்பினார்.

இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை அமரர் க.முருகேசு ஆசிரியர் அவர்களுக்கே இருந்தபடியால் திரு.ஜி.நல்லையா அவர்களை செனெற் சபைக்கு நியமனம் செய்யுமாறு தமிழரசுக் கட்சிக்கு அவர் சிபார்சு செய்தார்.

1957 ஆம் ஆண்டு யூலை மாதம் சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் 14 ஆவது மகாநாடு யாழ் மாநகரசபை மண்டபத்தில் சபையின் உபதலைவர் அமரர்.க.முருகேசு அவர்கள் தலைமையில் நடைபெற ஏற்பாடாக இருந்தது.

சகல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

ஆளும் கட்சி அரசப் பிரதிநிதியாக தொழில் சமூக சேவைகள் உதவி அமைச்சர் திரு.எம.பி..டி.சொய்சா அவர்கள் வருகை தர இருந்தார்.

திரு.எஸ் டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசு அமைக்கப்பட்டு சிங்களம் மட்டும் மசோதா நிறைவேற்றப்பட்டதன் பின்னர் யாழ் வரும் முதலாவது அமைச்சராக இவர் இருந்தார்.

இதன் காரணமாக இவரது வருகையை கறுப்புக்கொடி காட்டி எதிர்ப்பது என தமிழரசுக் கட்சி இறுதி நேரத்தில் முடிவு செய்தது.

மகாநாட்டுத் தினம் காலை 7.30 மணியளவில் கடுகதி புகையிரதம் மூலம் யாழ் புகையிரத நிலையத்தில் வந்து இறங்கிய உதவி அமைச்சரை திரு.வன்னியசிங்கம், திரு.அமிர்தலிங்கம் முதலான பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் நூற்றுக்கணக்கான தமிழரசுக் கட்சித்

தொண்டர்கள் இறங்க விடாது கறுப்புக் கொடி கட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

எனினும் பொலிஸ் அதிகாரிகள் ஒருவாறு தடைகளை அகற்றி உதவி அமைச்சரை இறக்கி மிகப் பாதுகாப்பாக காங்கேசன்துறை வாடிவீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

காலை 9.00 மணிக்கு யாழ் மாநகர சபை மண்டபத்தில் அமரர். முருகேசு ஆசிரியர் அவர்கள் தலைமையில் மகாநாடு ஆரம்பமாக வேண்டும்.

உதவி அமைச்சர் சமூகம் அளித்தால் விபரீதமான விளைவுகள் ஏற்படும் என்பதை உணர்ந்த அமரர் முருகேசு ஆசிரியர் அவர்கள் தமிழரசுக் கட்சித் தலைவர்களுடனும் மகாசபை நிர்வாகிகளுடனும் கலந்துரையாடி விவேகமான ஒரு முடிவுக்கு வந்தார்.

அன்றைய மகாநாட்டுக்கு அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் எவரையும் அனுமதிப்பதில்லை எனவும் ஆனால் உதவி அமைச்சர் திரு.எம்.பி.டி.சொய்சா அவர்களை அன்று தெரிவு செய்யப்படும் மகாசபையின் புதிய நிர்வாக சபைக் கூட்டத்தில் பங்குபற்ற அன்று மாலை அழைப்பது எனவும் தீர்மானிக்கப் பட்டது.

அதற்கிணங்க காலை 10.30 மணியளவில் அமரர் முருகேசு ஆசிரியர் அவர்கள் தலைமையில் மகாநாடு மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் ஆரம்பமானது. அவரது இருபது நிமிட நேர தலைமையுரையின் முக்கியமான தொனி எடுபொருள் பின்வருமாறு அமைந்திருந்தது.

"நாங்களும் தமிழர்கள்தான். உயர்ஜாதித் தமிழர்கள் என்று கூறப்படுபவர்கள் எங்களுக்கு அநீதி செய்கிறார்கள். அதற்காக நாங்கள் அவர்களை விட்டு பிரிந்து விலகிச் செல்ல முடியாது அவர்களோடு சேர்ந்து இருந்து வாழ்ந்து தான் எங்கள் மனித உரிமையைப் பெற வேண்டும். சலுகைகளுக்காக இனத்தை விற்றால் எதிர்கால எமது சமூகம் எங்களை மன்னிக்காது" என்று கூறினார். அடுத்த நாள் " வீரகேசரி பத்திரிகை

**"அந்தி இழைத்தாலும் தமிழுரை விட்டு விலகோம்."**
**தலைவர் பண்டிதர் முருகேசு முழக்கம்**

என்று கொட்டை எழுத்து தலைப்புடன் அவரது பேச்சை மிக விரிசலாக வெளியிட்டிருந்தது.

அன்று தான் நான் முதன் முதலாக அமரர் முருகேசு ஆசிரியர் அவர்களை நேர்முகமாக பார்க்கவும், அறியவும், பேசவும் சந்தர்ப்பம். எனது இருபதாவது வயதில் கிடைத்தது.

1972 ஆம் ஆண்டு தேர்தல்கள் தொகுதி வரையறை ஆணைக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிப்பது சம்பந்தமாக அமரர்களான க.முருகேசு ஜே.எஸ். சுந்தரம், பி.குணரத்தினம் ஆகியோர் என்னை அணுகினார்கள். அப்போது நான் யாழ் தேர்தல் திணைக்களத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

யாழ் மாவட்டத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் பிரதிநிதித்துவம் பெறத்தக்கதாக சில தேர்தல் தொகுதிகள் வரையறை செய்யப்படல் வேண்டும். எனவும் அதற்காக கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக சிறுபான்மைத் தமிழர்கள் எண்ணிக்கை விபரங்கள் எடுத்துத் தர வேண்டும் எனவும் அமரர் க.முருகேசு ஆசிரியர் என்னிடம் கேட்டுக்கொண்டார்.

அதற்கிணங்க யாழ் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மூலம் அலுவலக ரீதியாக யாழ் மாவட்டத்திலுள்ள அப்போதைய கிராமசேவை உத்தியோகத்தர்களிடமிருந்து 1971 ஆம் ஆண்டு குடிசன மதிப்புக் கணக்கெடுப்பின்படி உள்ள மொத்த ஜனத்தொகையையும், அவற்றுள் சிறுபான்மைத் தமிழர் எண்ணிக்கையையும் பெற்றுக்கொள்ள முடிந்தது.

இதன்படி கைதடி கிராமசபைத் பிரதேசத்தில் 51 வீதமும், புத்தூர் கிராமசபைப் பிரதேசத்தில் 41 வீதமும் சிறுபான்மைத் தமிழர் கூடுதலாகவும் கிராமசபைப் பிரதேசங்களாக இருப்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

ஆகவே புத்தூர், கைதடி, அச்சுவேலி கிராமசபைப் பிரிவுகளையும், மற்றும் சாவகச்சேரி கிராமசபைப் பிரிவில் மட்டுவில், நுணாவில், சரசாலை

ஆகிய கிராமங்களையும், உள்ளடக்கி ஒரு தொகுதி வரையறை செய்து திரு.ஜே.எஸ்.சுந்தரம் அவர்களின் தலைமையில் இயங்கிய "உரிமை குறைந்த தமிழர் இயக்கம்" என்னும் அமைப்பின் மூலம் ஆணைக்குழுவுக்கு அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது.

திரு.சுந்தரம் அவர்களே முன்னின்று ஆணைக்குழு முன் சாட்சியமும் அளித்தார்.

1975, 76 ஆம் ஆண்டுகளில் நான் கொழும்புத் தேர்தல்கள் திணைக்கள தலைமையகத்தில், தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபடியால் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் செயலாளர், தலைவர் அங்கத்தவர்களை சந்திக்கவும், அளவளாவும் கூடிய பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

யாழ் மாவட்டத்தின் 1971 ஆம் ஆண்டு குடிசன மதிப்பு மற்றும் நிலப்பரப்பின் அடிப்படையில் அப்போது நடைமுறையில் உள்ள பதினொரு தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாது இருப்பதாக வும், ஆகவே சில தொகுதிகளுக்கு இடையில் உள்ள எல்லைகளில் சிறு சிறு மாற்றங்கள் மட்டுமே செய்யப்படவுள்ளதாகவும் நான் அறியக் கூடியதாக இருந்தது.

இதை நான் அமரர் முருகேசு ஆசிரியர் அவர்களிடம் தெரிவித்த போது அவர் மிகவும் விசனம் அடைந்தவராக "அப்படியானால் ஆணைக் குழு தனது அறிக்கையில் யாழ் மாவட்டத்தில் உள்ள எமது சமூகம் சம்பந்தமாகவும் நிலைமகள் சம்பந்தமாகவும் எமது நியாயப்பாட்டை வலியுறுத்துமுகமாக மிகக் காத்திரமான முறையில் சில சிபார்சுகள், குறிப்புகள் இடம் பெறச் செய்தல் வேண்டும். இதை ஆணைக் குழுவிடம் வலியுறுத்துங்கள்" என்று கூறினார்.

இதே விடயத்தைத்தான் திரு.சுந்தரம் அவர்களும் என்னிடம் வலியுறுத்தினார். நான் செயலாளரையும், ஆணைக்குழுத் தலைவர் அங்கத்த வர்களைச் சந்தித்து உரையாடி வலியுறுத்தியதன் பிரகாரம் ஆணைக்குழுவின் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"யாழ்மாவட்டத்தில் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக கணிக்கப் படும் பிற்படுத்தப்பட்ட மக்களுககாக அவர்கள் பெரும்பான்மையாக வரத்தக்கதாக ஒரு தொகுதியை வரையறை செய்ய வேண்டும். என்பதில் ஆணைக்குழு அதிக அளவான நேரத்தை செலவிட்டது. ஆனால் அது முடியாத செலவாகிவிட்டது. இத்தகைய மக்கள் ஒரு நிலப்பரபில் தொடர்ச்சியாக வாழாமல் கொத்துக் கொத்தாகவும், குழுமம் குழுமமாகவும் பரந்து வாழ்ந்ததால் சாதாரண பெரும்பான்மையைக் கொண்டதாகக் கூட ஒரு தொகுதியை வரையறை செய்ய முடியாமல் உள்ளது. எனவே தற்போதைக்கு அவர்கள் செல்வாக்கு மிக்க அரசியல் கட்சிகளுடன் இணைந்து தேர்தலுக்கு நின்று அவர்கள மூலம் பிரதி நிதித்துவம் பெற முயற்சித்தல் வேண்டும்.

இந்த வகையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணித் தலைவர்கள் ஆணைக்குழுமுன் பிரசன்னமாகி அடுத்த தேர்தலின் போது தாங்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு சில தொகுதிகள் ஒதுக்கிக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளமை பாராட்டத்தக்கதும், வரவேற்கத்தக்கதுமாகும்."

ஆணைக்குழுவின் அறிக்கையைப் படித்த அப்போதைய கோப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு.சி.கதிரவேலுப்பிள்ளை அவர்கள் அமரர் க.முருகேசு ஆசிரியர் அவர்களையும் என்னையும் யாழ் செயலகத்தில் சந்தித்தபோது எங்களைப் பாராட்டியதுடன்

"அப்படியானால் நான் தேர்தலில் இருந்து ஒதுங்கி சிறுபான்மைப் தமிழர் ஒருவர் கோப்பாய் தொகுதியில் தேர்தலுக்கு நிற்க வழி விடத் தயாராக இருக்கிறேன். நீங்கள் அல்லது உங்களைச் சாா்ந்த ஒருவர் தேர்தலுக்கு நிற்கலாம்." என்று அமரர் முருகேசு ஆசிரியர் அவர்கள் விழித்துக் கூறினார்.

இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் தான் 1977 ஆம் ஆண்டு பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு அமரர் முருகேசு ஆசிரியர் அவர்களின் நெருங்கிய உறவினர்கள் இருவரின் பெயர்கள் கோப்பாய் தொகுதிக்கு பிரஸ்தாபிக்கப்பட்டு, தீவிரமாக ஆலோசிக்கப்பட்டதையும், இது பின்னர் சில காரணங்களுக்காக கைவிடப்பட்டு உடுப்பிட்டி தொகுதியில் திரு.த.இராஜலிங்கம் அவர்கள் நிறுத்தப்பட்டதையும் தெரிவு செய்யப்பட்ட தையும் நோக்க வேண்டும்.

பனம் பொருட்கள் உற்பத்திகள் சம்பந்தமாகவும் ஒரு சபை அமைக்கும் முகமாகவும் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதாக நியமிக்கப் பட்ட ஆணைக்குழு 1973 ஆம் ஆண்டு யாழ் செயலகத்துக்கு வந்து சாட்சியங் களைப் பதிவு செய்த போது அமரர் முருகேசு ஆசிரியர் அவர்களும் சாட்சியம் அளித்தார்.

சாட்சியத்தின் இறுதியில் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர்" இங்கு சாட்சியம் அளித்தவர்களில் மிக அதிகமானவர்கள் 'கள்'ளை மையமாக வைத்துத்தான் சாட்சியம் அளித்துள்ளார்கள். நீங்கள் சிறப்பான முறையில் 'கள்'ளுடன் ஏனைய பனை உற்பத்திகள் சம்பந்தமாகவும், பிரயோசனங்கள் சம்பந்தமாகவும் விரிவாக ஆணைக்குழுவுக்கு பயனுறுதியுள்ள வகையில் சாட்சியம் அளித்துள்ளீர்கள். இதற்காக உங்களைப் பாராட்ட வேண்டும். என்று பாராட்டினார்கள்

1961 ஆம் ஆண்டு ஆவரங்கால் கிராமத்தில் இருந்து புத்தூர் கிராமசபைக்கு சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த திரு.க. இராசன் என்பவர் போட்டியின் மூலம் தெரிவு செய்யப்பட்டார்.

சுமார். 45 வருடங்களுக்கு முற்பட்ட அன்றைய சூழ்நிலையில் திரு.இராசனின் தெரிவையும் கிராமசபைக்கு அவர் அங்கத்தவராக சமூகம் அளிப்பதையும் புத்தூர்க்கிராமத்தில் உள்ள உயர்ஜாதித் தமிழர்களில் அதிகமானோர் விரும்பவில்லை.

திரு.இராசனின் வரவை அங்கத்துவத்தை முற்றாகத் தடைசெய்யும் நோக்கத்துக்காக பத்து அங்கத்தவர்களைக் கொண்ட சபையில் பெரும் பான்மையான அங்கத்தவர்கள் கூட்டத்துக்கு சமூகம் அளிக்காது பகிஸ்கரிக்க வேண்டும் எனவும் இதன்மூலம் ஒரு அபிப்பிராயம் புத்தூர் கிராமத்தில் உள்ள உயர்ஜாதி மக்களிடையே மேலோங்கி இருந்தது.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினரான அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்கள் அப்போது புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் அதிபராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அக்கால கட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தேசிய மகாநாடு யாழ் மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

அமரர்.க..முருகேசு ஆசிரியர் அவர்கள் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் அடங்கிய மத்திய செயற்கூட்டத்தில் திரு.இராசன் அவர்கள் தெரிவு சம்பந்தமாகவும் அவரைச் சபைக்கு வராமல் தடை செய்வதற்காக புத்தூர் உயர்ஜாதித் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் விரிவாக எடுத்துரைத்திருந்தார்.

அன்று மாலை நிகழ்ந்த கட்சியின் பகிரங்கக் கூட்டத்தில் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.என்.ஆர்.இராஜவரோதயம் அவர்கள் பேசுகையில் "சிறுபான்மைத் தமிழன் கிராமசபைக்கு அங்கத்தவனாக வருவதைத் தடை செய்வதாக கிராமசபையையே கலைப்பதா?"

என்று விழித்து சுமார் 15 நிமிடங்கள் வரை புத்தூர் கிராம உயர்ஜாதித் தமிழர்களை சாடினார். (வீரகேசரி பத்திரிகையில் இவரது பேச்சு மிக விரிவான செய்தியாக வெளிவந்தது)

பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் எம்.பாலசுந்தரம்; டாக்ரர் நாகநாதன் திரு.வீ.தர்மலிங்கம் முதலானவர்கள் எடுத்த பல நடவடிக்கைகள் காரணமாக நிலமை சுமுகமான நிலைக்கு வந்தது. பிரச்சனைகள் எதுவுமின்றி திரு இராசனும் கிராமசபைக்கு செல்லக்கூடியதாக இருந்தது.

இவைகளுக்கு எல்லாம் உறுதுணையாக உந்துசக்தியாக இருந்தவர் யார்? அவர்தான் அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்கள்.

அமரர் க.முருகேசு ஆசிரியர் அவர்கள் தமிழரசுக் கட்சித் தலைவர்களால் மிகவும் உயர்ந்த நிலையில் வைத்துக் கணிக்கப்பட்டார்.

1956 ஆம் ஆண்டில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருமலை யாத்திரையுடன் கூடிய திருமலை தேசிய மகாநாடு, 1957 ஆம் ஆண்டு நடைபெற்ற மட்டக்களப்பு தேசிய மகாநாடு 1958 ஆம் ஆண்டு வவுனியாவில் நடைபெற்ற தேசிய மகாநாடு, 1961 ஆம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் ஆகியனவற்றில் அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்களின் காத்திரமான பங்களிப்பு தமிழரசுக் கட்சித் தலைவர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டங்களில் அமரர்.முருகேசு ஆசிரியர் அவர்கள் சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைப் பிரச்சினைகள் சம்பந்தமாக சிறப்பாக மாணவர்களின் கல்வி சம்பந்தமாக யாழ் குடாநட்டில் பிரபல தனியார் முகாமைத்துவக் கல்லூரிகளில் இந்தச் சமூக மாணவர்கள் அனுமதிக்கப்படாதமை சம்பந்தமாக பரிதாபத்துடன் எடுத்துக் காட்டிய பயனுறுதியுள்ள செயற்பாடுகள், கட்சியின் தலைவர்களினதும், புத்திஜீவிகளினதும், தீவிர அவதானிப்புக்குள்ளானதுடன் பல உயர்தர கல்லூரிகளில் சிறுபான்மைத் தமிழர் சமூக ஆசிரியர்கள் சேவையாற்றவும், மாணவர்கள் கல்வி கற்கவும் மூலகாரணங்களாக அமைந்திருந்தன என்பவைகள் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

"தான் சார்ந்த மக்களின் முன்னேற்றத்துக்காக, அபிவிருத்திக்காக தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டங்களில் மிக நிதானமாகவும் கட்டுப்பாடாகவும் குரல் எழுப்பிய சந்தர்ப்பங்களில் கட்சியுடன் முரண்பட்டபோதிலும், இறுதியில் கட்சியின் தீர்மானத்துக்கு அமைய கட்டுப்பட்டு தீர்வினை மீறாமல் செய்லபட்டு வருகின்ற பண்புள்ள பெரும் மனிதர் திரு.முருகேசு ஆசிரியர்" என்று 'வீரகேசரி' பத்திரிகையின் பழம் பெரும் செய்தியாளர் திரு.எஸ்.செல்லத்துரை அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் தனது சக செய்தியாளர்கள் மத்தியில் குறிப்பிட்டிருந்தார்.

1957 ஆம் ஆண்டு சிறுபான்மைத் தமிழர் மகாசபை நிர்வாகம் பொது உடமை அரசியலாளர் கைக்கு மாறிய போது அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்கள் அபிப்பிராய பேதம் காரணமாக தனது சகாக்களுடன் அதிலிருந்து பிரிந்து சென்று, முற்றிலும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களைக் கொண்ட ஒரு அமைப்பை" சமூக முன்னேற்றக் கழகம்" என்னும் பெயரில் 1959ஆம் ஆண்டு புத்தூரில் திரு.எஸ்.ஞானப்பிரகாசம் அவர்கள் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து நடாத்தி வைத்தார்.

நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் வளர்ப்புத் தந்தையாகத் திகழ்ந்த அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்கள், தான் சார்ந்த தமிழரசுக் கட்சியில் திரு.வைரமுத்து அவர்களையும் தீவிரமாக ஈடுபடச் செய்ததுடன், 1969 ஆம் ஆண்டு உடுவிலில் நிகழ்ந்த கட்சியின் தேசிய மகா நாட்டின் சிறப்புப் பேச்சாளராக தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த சிலப்புச் செல்வர்

திரு.ம.பொ.சிவஞானசிராமணியார் முன்னிலையில் பிரசித்தி பெற்ற "மயானகாண்டம்" நாடகத்தையும் மேடையேற்ற வைத்தார்.

"செந்தமிழ வளரும் யாழ்ப்பாணத்தில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் நடிகமணி வைரமுத்து போன்றவர்களால் ஈடிணையற்று வளர்கிறது" என்று திரு.ம.கௌசி அவர்கள் வைரமுத்து அவர்களைப் பாராட்டி பேசினார்.

தமிழரசுக் கட்சியுடன் இருந்த தீவிர ஈடுபாடு அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்களின் சிந்தனையில் உள்ளக்கிடக்கையில் சிறப்பாக அவரின் வாழ்வின் பிற்பகுதியில் தீவிர மாற்றத்தை ஏற்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

1953 இல் தமது இல்லத்துக்கு "சித்தார்த்தர் அகம்" என்று நாமம் சூட்டி "எல்லோரும் வாருங்கள், புத்த மதத்தில் சேருங்கள், எமது மக்கள் முன்னேறுவதற்கு சிறந்த வழி சிங்களம் படிப்பதேயாகும்" என்று அறைகூவல் விடுத்த அமரர்.முருகேசு ஆசிரியர் அவர்கள், 1972ஆம் ஆண்டு புத்தூரில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் பரப்புரைக் கூட்டத்தில் பௌத்த சிங்களப் பாடசாலைகள் யாழ் குடாநாட்டில் அமைக்கப்படுவதை கண்டித்துப் பேசியதுடன் "சலுகைகளுக்காக மதம் மாறுவதும், இனத்தை விற்பதும், காட்டிக்கொடுப்பதும் கோழைத்தனமான செயல்" என்று தமது உள்ளக் கிடக்கையை துல்லியமாகச் சொல்லி வைத்தார்.

1957 ஆம் ஆண்டு சிறுபான்மைத் தமிழர் மகாசபை மகாநாட்டிலும் அந்தி இழைத்தாலும் தமிழரை விட்டு விலகோம்" என்று அமரர் சூழுரைத்தமையும் இங்கு நினைவு கூரத்தக்கது.

கோப்பாய் கோமான் திரு.சி.வன்னியசிங்கம் அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்களுக்கு அப்போதைய கௌரவப் பட்டங்களான முகாத்திரம், முதலியார், ஆகிய பட்டங்களில் ஒன்றுக்கு சிபார்சு செய்ய விரும்பினார். ஆனால் அமரர் அவர்கள் விரும்பவில்லை.

1956 ஆம் ஆண்டில் முதன் முதலாக வழங்கப்பட்ட சத்தியப்பிரமாண ஆணையாளர் பட்டத்துக்கு கூட அவர் தனது பெயரைத்

தவிர்த்து திருவாளர்கள் M.S.சீனித்தம்பி E.Y.செல்வரத்தினம், எஸ்.ஞானப்பிரகாசம் ஆகியவர்களுக்கு வழங்கும்படி அரச அதிபருக்கு மகாசபை சார்பாக சிபார்சு செய்தார்.

அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்கள் விரும்பி இருந்தால் செனெற்றராக நியமனம் பெற்றிருக்கலாம். பாராளுமன்ற உறுப்பினராக வந்திருக்கலாம் ஆனால் பட்டத்தையும் பதவியையும் ஏற்றுக் கொள்வதில்லை என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார்.

சமூக, சமய அமைப்புகளின் தலைவர்கள், நிர்வாகிகளுடனும் அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்கள் மிகவும் ஈடுபாடு, தொடர்புகள் உடையவராக இருந்தார்.

யாழ் மாவட்ட அரச அதிபர் திரு.எம். ஸ்ரீகாந்தா, உயர்நீதிமன்ற நீதியரசர்களான திரு.எஸ். சிவசுப்பிரமணியம், எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் சி.குமாரசாமி, ஸ்ரீபத்மநாதன் முதலானவர்களுடன் அமரர் கொண்டிருந்த உறவு, 1956 ஆம் ஆண்டில் எதுவித ஆரவாரமுமின்றி நல்லூர் கந்தசாமி கோவில் உட்பட ஆறு பிரபல ஆலயங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் சென்று வழிபட வழிவகுத்தது.

1968 ஆம் ஆண்டு யாழ் மாவட்ட அரச அதிபராக இருந்த திரு.வேணன் அபய சேகரா அவர்கள் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக யாழ் செயலகத்தில் கூட்டிய ஒரு கூட்டத்தில் "சைவசமய ஆகமவிதிகளை மீறி ஆலய பிரவேசம் செய்யத் தூண்டும் அரச அதிகாரிகளுக்கு இறைவன் தண்டனை கிடைக்கும்."

என்று சைவ அனுட்டான சபைத் தலைவர்கள் கூறினார்கள்.

"அப்படியானால் யாழ் மாவட்ட அரச அதிபராக இருந்த திரு.எம்.ஸ்ரீகாந்தா, காணி நீர்ப்பாசன மின்சக்தி எரிபொருள் அமைச்சின் நிரந்தர செயலாளராகப் பதவி உயர்வு பெற்றார். உயர் நீதிமன்ற நீதி அரசராக இருந்த திரு.எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா உச்சநீதிமன்ற நீதி அரசராக பதவி உயர்வு பெற்றார். இவைகள் இறைவன் தண்டனையா?" என்று தமிழரசுக் கட்சி மேடைகளில் எதிர்க்கேள்விகள் எழுப்பி வாயடைக்கச் செய்தார். அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்கள்.

இவ்வாறு தான் சார்ந்த பின்தங்கிய சமூகத்தின் நலனுக்காக நல்வாழ்வுக்காக அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தின் விடிவுக்காக அச்சமூகத்துடன் பல தசாப்தகாலமாகப் பல்வேறு வகையான தொடர்புகளை வைத்திருந்தமையால், அச்சமூகத்தின் பலம், பலவீனம், என்பனவைகளை நன்கு தெரிந்து உணர்ந்து அதன் அடிப்படையில் சமூகத்தை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் முகமாக "தன் வழி .தனி வழி" என்ற ரீதியில் தமிழரசுக் கட்சியைத் தேர்ந்தெடுத்து அவர்களுடன் இணைந்து ஒன்றுபட்டு செயலாற்றுவதன் மூலம் வரலாற்று முக்கியத்துவம் கொடுத்த பெருமைக்குரிய வராக அமரர்.க.முருகேசு ஆசிரியர் அவர்கள் திகழ்ந்தார் என்று கூறுவது சாலப் பொருந்தும்.

"வாழ்க முருகேசனார் நாமம்
வாழ்க அவர்தம் இலட்சியம்"

# 7

## முயற்சியினால் உயர்வு பெற்ற முன்னோடி

செ.சிவசம்பு
வளாயூர்

அல்வையூர் பெற்றெடுத்த மூதறிஞர் முருகேசர்
பல்சார்பும் பெற்றுயர்ந்த பண்புடை பெருமகனார்
இல்லாதார் வாழ்வுயர ஏற்ற வழி காட்டியவர்
நல்நெறியில் வாழ்ந்ததினால் நாடவரைப் போற்றிநின்றும்

முத்தமிழ் வித்தகர் முருகேசு உபாத்தியாயர்
பக்தியில் மிக்கவர் பண்பினில் சிறந்தவர்
சத்தியம் காத்தவர் சமரச நெறியினர்
நித்தியம் நாட்டிற்கு நற்பணி புரிந்தவர்.

முயற்சியினால் உயர்வு பெற்ற முன்னோடி முருகேசு உபாத்தியாயர்
அயர்ச்சியின்றிப் பாடுபட்டு அடக்குமுறைக்காளானோர் விடுதலைக்குத்
தளர்ச்சியின்றி உழைத்ததினால் தலைநிமிர்ந்து வாழுகின்ற மக்களின்றும்
வளர்ச்சிக்கு வித்திட்டு வாழ்வளித்த தலைவரென்று போற்றுகின்றார்

சாதி மத பேதங்களின் ஏற்றத்தாழ்வால் கூறுபட்டுத் தமிழ் மக்கள்
மோதியதால் சொத்துசுகமிழந்து சுதந்திர வாழ்வுமின்றி வாடியவர்
நீதி நியாயத்தைப் பெற்றுலகில் நிம்மதியாய் வாழ்வதற்கு வழி சமைத்து
மேதினியில் மேன்மையுடன் வாழ்ந்தவர்தான் முருகேசு உபாத்தியாயர்

தந்தை செல்வா தோற்றுவித்த தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்தியங்கி
இந்த மண்ணில் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருமே ஏற்றத்தாழ்வின்றி
பந்தபாச உறவு கொண்டு பழந்தமிழர் பண்பு போற்றி வாழ்ந்திடவே.
கந்த முருகேசு உபாத்தியாயர் செய்த பணி காலமெல்லாம் நிலைத்திருக்கும்.

# 8

## மனிதரில் ஒரு மாணிக்கம்

த.சின்னத்துரை தமிழரசு
வன்னியசிங்கம் வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

அமரர் க.முருகேசு ஆசிரியரவர்கள் மண்ணுலக வாழ்வை நீத்தார் என்ற செய்தியை தொலைபேசியில் அவரது மகன் கந்தவரோதயன் தெரிவித்த பொழுது அவரை நினைத்து உருகினேன். சில நிமிடங்கள் மௌனமாகப் பிரார்த்தித்தேன்.

"நிறை மொழி மாதர் பெருமை நிலத்து
மறை மொழி காட்டி விடும்"

என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு அமைய வாழ்ந்தவர். இவர் ஒரு நாட்டுப்பற்றாளர்; சமயப்பற்றாளர்; சமுதாயப் பணியாளர். உற்றார் உறவினர்களை உயர்த்தியவர், நலிந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் தன்னை அறப்பணித்த நல் ஆசிரியர். தன் குடும்பத்தையும் போற்றி வளர்த்தவர்.

இவரை மனிதரில் ஒரு மாணிக்கம் என்றுரைக்கலாம். இவரை நான் முதற் கண்டது இலங்கைத் தமிழரசுக் கட்சி, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் 1957 ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகத்தின் தலைமையில் நடந்த பொதுச் சபைக் கூட்டத்திற்கு வந்திருந்தார். இவர் அப்போது அவ்வாயூரில் இருந்தே வந்தார். அப்போது தமிழரசுக் கட்சிப் பொதுச் சபையில் அனேகமானவர்கள் ஆசிரியர்கள் இருந்தனர். அரசாங்கம், அரசாங்க உத்தியோகத்தர்கள் அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்கக் கூடாதென்று தடை செய்தபடியால் இவர்களெல்லாம் விலகி உணர்ச்சியுடன் செயல்பட்ட காரணமாகவே தமிழரசுக் கட்சி தமிழ் மக்களால் ஏகோபித்து ஏற்றுக்கொள்ளப்பட்டமை வரலாறு ஆகும்.

அமரர் அவர்கள் தான் ஓர் ஆசிரியராக வந்ததும் தன் சமூகத்தில் பலரைக் கல்வியில் முன்னேற்ற ஆதரவு கொடுத்து உயர்த்தியுள்ளார். அவர் உறவினர்களில் சிலரைத் தனது வளர்ப்புப் பிள்ளைகளாக்குவதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளார். அவர்களுள் நடிகமணி வைரமுத்து, கணக்காளர் கருணாநிதி, தங்கத்துரை, இந்திராதேவி போன்றவர்களையெல்லாம் தன் பிள்ளைகளாகவே வளர்த்து முற்றேற்றியுள்ளார். புத்தூர் மணற் பகுதியில் (தற்போது ஆவரங்கால் கிழக்கு) ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக அதற்கான ஆலோசனைகள் நடைபெற்ற வேளை 1957 ஆம் ஆண்டு அல்வாயூரில் இருந்து க.முருகேசு ஆசிரியர், கவிஞர் மு.செல்லையா, சைவப்புலவர் வல்லிபுரம் ஆகியோர் பல முறை இங்கு வந்து ஆலோசித்துத் திட்டம் தீட்டி, ஆரம்பக்கட்ட வேளையில் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டி ஏற்பட்ட பொழுது இப்பிரச்சினையைக் கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் கோமான் வன்னியசிங்கம் அவர்களிடம் போய் பேசுவதற்கு சி. அரியகுட்டி, ச.கந்தையா, க.முருகேசு ஆசிரியர் இவர்களுடன் நானும் சென்று தெளிவுபடுத்தியதை ஏற்றுக்கொண்ட பா உ அவர்கள் பாடசாலை விடயம் முழுவதையும் செய்துதவியதை என்றும் மறக்க முடியாது.

ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ விஷ்ணு வித்தியால முதல் அதிபராகக் கடமையேற்ற அமரர் அவர்கள் பாடசாலை முன்னேற்றத்திற்குத் தன்னாலான முழு முயற்சிகளையும் செய்தார். அதன் நிமித்தம் பாடசாலை மிகத் துரிதமாக வளர்ச்சியடைந்தது. பல மாணவர்கள் சிறந்த கல்விமான்களாகவும் அரசாங்க அதிகாரிகளாகவும் சமூக சேவகர்களாகவும் இருப்பது சாட்சிகளாகும்.

அமரர் அவர்கள் விஷ்ணு வித்தியாலய அதிபராகியதும் அருகிலேயே வீடெடுத்து வாழ்ந்த காரணத்தால் பாடசாலைப் பிள்ளைகளை சமய ஆசார முறைப்படி பயிற்றுவிப்பதற்காக அருகில் இருந்த ஆலயத்தை அம்மன் ஆலயமாக புதுப்பித்து வழிபட வழிவகுத்தார். இப்போது அந்த ஆலயம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்மனாக பெருவளர்ச்சி பெற்றுள்ளது.

அவர் தன் சொந்த ஊரிலும் ஆலயம் கட்டி அறப்பணி செய்துள்ளார். நானும் அரசியல் ரீதியாகவும், சமுதாயப் பணி விடயமாகவும்பலமுறை இவரின் வீட்டிலிருந்து இவருடன் சம்பாசித்துள்ளேன். இவர் ஒரு சிறந்த

ஆசிரியர்; சிறந்த விவசாயி; பரந்த சிந்தனையாளர்; நல்ல சமூக சேவையாளர், பழகுவதற்குப் பண்பாளர், எனக்கு ஒரு நல்ல நண்பர் தம் சமூகத்துக்குக் கல்வி மூலம் பெருமை சேர்த்த ஒரு பெரியார்.

"பிறர் பிள்ளைகளைத் தடவி வளர்த்தால் தன் பிள்ளைதானே" வளரும் என்ற முதுமொழிக்கமைய இவரது பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் சிறந்த அறிவாளிகளாகவும், பண்பாளர்களாகவும் உயர்ந்துள்ளமை சாட்சியாகும். இவரது துணைவியார் மு.கமலவேணி பிள்ளைகளான இந்திராவதி, கந்தவரோதயன், இராஜவரோதயன், இந்திரோதயன் மருமகன் கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை, பேரப்பிள்ளைகளான கௌசல்யா, மாதவி, பூங்குன்றன், திருப்பரங்குன்றன், தமிழரசி, தமிழாரணி, சித்தார்த்திகா, பூட்டப்பிள்ளைகளாக சைந்தவன், லஷ்மி, சுருதி, சேயோன், சாருகன் மற்றும் எல்லோருக்கும் எனது அன்பான ஆறுதலைத் தெரிவிக்கின்றேன்.

இறுதியாக நான் முருகேசு ஆசிரியரை 2004 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நேரில் பார்த்தேன். அப்பொழுது ஞாபக சக்தி குறைவாக இருந்தபடியால் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. ஆனாலும் நான் லண்டலில் இருந்தாலும் ஊர் போகும் ஒவ்வொரு முறையும் போய்ப் பார்த்தது எனக்குத் திருப்தியைத் தருகின்றது. இவர் இவ்வுலக வாழ்வில் பரிபூரணமாக 95 வயது வரை வாழ்ந்து இறைவனடி சேர்ந்துள்ளார். இவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

*K.Sinnathurai J.P*
*63, Laweience Road,*
*EASTHAM*
*London - E 6 / JN*

# 9

## எமது கிராமத்தின் முதல் உபாத்தியாயர் முதன்மை உபாத்தியாயர்

மு.செல்லப்பாக்கியம் ஓய்வு பெற்ற அதிபர்,
துன்னாலை.

எமது கிராமத்தின் முதல் முதன்மை உபாத்தியாயர் அமரர் உயர் திரு.க. முருகேசு உபாத்தியாயர் ஆவார். அவர் எனது மைத்துனர் ஆகவும் பக்கத்து வீட்டுக்காரனாகவும் இருந்தார். இவற்றிலும் மேலாக எழுத்தறிவித்த முதல் ஆசான் பாலர் வகுப்புத் தொடக்கம் ஒன்பதாம் வகுப்பு (S.S.C.) சித்தியடையும் வரை அவருடைய மாணவனாக இருந்தவன் நான் அவருடைய சேவை இலக்குகளில் கல்வி, சுதந்திர சமூகம், கலை கலாச்சாரம், சமயப்பணி என்பவற்றை மட்டும் குறிப்பிட வேண்டிய கடமைப் பாடுடையோன். ஏனையவற்றை எல்லாம் மற்றையோரும் ஆராய விட்டு விடுகிறேன்.

அல்வாய் வடக்கு எமது கிராமம் இங்கே சில நூற்றாண்டு காலத்துக்கு முன்பே பல கல்விமான்கள், வைத்தியர்கள், சோதிடர்கள், நாதஸ்வர வித்துவான்கள், தவில் வித்துவான்கள், மிருதங்க வித்துவான்கள், சிறந்த பாடகர்கள், நடிகர்கள் முதலானோர் வாழ்ந்தனர். பல்வேறு வளங்களையும், பெருந்தொகையான எமது சமூகத்தவரை உள்ளடக்கிய கிராமமாகத் திகழ்கிறது.

இவை அனைத்துக்கும் மேலாக அரசினரால் பயிற்றப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட முதல் ஆசிரியர் திரு.க.முருகேசு ஆசிரியரே ஆவார். அவர் எமது கிராமத்தின் தவப்புதல்வர். துன்னாலையில் பிறந்து அல்வாயில் வளர்ந்த ஆசிரியப் பெருந்தகை.

எமது சமூகத்தின் வளர்ச்சிக்கு கல்வியே "கருப்பொருள்" எனக் கருதினார் அதற்காக கூடிய நேரத்தை செலவிட்டார். தன்னுடைய சம்பளத்தில் ஒருபகுதியினை வறிய பிள்ளைகளின் கல்விக்காக இற்றைவரை செலவிட்டு வந்தார். எமக்கு ஒரு பாடசாலை இல்லையே என கவலையுற்றிருந்தார். நான் 02.01.1951 ஆம் ஆண்டு ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற சென்றிருந்தேன்.. எனது பாடசாலை விடுதலை நாட்களில் எங்களுடைய தெரு மணலில் இருந்து கதைப்போம். குருவும், மாணவனுமாக இருந்துதான் கதைப்போம். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பிற்காலத்தில் ஆசிரியப் பெருந்தகை தமிழரசு கட்சி அங்கத்தவராக இருந்து சமூகப் பணிகளை ஆற்றினார். நான் பொதுவுடமை கட்சி ஆதரவாளராக இருந்து சமூகப்பணி புரிகின்றேன். இருவரும் சமூகப்பணிதான் ஆற்றினோம். நோக்கு ஒன்று பாதை வெவ்வேறு. ஆனால் எமது உறவில் எவ்வித மாற்றமும் இல்லை.

கல்விக்காக ஆற்றிய சேவைகளில் ஒன்று ஸ்ரீலங்கா வித்தியாசாலை. அமரர் திரு.க.முருகேசு அதிபர் அவர்களின் நினைவாலயமாகத் திகழ்கின்றது என்றால் மிகையாகாது. அவருடைய நீண்டகால நினைவு நிறைவேற திருவருள் ஒரு அரிய சந்தர்ப்பத்தை அருளியது. இதோ!

நீண்டகாலம் தேவரையாளி சைவவித்தியாசாலையில், தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர் கவிஞர் திரு.மு.செல்லையா அவர்கள் அவரை அதிபர் பதவியிலிருந்து பாடசாலை நிர்வாகம் விலக்கியது. அன்று தொடக்கம் அதிபர் அவர்களும் பாடசாலைக்கு சமூகம் அளிப்பதை நிறுத்திக் கொண்டார். இதனைக் கேள்வியுற்ற மக்கள் கொதித்தெழுந்தனர். இச் செயலை ஜீரணிக்க முடியாத அல்வாயூர் மக்கள் ஆசிரியப் பெருந்தகை கவிஞர் திரு.மு.செல்லையா அவர்களை மீண்டும் ஒரு பாடசாலையில் அதிபராக அமர வைக்க வேண்டும் என ஆவலுற்றனர். அதற்கு என்ன செய்ய வேண்டும். பாடசாலை கட்ட வேண்டும். சாலப் பொருத்தமான இடம் அல்வாய் வடக்கே எனத் தீர்மானித்தனர். இப்பாடசாலைக்கு தேவையான நிலத்தை உரிமையாளராகிய பெருந்தகைகள் அனைவரும் அன்பளிப்பாகக் கையளித்தனர். நிலம் கிடைத்து விட்டது. கட்டிடம் கட்ட மூலதனம் வேண்டும்

அல்லவா ? அப்பொழுது "அல்வாய் வடக்கு புனருத்தாரண ஐக்கிய வாலிபர் சங்கம்" பன்னிரண்டு வருடங்களாக இயங்கி வந்தது. அதன் முக்கிய இலக்கு எமது கிராம மக்களுள் இருந்த ஏற்றத்தாழ்வுகளை நீக்கப்பாடுபடுதல் ஆகும். இந் நோக்கு தொடர்ந்து வெற்றி ஈட்டிக்கொண்டு வந்தது. ஆண்டு தோறும் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்று வந்தது தலைவர் பொருளாளர்கள் மாறி மாறிப் பதவி வகித்தனர். நானே தொடர்ந்து செயலாளராக கடமையாற்ற வேண்டியவனாய் இருந்தேன் இதே வேளையில் எமது புனருத்தாரண ஐக்கிய வாலிப சங்க அங்கத்துவப் பணமாகச் சேர்த்த ஆயிரத்து ஐநூறு (1500) ரூபாவையும் பாடசாலையின் கட்டிடத்தின் ஆரம்ப மூலதனமாக எமது சங்கத்தின் சார்பாக மனம் உவந்து கையளித்தோம். பாடசாலைக் கட்டிடம் ஆரம்பமானது. பணம் படைத்தவர் பணமாக வாரி வழங்கினர். பொருள் நிறைந்தவர் வேண்டியளவு பொருட்களை அள்ளிக் கொடுத்தனர். உடல் வளம் கொண்டோர் இரவும் பகலும் உடல் உழைப்பை சலியாது வழங்கினர் ! இவர்கள் அனைவரது ஒத்துழைப்புப் பெற்று பாடசாலை உருவானதைக் கண்டு இதற்கு முன்னின்று உழைத்த ஆசிரியர் பெருந்தகை திரு.க.முருகேசு உபாத்தியாயர் பெருமகிழ்ச்சி அடைந்தார். ஆனால் அவருக்குப் பெரும்பணி ஒன்று காத்திருந்தது. அதுதான் பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்க வைப்பது அக்கடினப் பணியை கவிஞர் திரு.மு.செல்லையா அதிபர் அவர்களும், திரு.க. முருகேசு அதிபர் அவர்களும் தங்களுக்குள்ள செல்வாக்கினையும், ராஜதந்திரத்தையும், மதிநுட்பத்தையும் பாவித்து பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்க வைத்தனர். பாடசாலை அவர்களின் சாணக்கியத்தை கட்டியங்கூறி நிற்கின்றது. பாடசாலைக் கட்டிடத்தினையும், பிள்ளைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்று கவிஞர் திரு.மு.செல்லையா அதிபரிடம் கையளித்து இக் காட்சியை கண்ணுற்ற அல்வாயூர் மக்கள் பெரும் மகிழ்ச்சியை அடைந்தனர். தமது முயற்சி வெற்றியடைந்ததை இட்டு ஆர்ப்பரித்தனர். அதிபர் அவர்களும பாடசாலை வளர்ச்சியுற அயராது உழைத்தார். கவிஞர் மு.செல்லையா அதிபர் அவர்களின் மாணவனாக இருந்த நான் அல்வாயூர் ஸ்ரீலங்கா வித்தியசாலையில் அவரின் கீழ் சில காலம் ஆசிரியப் பணி புரிய சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு பெரும் பேறாக எண்ணி பெரும் மகிழ்வு அடைகிறேன்.

**சமூக விடுதலைப் போராட்டங்களில் ஒன்று**

யாழ் மாவட்டம் ஒரு காலத்தில் வன்னிப்பிரதேசத்தையும் உள்ளடக்கி இருந்தது. அக்காலத்தில் பெரும்பான்மைத் தமிழ் மக்கள் சிறுபான்மைத் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அவர்களுடைய உரிமைகளைப் பறித்து ஆண்ட காலம் ஒன்று வலுப்பெற்று இருந்தது. அக்காலத்தில் அரசதிணைக்கள கதிரைகளிற்கூட நாம் அமர்ந்திருக்க உரிமை மறுக்கப்பட்ட காலம் ! அது பாடசாலைகளில் கல்வி கற்க சமமாக இருக்க உரிமை மறுக்கப்பட்ட ! எமது மக்களின் வாக்குரிமையைப் பெற்று எமக்குரிய கதிரையை தமது உரிமையாக்கி எங்களை ஆண்டு எங்களுக்கு அரசாங்கத்தால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிகளில் இருந்து ஒரு சிறு பகுதியை மட்டும் தெளித்துவிட்டு மிகுதி தமது மக்களுக்கு வழங்கிய காலம் ஒன்று உண்டு. அதுதான் கிராமச் சங்கம் இருந்த காலம். இவற்றையெல்லாம் கண்ணுற்ற மக்கள் பொறுத்தது போதும் நமது உரிமையை நாமே பெற வேண்டுமென ஒன்று கூடினர்.

கட்டவேலி கிராம சபையில் அல்வாய் வடக்கு இரு வட்டாரங்களைக் கொண்டது ஒன்று இன்பருட்டி வட்டாரம், மற்றையது அம்மன்கோயில் வட்டாரம். இவற்றில் துணிவு மிக்க தகமையுடைய திருவாளர் க.முருகேசு ஆசிரியர் அவர்களை இன்பருட்டி வட்டாரத்துக்கும் திருவாளர் நா.சீனித்தம்பி வர்த்தகனார் அவர்களை அம்மன் கோயில் வட்டாரத்துக்கும் அபேட்சகராக போட்டியிட நிறுத்தினார்கள். இவ்விருவரும் எவ்வகை ஆபத்து, இடையூறுகள் ஏற்பட்டாலும் போட்டியிடுவதென துணிந்து கட்டுப் பணத்தைச் செலுத்தி போட்டியிட்டனர். அன்று தொடங்கி எம்மக்களுக்கு பல்வகையான துன்பங்கள் பொருளாதாரத் தடைகள் உயர் சாதியினரால் உண்டானது. போட்டியிட்ட இரு வட்டாரங்களிலும் எமது அங்கத்தவர்கள் இருவருமே வெற்றி பெற்னர்.

அல்வாய் வடக்கு வீரபத்திரர் கோவிலடியில் இன்பருட்டி வட்டார வாக்களிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. இவ்வாக்களிப்பு நிலையத்தில் ஆசிரியர் திரு.முருகேசு அவர்களின் முகவராக (போலின் ஏச்சன்) அமரர்.திரு.கா.க.கிருஸ்ணபிள்ளை ஆசிரியர் கடமையாற்றினார். அந்த நிலையத்திற்கு வாக்களிக்க வரும் ஒவ்வொரு வாக்காளர்களையும் சரியாக

கண்டறிந்து உறுதிப்படுத்தக் கூடிய திறனும் உறுதியும் கொண்டிருந்தார். எவரும் எவ்வித தவறும் செய்ய இடம் கொடுக்காது தடுத்து நிறுத்தி சரியான முறையில் செயற்பட்டு, வெற்றிவாகை சூட முன் நின்று உழைத்தவர். இரவு பகல் என்று பாராது அரும் பாடுபட்டு வெற்றிக்காக மேன்மை தங்கிய அமரர் திரு.கா.க.கிருஸ்ணபிள்ளை ஆசிரியர் அவர்களையும் இவ்விடத்தில் நினைவு கூறுதல் சாலப் பொருத்தமானது. வாக்களிப்பு முடிந்தது. பெறுபேறு அறிவிக்கப்பட்டது. திரு.க.முருகேசு ஆசிரியர் வெற்றி பெற்றார். என்று தெரிவு அத்தாட்சி அலுவலர் உறுதிப்படுத்தியதன் தாமதம் வெற்றியைத் தாங்கிக்கொள்ள முடியாத் தோல்வியைத் தழுவிய உயர் சாதியினரும் அரச பாதுகாப்பு துறையினரும் (பொலிஸ்) எமது மக்களைத் தாக்கினர். கலவரம் மூண்டது ! எமது சுதந்திர விடுதலை வீரர்களும் போர் மூர்க்கம் கொண்டு எதிர்த்துப் போராடினர் ! கலவரம் உச்சக்கட்டத்தை அடைந்தது ! பெண்களும் சிறுவர்களும் சிதறி ஓடினர் ! சிறிது நேரத்தின் பின் கலவரம் குறைந்தது. உயர் சாதியினரும் அரச பாதுகாவலரும் கைப் பொல்லுகளை (பற்றன்) இழந்தனர். பொலிசாரோடு நேருக்கு நேர் நின்று போராடிய ஒரு சில விடுதலை வீரர்களின் பெயர்களையாவது நினைவு கூறுதல் எனது கடமையென நான் நினைக்கின்றேன். வண்டியவத்தை திரு.க.மகாலிங்கம் ( நெருப்பு) துன்னாலை திரு.இ.ராசையா (இரும்பு) காட்டுப்புலம் அமரர் திருவ.தாமலிங்கம் ஆலங்கட்டை திரு.வ.முருகேசு (திருத்தணி) ஆலங்கட்டை அமரர் திரு.பொன்னுத்துரை (டாக்டர்) அம்மையன் திடல் அமரர். க.சின்னததுரை (துன்னாலை வீடு) துன்னாலை அமரர் திரு.சி.கிருஸ்ணபிள்ளை (சமூகப்பிரியன் , ஆலங்கட்டை அமரர்.திரு.சி.செல்லையா (லீமா செல்லர்), பாணம்பத்தை அமரர். திரு.கா.சுப்பிரமணியம் போன்ற பல வீரர்கள் எமது (சமூகத்தின்) விடுதலைக்காக தம் இன்னுயிரையும் ஈயத் தயாராகினர். என்பது குறிப்பிடத்தக்கது. எமது மக்களின் ஆற்றலையும், ஒற்றுமையையும், எல்லா வளங்களையும் ஒன்று திரட்டி வெற்றி பெற்ற பெருமை அமரர் உயர்திருக.முருகேசனாருக்கே உரியது ஆகும்.

**கலை கலாசாரம்**

பண்பும் பயனும் உடைய மக்களாக வாழவேண்டுமானால் அவர்களிடம் கலை, கலாசாரம் ஓங்கி வளர்ச்சி அடைய வேண்டும். அதனை வளர்க்க பல நாடகங்களைப் படைத்தார். அவற்றிற்கு வசனம் பாட்டு

என்பவற்றைத் தானே எழுதினார். நாடகத்தில் வரும் பாத்திரங்களுக்கு ஏற்ப நடிகர்களைத் தெரிந்து பழக்கினார். திறம்பட நடிப்பித்தார். ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி இரவு அல்வை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் நாடகத்தினை அரங்கேற்றம் பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. சில வருடங்களுக்கு முன்பு எமது வட அல்வையை அண்டியுள்ள ஐந்து கிராமங்களும் யாழ் மாநகர சபை மண்டபத்தில் போட்டி நாடக விழா ஒன்றினை நடாத்தினர். அதில் வட அல்வை கிராமம் சார்பாக நடித்த 'சகுந்தலை' நாடகம் முதல் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்டமை போற்றுதற்குரியதாகும். இந்நாடக வசன கர்த்தாவாகவும், பாடல் ஆசிரியராகவும், சிறந்த ஒப்பனையாளராகவும், இயக்குனராகவும், செயற்பட்டு அழியாப் புகழ் பெற்ற பெருமை அமரர் திரு.க.முருகேசனாருக்கே உரியதாகும்.

**சமயப்பணி**

வட அல்வை அரசடி ஆலயமுன்றலில் தவழ்ந்து எழுந்து ஆடித்திரிந்தவருள் நானும் ஒருவன். ஆலயப் பணியில் சிறிய வயது தொடக்கம் இன்றுவரை என்னால் இயன்ற பணி புரிந்து வருகிறேன். எமது முன்னோர்கள் பரம்பரை பரம்பரையாக சமய கலாசாரமுடையவர்களாக வாழ்ந்தனர். அவர்களுள் சமயப்பற்றுடைய வயது முதிர்ந்த ஒருவரை கோயில் மணியகாரராக (முகாமையாளராக) காலத்துக்குக் காலம் நியமித்து வந்தனர். அவரின் வழிகாட்டலில் ஆலயத்தில் நித்திய பூஜை, விசேட தினப்பூஜை பிள்ளையார் கதைப் பூஜை, திருவெம்பாவைபூஜை என்பன நடைபெற்று வந்தன. சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த இவ் விநாயகர் ஆலயம் எம்முன்னோரால் நீண்டகாலம் வழிபட்டு வந்தமை என்பது பெருமைக்குரியது. ஆனால் இவ் ஆலயத்திற்கு ஒரு பொது நிர்வாக கட்டமைப்பு ஏதும் இருக்கவில்லை. இதனை நிவர்த்தி செய்ய மக்களும் அமரர் திரு.முருகேசு ஆசிரியரும் சேர்ந்து 1940 ஆம் ஆண்டு ஒரு ஆலய பரிபாலன சபையை உருவாக்கினர். இச்சபையை ஒழுங்குற நடாத்த ஒரு யாப்பையும் தயாரித்து திரு.க.மு.அவர்கள் வயது முதிர்ந்த காலத்திலும் பெரும் ஆலோசனையும் வழங்கி வந்தார். இறுதி வரை அரசடி ஐங்கரனின் திருப்பாதம் தொழுது இறைவனடி சேர்ந்தார்.

இற்றைவரை அமரர் ஆற்றிய ஒவ்வொரு பணிக்கும் ஒவ்வொரு உதாரணங்களே சான்றாகப் பகர்ந்துள்ளேன். அவரது சேவை எண்ணில் அடங்காதவை. அவர் எங்கள் கிராமத்துக்கு மட்டுமல்ல் எமது சமூகத்தவர்கள் எங்கெங்கு உள்ளனரோ அங்கங்கெல்லாம் அவர் சேவையாற்றி இருந்தார். அவர் சென்று தங்கிய இடங்களில் எல்லாம் கலைக்கூடமாகவும், நூல்நிலையமாகவும் அருள் நிறை ஆலயமாகவும் காட்சி கொடுத்து காட்சிபகர்கின்றன. அமரர் அவர்கள் இறுதியில் தான் பிறந்து வளர்ந்து முத்தமிட்ட மண்ணிலேயே பூதவுடலை சேர்த்துக்கொண்டார். என்றால் அன்னாரின் நாட்டுப்பற்று எத்துணை அளப்பரியது . அன்னாரின் ஆன்மா சாந்தியடைய அரசடி ஐங்கரனை வேண்டுகிறேன்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!**

# 10

## "வட அல்வை முருகேசனாரின் வாழ்வும் பணிகளும்"

சுகணா

வட அல்லையில் ஆசிரியர் பரம்பரை என்னும் ஆணிவேரில் இருந்து அவதரித்தவர் முதுபெரும் ஆசான் க.மு.முருகேசு அவர்களாவர். தலைமைத்துவத்திற்குத் தகுதியும், கல்விக்குக் கலங்கரை விளக்கமாகவும் அவர் வாழ்ந்தார். அவருக்குக் கலாசாரம் என்பது காந்திய வழியில் வந்தது. பண்பாடு என்பது பண்பட்ட சைவநெறியில் இருந்து பரிணமித்தது. இவற்றிற்கு எல்லாம் உயிரூட்டி, உரமூட்டி வளர்த்த பெருமை இவர் தந்தை கந்தப்பு ஆசிரியருக்கே உரியது.

"அவையத்து முந்தி இருக்கச் செய்தல் என்றம் வள்ளுவர் வாக்கிற்கு வழிகாட்டியாகவும், வாழ்ந்தும் காட்டியவர் க.மு.வின் தந்தை கந்தப்பு உபாத்தியாரே.

சமுதாயச் சீர்கேடுகளையும், சிக்கல்களையும் கண்டு ஒளித்தோடிய வல்லவர் க.மு. நெஞ்சிலே உரம்கொண்டு நேரிய வழியிலே நெருப்பாறுகளை நீந்திக் கடந்து வந்தவர் அவர்.

அவரது வாழ்வு ஒரு வரலாறாகும். அவரது முடிவு ஒரு சகாப்தமாகும்.

காந்திய வழியென்னாது கோளைகளின் ஆயுதமல்ல அது முரட்டுத் தனமான எதிரிகளின் மண்டை ஓட்டிற்குள் புகுந்து அவனது மூளைக்கு அடிகொடுக்கும் அற்புதமான ஆயுதமாகும். எதனைத் தனது நடை, உடை, செயற்பாடு அனைத்திலும் செய்து காட்டிய செம்மனச் செம்மல் க.மு.ஆவார்.

கத்தியின்றி , யுத்தமின்றி ஒரு இரத்தம் சிந்தாப் புரட்சியினை ஏற்படுத்தவே அவர் கனவு கண்டார். இதைக்கண்டு உயர் சமூகத்தினர் பலர் அவரை மதித்தனர். ஒரு சிலர் அவரை மிதிக்க வெளிக்கிட்ட கசப்பான சம்பவங்களும் உண்டு. அதுகண்டு அரவது சமூகம் பூகம்பமாய் பொங்கி எழுந்தது. அவர்களையும் அடக்கியாளும் ஆளுமை கொண்டவர் க.மு.அவர்களே.

இவரது பேச்சிலும், மூச்சிலும் தமிழ், சைவம் என்ற இரண்டினதும் வளர்ச்சியையும், பண்பாட்டையும் கண்டேன். அவரது மக்களின் வழிபாட்டிற்காக அரசடி விநாயகர் ஆலயத்தை வளர்த்தார். கல்வி மேம்பாட்டிற்காக ஸ்ரீலங்கா பாடசாலையை தமது மக்களின் உதவியோடு நிறுவினார்.

ஒடுக்கப்பட்ட தமது மக்களின் விடிவிற்கு அம்மக்களிடம் காணப்பட்ட அறியாமை இருட்டினை முதற்கண் அகற்ற வேண்டு மென்பதற்காக அவர் அரும்பாடுபட்டார். அதற்காக தேவரையாளியிலும், அல்வாயிலும், புத்தூரிலும் பாடசாலைகளில் பணியாற்றுவதிலும், முன்னின்று நடாத்துவதிலும் வெற்றி கண்டார்.

"தீண்டத்தகாதவர்" என்ற தீய வார்த்தைகளைத் தீயிட்டுக் கொழுத்த வேண்டுமென்பதற்காக தாமும், தமது மக்களையும் சைவப் பண்பாட்டிலே வளர்த்தெடுத்தார்.

"நாமார்க்கும் குடியல்லோம்" என்ற அப்பர் சுவாமிகளின் வழியில் நின்று பல சைவத்தொண்டுகளை தாம் மரணப்படுக்கையைத் தழுவும் வரை செய்தார்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவன்' என்பதற்கிணங்க பல அறிஞர்களும், கலைஞர்களும் உருவாக வழிகட்டியாக வாழ்ந்து திசைகாட்டி நின்றார்.

எங்கள் அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலின் 9ம் திருவிழா உபயகாரராக முன்னின்று திருவிழாவினை வெகு சிறப்பாகவும், கச்சிதமாகவும் செய்து வந்துள்ளார். ஆனால் கடந்த 60வது ஆண்டின்

தசாப்தகாலத்திலே இந்த ஆலயத்தில் சாதிவெறி...... ஒருவரினால் செய்யப்பட்ட அநீதியையும், அவமானத்தையும் அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை க.மு அவர்களின் உறவினனைச் சேர்ந்த ஒரு பெண்மணி கற்பூரச்சட்டி எடுத்தபோது அதனை ஆலயத்தின் தலைவராக இருந்த ஒரு சாதிவெறியாளர் தட்டிக் கொட்டினான்.

இந்தக் கொடுமையைக் கண்ட க.மு.அவர்கள் கொதித்தெழுந்தார். இச்செயலைக் கண்டித்து விளம்பரங்களை அடித்து விநியோகம் செய்தார். தமது மக்களைப் புத்தமதத்தில் சேருமாறு அழைப்பு விடுத்தார். இதைக் கண்டு இந்து பீடங்களும், சமயத் தலைவர்களும் அச்சமடைந்து க.மு.வை அணுகி ஆறுதல் கூறினர்.

கடந்த ஒரு நூற்றாண்டு காலமாக வாழ்ந்த முருகேசு ஆசிரியர் அவர்கள் தமது அரசியல், சமூக, கல்வி, சமயம், கலை ஆகிய பணிகளால் தமது சமூகத்தை விடுதலைக்காகவும், சமூக மேம்பாட்டிற்காகவும் அர்ப்பணிப்புடன் அயராது உழைத்துள்ளார்.

உண்மையில் அமரர் க.மு.அவர்கள் ஒரு சிறந்த "மனிதாபிமானி" என்பதை அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்வார்.

# 11

## என்னை உருவாக்கிய ஆசான்

அமரர் முருகேசு ஐயாவின் நினைவு மலருக்கு ஆக்கங்கள் பல தேடிவந்து குவிந்த நிலையில் அம்மலரில் எனது சிறிய ஆக்கத்தினையும் இடம்பெறச் செய்த நினைவு மலர் வெளியீட்டுக் குழுவினருக்கு நன்றி கூறி தொடர்கிறேன்.

அமரரின் பன்முகத் தோற்றங்கள் பற்றிய தகவல்கள் அறிஞர் பெருமக்களால் எடுத்து காட்டப்பட்டிருப்பதால் எனது உயர்வுக்கு என்னை உருவாக்கிய ஆசான் ஆற்றிய அளப்பரிய பங்கினை மட்டுமே குறிப்பிட எண்ணுகின்றேன்.

எனக்கு அப்போ 10 வயது ஐந்தாம் வகுப்பு மாணவன் எங்கள் வீட்டிற்கு அருகில் அமரர் ஐயா அவர்கள் குடியிருந்தார். அவ்வீட்டு முற்றத்தில் நான் அடிக்கடி சென்று விளையாடுவேன். விளையாடும் போது ஏதாவது ஓர் பாடலை முணுமுணுப்பது எனது வழமை அன்று சிறிது சத்தமாகவே பாடி விட்டேன். அங்கு வருகை தந்த பெரியார் ஒருவர் எனது பாடலை செவிமடுத்திருக்க வேண்டும் அப்பெரியார் தான் அல்வை கவிஞர் செல்லையா என்பதை பின்னர் அறிந்து கொண்டேன். அமரர் முருகேசு ஆசானும் அந்தப் பெரியாரும் என்னைப் பற்றி உரையாடுவது என் செவியில் வீழ்ந்தது யார் இந்த சிறுவன் நல்ல இசை ஞானம் இருக்கின்றன என் மகன் விவேகானந்தன் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் இசை பயில்கிறான். இவனும் அங்கு சென்றால் நல்ல எதிர்கலாம் உண்டு என்று கூறினார். பதிலாக கரவெட்டி அண்ணாவி புதியார் கிருஷ்ணர். தவில் சின்னத்தம்பி என்ற

பதங்கள் அமரர் முருகேசு ஐயாவின் வாயிலிருந்து வெளிவந்தன விளையாட்டுப் பராக்கில் உரையாடலை முழுமையாக என்னால் செவிமடுக்க முடியவிலலை. எனினும், அவ்வுரையாடல்தான் என் இசைத்துறை உயர்கல்விக்கு வித்தாகியிருந்தது என்பதைப் பின்னர் உணர்ந்தேன். அமரரின் நினைவு வரும்போதெல்லாம் மெய் சிலிர்த்தேன். எனது தந்தையுடன் தொடர்பு கொண்டு என்னை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைக்க அத்திவாரம் அமைத்தார்.

இசைத்துறையில் பட்டம் பெற்றுத் திரும்பிய பின்னர் அமரர் ஐயா அவர்கள் அல்வாய் சிறீலங்கா வித்தியாலயத்தில் தன் சொந்தச் செலவில் மேடைக் கச்சேரி ஒழுங்கு செய்து வடமராட்சி மக்கள் மத்தியில் என்னை அறிமுகம் செய்து வைத்தார். அன்று என்னால் பாடப்பெற்ற "முருகனை நீ நினை மனமே" என்ற பாடல் பலத்த கரகோஷம் பெற்றமைக்கு அமரர் முருகேசு ஐயா அவர்கள் என் உள்ளத்தில் உறைந்திருந்தமையே காரணம் என்றால் மிகையில்லை. உருகிப்பாடும் அறியவனான என் உள்ளமெல்லாம் உறைபவன் மயில்முருகன் மட்டுமல்ல மயிலம்மை புதல்வன் அமரர் முருகேசனார் ஐயாவும் தான்.

அமரரின் நினைவுகள் கண்ணீரை வருவிக்கின்றன. அன்னாரின் ஆத்மசாந்திக்காக நாதசொரூபன் நடராசனை வேண்டி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

"வசந்தம்"
மணற் பகுதி,
புத்தூர்.

சி.பத்மலிங்கம்,
முன்னாள் இசைத்துறை விரிவுரையாளர்
இசைத்துறைத் தலைவர் (யாழ்.ப.க.கழகம்)
சிங்கப்பூர் இசைக் கல்லூரி விரிவுரையாளர்

# 12

## விழுது விட்ட ஆலமரம் வீழ்ந்து மடிவதில்லை!

கனடாவிலிருந்து
க.நவம்.

One hundred years from now
It will not matter
What kind of car I drove
What kind of house I lived in
How much money I had in my bank account

But one hundred years from now
The world may be a little better
Because I was important
In the life of a child

எனது சிறுபருவத்துப் பள்ளி ஆசான் திரு.க.முருகேசு ஆசிரியர் அவர்களது மறைவு குறித்துக் கேள்வியுற்றபோது, மனதில் தோன்றி மறைந்த அநாமதேய ஆங்கில க் கவிதை இது.

ஆசிரியர் ஒருவர் தமது சொந்த வாழ்க்கையை எவ்வாறு வாழந்து முடித்தார் என்பது முக்கியமல்ல. பதிலாக ஆசிரியராகத் திகழ்ந்து, குழந்தை ஒன்றின் வாழ்வில் அவர் பெறும் முக்கியத்துவமும், அதன் பேறாக எதிர்கால உலகை ஒரு சிறிதளவேனும் சிறப்புற மாற்றியமைக்கக் கிடைத்த வாய்ப்பினால் அவருக்கு ஏற்படும் திருப்தியுமே முக்கியமானவையாகும்.

அமரர் க.முருகேசு அவர்கள் ஆயிரக்கணக்கான மாணவர்களது வாழ்க்கையினைச் செதுக்கி வடிவமைத்த ஓர் அசாதாரண சிற்பி. தமது ஆசிரிய சேவையின் அறுவடைகளை நேரில் பார்த்துப் பெருமிதப்படக்கூடிய

வகையில் நீண்ட ஆயுள் கிடைக்கப் பெற்றவர். மேலும் பல நூற்றாண்டு காலங்களுக்கு இந்த உலகை வாழ்வாங்கு வாழ்வதற்கு உகந்த இடமாக மாற்றியமைக்க வல்ல, நல்ல மாணவ சமுதாயத்தை உருவாக்கிவிட்ட மனநிறைவும் அமரராகியவர்.

கடந்த நூற்றாண்டின் நடுப் பகுதியில் தேவரையாளி சைவ வித்தியாசலையில் அரிவரியில் எனது அரிச்சுவடியை நான் கற்க ஆரம்பித்தேன். "தேவரையாளிச் சமூகம்" என இன்று அறிஞர்களால் விதந்து பேசப்பட்டு வரும் புதிய சமூகக்குழு ஒன்றுக்குக் கால்கோளிட்ட ஆசாரியார் கா.சூரன் அவர்கள். வெள்ளி தோறும் பாய்ச்சி வந்த திருவாசகத்தேன் சுவைத்து, எமது பிஞ்சு மனங்கள் சைவத்தினதும், தமிழினதும் நாற்று மேடைகளாயின. கவிஞர் திரு.மு.செல்லையா அவர்கள், சைவத்தினதும் தமிழினதும் நாற்று மேடைகளாயின. கவிஞர் திரு.மு.செல்லையா அவர்கள், சைவப்புலவர் திரு.சி.வல்லிபுரம் அவர்கள். திரு.க.முருகேசு அவர்கள். திரு.ஆ.ம.செல்லத்துரை அவர்கள், திரு.ச.சிவகுரு அவர்கள், திருமதி சு.பொன்னம்மா அவர்கள். திருமதி செ.மீனாட்சியம்மா அவர்கள் ஆகிய ஆசிரியப் பெருந்தகைகள் இட்டு வைத்த அத்திவாரத்தின் மீதுதான், பிற்காலத்தில் ஒரு புதிய தலைமுறையினரின் கல்வித்ததுறைசார் கட்டுமானங்கள் நிறுவப்பட்டன. தேவரையாளிச் சமூகத்தின் தோற்றத்திற்கும் காத்திரமான வளர்ச்சிக்கும் ஆரம்ப காலத்தில் காரணமாக இருந்த இந்த ஆசிரியப் பெருமக்கள் என்றென்றும் நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

இவர்களுள், தூய கதராடையும், துலங்கு வெண்ணீறணிந்த நெற்றியும், நெற்றி நடுவே இட்டு வைத்த பொட்டும், கூனை மறுத்த உடலும், குமிண் சிரிப்பும் கொண்ட அமரர் க.முருகேசு அவர்கள் பற்றிய எனது நினைவுகள் தனித்துவமானவை.

சைவசமயம், எண்கணிதம், பூமிசாத்திரம் போன்ற பாடங்களைச் சிறுவயதிலிருந்தே அவரிடமிருந்து நான் கற்று வந்தேன். முத்து முத்தாக அவர் எழுதும் அழகான எழுத்துக்களும் "முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை" என்று பண்ணோடு அவர் பாடிப் புகட்டிய தேவாரமும் பசுமையாக இன்றும் மனதில் பதிந்து கிடக்கின்றன. அன்னார் வெண்கட்டி

கொண்டு வெகு இலாவகமாகத் தேசப் படங்களை வரையும் அசாத்திய திறமையை இன்றும் எண்ணி வியப்படையாமல் இருக்க முடியவில்லை.

நான்காம் ஐந்தாம் வகுப்புக்களில் நான் கல்விகற்று வந்தபோது பெற்றார் தின விழாக்களில் தமது இரண்டு நாடகங்களில் நடிக்கும் வாய்ப்புக்களை அமரர் க.மு.அவர்கள் எனக்கு அளித்திருந்தார். கண்ணப்ப நாயனார் என்ற நாடகத்தில் திண்ணனாரின் தந்தையாகவும், பக்த குசேலர் நாடகத்தில் கிருஷ்ணனாகவும் என்னைப் பயிற்றுவித்து மேடையேற்றியிருந் தார். பிற்காலத்தில் நாடகத் துறையில் நான் மேற்கொண்ட முயற்சிகளுக்கு அமரர் க.மு.அவர்கள் எனக்கு அன்று வழங்கிய வாய்ப்புக்களும் காரணமாக அமைந்திருந்தன.

கல்லூரிப் பரிசளிப்பு விழா மற்றும் வட்டார, மாவட்டப் பேச்சுப் போட்டிகளுக்கென்று அமரர் க.மு.அவர்களால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளேன். போட்டிகளுக்கெனப் பயிற்றுவிக்கும் போதும், மேடைகளில் உரையாற்றும் போதும், அவரது மிடுக்கான தோற்றமும் தொனியும் அழகு தமிழும் அவ்வப்போது ஓங்கி ஒலிக்கும் "ஏ" காரமும் எனக்கு மிகவும் பிடித்தமான அம்சங்கள். மேடைப் பேச்சில் அவர் பின்பற்றி வந்த பாணியும் அளித்த பயிற்சியும் பின்னர் பல பரிசில்களை நான் பெறுவதற்குப் பக்கபலமாக இருந்துள்ளன.

மேலும் 1967 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன். புத்தூர் கிராமத்தில் அமரர் வசித்து வந்தபோது, அங்கு இடம்பெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் எனது கிராமத்தின் சிவானந்தா அணிக்கென நான் ஆடிவந்தேன். இறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று, வெற்றிக் கிண்ணத்துடன் ஊர் திரும்ப இருந்த எமது அணியினரைத் தமது இல்லத்திற்கு அழைத்து விருந்தளித்துக் கௌரவித்தார். எமது அணியின் வெற்றியைப் பாராட்டிப் பேசிய அமரர், அன்றைய வெற்றிக்குக் காரணமாக இருந்த என்னைத் தன் மாணவன் என்று பெருமையோடு குறிப்பிட்டிருந்த மையை எனக்குக் கிடைத்த பெருமையாக இன்றும் நான் கருதுகின்றேன்.

இவ்வாறாக கல்வி, கலை இலக்கியம், விளையாட்டு போன்ற பல துறைகளில் என்போன்ற மாணவர்களுக்கு ஆரம்பகால ஊக்கியாக இருந்து

உதவிய அமரர் க.மு.அவர்கள் எம்மவர் மத்தியிலிருந்து பிரசித்தி பெற்ற பல கலைஞர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள், சாதனையாளர்கள் போன்றோரது உருவாக்கத்துக்கும் உந்து சக்தியாக விளங்கியவர் என்பது ஊரறிந்த உண்மை.

பயன் மிக்க ஓர் ஆசிரியராக வாழ்ந்து, மாணவ சமுதாயத்துக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றிய அமரர் க.மு.அவர்களது சமூகப் பணியோ பன்முகப் பரிமாணங்களைக் கொண்டது. மேலாண்மை மனோபாவத்துடன் கூடிய சமூகப் படிநிலை அமைப்பு நிலவிவந்த காலகட்டத்தில் அதனைத் தகர்த்தெறிவதற்கெனப் போர்க்கொடி தூக்கிய ஆரம்ப காலப் போராளிகளில் அமரர் க.மு.அவர்கள் முக்கியமானவர். கல்வியும் பொருளாதாரமுமே சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கான அடிப்படைக் காரணிகள் என்பதை அமரர் அவர்கள் அன்று தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார். இதனால் இவ்விரு துறைகளிலும் எமது சமூகத்தினரை வளர்த்தெடுப்பதற்கென்று அமரர் அயராது உழைத்து வந்தார். அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம், புத்தூர் விஷ்ணு வித்தியாலயம் போன்ற கல்விக் கூடங்களும் விக்னேஸ்வரா வாசிகசாலை, இளங்கோ சனசமூக நிலையம் போன்ற கிராம முன்னேற்ற நிலையங்களும் - நெசவு நிலையம், பன்னசாலை போன்ற சிறுகைத்தொழில் அமைப்புக் களையும் அமரர் க.மு.அவர்களது தீர்க்கதரிசனத்துடன் கூடிய சிந்தனைகளின் நிதர்சனங்களாகும்.

தனிமரம் தோப்பாகாது என்பதை உணர்ந்திருந்த அமரர், நிறுவன மயப்படுத்தலின் மூலமாக உதிரியாகச் சிதறியிருந்த எமது சமூகத்தவரின் சக்தியை ஒன்று திரட்டிச் செயற்பட்டார். சமூக புனருத்தாரண ஐக்கிய சங்கம், வடமராட்சி சமூக சேவா சங்கம், ஐக்கிய வாலிப சங்கம், சிறுபான்மைத் தமிழர் மகாசபை, அகில இலங்கைச் சைவசமய சமரச சங்கம் போன்ற பொது அமைப்புக்களின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் அவர் முன்னின்று உழைத்து வந்தார். மேலும் ஆதிக்க சக்திகளின் கெடுபிடிகளில் இருந்து சமூக விடுதலையைப் பெற்றெடுப்பதற்கென்று அரசியலை ஒரு கருவியாகப் பயன்படுத்தினார். கிராம சபைகள் முதற்கொண்டு நாடாளுமன்றம் ஈறாக அடிநிலை மக்களது குரல் ஓங்கி ஒலிக்கும் வகையில் அரசியல் ரீதியான போராட்டங்களை முன்னெடுத்துச் சென்றார். ஒடுக்கப்பட்ட மக்கள் மீது அதிகாரம் செலுத்தி வந்த ஆதிக்கப் படிமங்களை உடைத்தெறிந்து, புதிய

வாய்ப்புக்களுக்கும் வசதிகளுக்கும் வாசல்களைத் திறந்து வைத்தார். அநீதியைக் கண்டு கொதித்தெழும் தார்மீகக் கோபமுடையவராகவும் போர்க் குணமுடையவராகவும் வாழ்ந்துவந்த அமரர் பிற்காலத்தில் தமது போராட்ட வடிவத்தை மாற்றி அமைத்து அகிம்சாவாதியானார். சைவத்தையும் காந்தியத்தையும் ஆயுதங்களாகக் கொண்டு சாத்வீகப் போராட்ட வழிமுறையினைக் கடைப்பிடித்து வந்தார். சாதிக்க முடியாத கொள்கை களைக் கட்டிக்கொண்டு மாரடிப்பதைவிட, சாத்தியப்படக்கூடிய கொள்கை களுக்கு மாறிவிடுவதில் தவறில்லையென உணர்ந்தார் போலும்!.

ஆடம்பரங்களற்ற எளிமையான வாழ்க்கையை வாழ்ந்த அமரர் க.மு.அவர்கள் அடக்கமானவர். பழகுவதற்கு இனிமையானவர். உ யர்ந்தோர் மத்தியில் மதிப்பும் செல்வாக்கும் மிக்கவராகத் திகழ்ந்தவர். ஆயினும் தமது அன்றாட வாழ்வில் சிறுவர்களையும் சின்ன மனிதர்களையும், சாமானியர்களையும் சாதாரண மனிதர்களையும் மதித்து நடத்தி வந்தவர். உ ழைப்பே மனித வளர்ச்சியின் வித்து என்ற தத்துவத்துக்கு உதாரணமாக தமது இறுதிக் காலம்வரை சீரிய மனவளமும் காத்திரமான உடல்வளமும் கொண்டு வாழ்ந்த கடின உழைப்பாளி. ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் விடிவுக்கென்று அமரர் க.மு.அவர்கள் அன்று மேற்கொண்ட அயராத முயற்சியினால் இன்று அச்சமூகத்துக்கான அபிவிருத்திகள் பல சாஸ்வதமாகி வருகின்றன - அமரர் அவர்கள் கொண்டிருந்த பல என்பதைத் தொடர்ந்து வந்து இலட்சியங்களும் உயிர்ப்புடன் இருக்கும் வரை அன்னார் உருவாக்கிய புதிய தலைமுறை இவ்வுலகில் வாழும் வரை அவருக்கு மரணமில்லை. அவர் விழுதுவிட்ட ஆலமரம். அவர் ஒருபோதும் வீழ்ந்து மடிவதில்லை.

உலக நவீன விஞ்ஞான தொழில் நுட்ப சாகஸங்களுள் மூழ்கித் திளைத்துக்கொண்டிருக்கின்றது. இத்தருணத்தில் உலகமயமாதலின் பெறுபேறாக இனம், மொழி, மதம், நிறம் என்றவாறான வரம்புகள் சிதைந்து போய்க்கொண்டிருக்கின்றன. போர், அகதி வாழ்வு, புலம்பெயர்வு போன்ற காரணிகளால் ஈழத் தமிழன் பூமிப் பந்தின் சகல பாகங்களிலும் பரவி வாழ்ந்து வருகின்றான். நவீனத்துவத்தோடு இணைந்து நாகரிகம், நடையுடை பாவனை என்பவற்றில் இவன் வெகுவாக மாறிவிட்டான். ஆயினும் உலகின் எந்தப் பாகத்தில் வசித்தாலும் இவனுக்கே உரித்தான உச்சிக் குடுமிக் கலாசாரத்தின்

உயர்சாதி ஆதிக்கத்தை மட்டும் இவன் இன்னமும் கைவிடவில்லை. இந்நிலையில் அமரர் க.மு.அவர்கள் போன்ற சமூக சிந்தனையாளர்களினதும் செயற்பாட்டாளர்களினதும் தேவை இன்று மேலும் வெகுவாகவே உணரப் படுகின்றது.

மகாத்மா காந்தி பிறந்ததனால் இந்த மண்ணுக்குக் கிடைத்த மாபெரும் பயன் அகிம்சையல்ல, கதராடையல்ல, சத்தியாக்கிரமமுமல்ல, இந்திய சுதந்திரமுமல்ல, மாறாக உலகின் மறுகோடியில் ஒரு மார்ட்டீன் லூதர் கிங் பிறப்பதற்கு அவர் காரணமாய் அமைந்தமையே அந்த மாபெரும் பயன்பாடாகும். இது போன்றே அமரர் க.மு.அவர்களது இலட்சியங்களையும் கொள்கைகளையும் இலக்காகக் கொண்டு தன்னலமற்ற வகையில் எமது மக்களுக்காக மென்மேலும் உழைக்கவல்ல மகான்கள் பலர் எங்கள் மத்தியில் தோன்ற வேண்டும். கல்வி, சமயம், சமூகம், அரசியல், இசை, இலக்கியம் நாடகம் போன்ற பல்வேறு துறைசார் திறமைகளும், ஆளுமைகளும் கொண்ட அமரர் (இலக்கியம் அடுத்து - அவர்கள்) இடையில் வரவேண்டியது. அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை மேலும் பலர் தொட்டுத் தொடர்ந்து செய்ய வேண்டும். அமரர் க.முருகேசு அவர்கள் வாழ்ந்துபோன வாழ்க்கை அப்போதுதான் அர்த்தம் பெறும்! அன்னாரின் ஆன்மாவும் அப்போதுதான் சாந்தி பெறும்!

# 13

# அமரர் கந்தர் - முருகேசு ஐயாவும் ஆவரங்கால் புத்தூர் பிரதேச நிறுவனங்களும்

"அமரரின் சேவையில் உயர்ந்த
பொது நிறுவனங்களின் ஒன்றியம்"
ஆவரங்கால், புத்தூர்.

**அறிமுகம்**

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு பாடசாலை அமைப்புகளில் சில வேண்டாத நடைமுறைகள் இருந்தன. சமூக ஏற்றத்தாழ்வுகள் காட்டப்பட்டு எல்லா மாணவர்களும் சமவாய்ப்புடன் கல்வி கற்க முடியாத நிலை இருந்தது. இந்நிலையில் குறித்த சில சமூகங்கள் உரிமையுடன் கல்வி கற்பதற்காக சில பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. அத்தகைய பாடசாலைகளில் ஒன்றாக 1958 ஆம் ஆண்டு புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் உருவானது. சைவவித்தியா விருத்திச் சங்க அனுசரனையுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை ஸ்தாபிப்பதிலும், அரச அங்கீகாரம் பெறுவதிலும், நிரந்தர கட்டடம் அமைப்பதிலும் பல இடையூறுகள் ஏற்பட்டன. அமரர் க.முருகேசு ஐயாவின் விடாமுயற்சியும், அரசியல் தலைவர்களோடு இருந்த அறிமுகமும், ஊர்மக்கள் ஒத்துழைப்பும் ஒன்றிணைய வித்தியாலயம் துரித கதியில் உருவாகியது. இதன் ஆரம்ப கால அதிபராகவும் அமரர் கடமையாற்றி, பாடசாலை வளர்ச்சியில் அரும்பணி ஆற்றினார்.

**எங்கள் பிரதேசத்துடன் உள்ள தொடர்பு**

பாடசாலை அமைந்த பகுதியிலேயே நிலம் வாங்கி வீடமைத்து வாழ்ந்து வந்த காரணத்தால் எமது பிரதேசமே அன்னாரின் சொந்த இடமாக மாறியது. ஒவ்வொரு குடும்பமும் அவருடைய சொந்தமாகியது. சமூகத்தில் நடைபெறும் சுக, துக்க நிகழ்வுகளில் நெருக்கமாகக் கலந்து கொண்டார். இப்பகுதியில் உள்ள பல நிறுவனங்களில் உறுப்பினராக, போஷகராக ஆலோசகராக கடமையாற்றி எங்களில் ஒருவராகவே வாழ்ந்தார். உதாரணமாக சிலவற்றைக் காட்டுதல் பொருந்தும்.

கலையகம் ச.சநிலையம், லிங்கன் மத்திய ச.ச.நிலையம் என்பனவற்றுடன் நெருக்கமான தொடர்பு கொண்டார். இந்நிலையங்கள் அமரரின் ஆசியுடனும், வழிகாட்டலிலும் வளர்ச்சியடைந்தன. ஓடு முதலிய கட்டடப் பொருள்கள் கொடுத்து உதவியமை குறிப்பிடத்தக்கது. கலையகம் ச.சநிலையத்தின் கீழ் இயங்கிய நல்லிணக்க சபையின் தலைவராகப் பணிபுரிந்து சில பிணக்குகளைத் தீர்த்து வைத்தார். நீதியமைச்சினால் கிராமம் தோறும் இணக்க சபையில் உறுப்பினராக நியமனம் பெற்றார். இந்நியமனம் கிடைத்தற்கரியதும், கௌரவம் மிக்கதும் ஆகும்.

புதுவை மணற்பகதி புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் பரிபாலனசபை உறுப்பினராகவும், கிரியா காலங்களில் நெறிப்படுத்துனர் ஆகவும் திருப்பணி புரிந்து ஆன்மீக பலம் பெற்று வாழந்த அமரர் மேற்படி ஆலயத்தில் 1972ஆம் ஆண்டு நடைபெற்ற குடமுழுக்கு நிகழ்வில் பெரும் பணியாற்றினார்.

**எமது பிரதேச நிறுவனங்களினால் அமரர் பெற்ற கௌரவங்கள்**

கலையகம் ச.ச.நிலைய ஆண்டு விழாவின்போது "சேவாதிலகம்" என்னும் கௌரவ நாமம் சூட்டி பொன்னாடை போர்த்தி சிறப்பிக்கப்பட்டார். புதுவை அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தானத்தின் குடமுழுக்கு நிகழ்வில் (2000) பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். இந்நிலையங்களில் நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தமை அன்னாருக்கு இந்தப் பிரதேச மக்கள் கொடுத்த பெருமதிப்புக்குச் சில உதாரணங்கள் ஆகும்.

**ஆளுமை மிக்க ஆசிரியப்பணி**

அமரர் தமிழ்மொழி இலக்கியங்களில் சிறந்த பாண்டித்தியம் பெற்றிருந்தபடியால் பல உயர்மட்டத் தலைவர்களால் "பண்டிதர்" என்று அன்பாக அழைக்கப்பட்டவர். புவியிற் பாடம் கற்பிப்பதில் மிகச் சிறந்த வல்லமையுடையவர். புள்ளி விபரங்கள் விரல்நுனியிலும், நிலவரைப் படங்கள் வெண்கட்டி நுனியிலும் விளையாடியிருந்தமை சக ஆசிரியர் களாலும், மாணவர்களாலும் வியந்து நோக்கப்பட்டது.

**கலைத்துறை**

தற்போதைய கல்வி முறையில் இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் எனக்குறிக்கப்படும் விடயங்களில் கலை, கலாச்சாரம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தச் செயற்பாடுகளில் அமரரின் பங்கு பணி மிகவும் காத்திரமானவை. நாடகப் பிரதி ஆக்கங்களில் மிகச் சிறந்த ஆற்றல் பெற்றவர். கிருஷ்ணலீலா, சகுந்தலை, மார்க்கண்டேயர் என்பன இவ்வாற்றலுக்கு சில சான்றுகளாம். யாப்பிலக்கண விதிப்படி பாடல் ஆக்குவதில் உள்ள திறமை நாடகப் பாடல்களில் வெளிப்படடப்பது. அமரர் காலத்தில் உடன் கற்பித்த ஆசிரியர் ஒருவனின் நினைவிலிருந்து ஒரு பாடலை குறிப்பிடுவது சாலப் பொருந்தும். பக்த மார்க்கண்டேயர் என்னும் நாடகத்தில், தற்போது இசைத்துறை விரிவுரையாளராக விளங்கும் இசைத்திலகம் சி.பத்மலிங்கம் அவர்கள் பன்னிரண்டு வயதுச் சிறுவனாக இருந்தபோது பாடிய ஒரு விருத்தப்பா பலத்த வரவேற்புப் பெற்றிருந்தது. இந்தச் சிறப்புக்கு அந்தப் பாத்திரமேற்றுப் பாடியவரின் இசைத்திறமையோடு, அமரர் முருகேசு ஐயாவின் உருக்கமான சொல்லமைப்புக் கொண்ட பாடலும் காரணமென்றால் மிகையல்ல. அந்தப் பாடல் பின்வருமாறு அமைகிறது.

"உன்னுருவம் கல்லன்றி திருவுளமும் கல்லாமோ
என்னுடைய புன்வார்த்தை நின்செவிக்கு வேம்பாமோ
அன்னை தந்தை என்னையெண்ணி அனலாய் உருகுகிறார்
இன்னும் சிலவாண்டு இவ்வுலகு வாழவைப்பார்"

இதுவே அந்தப் பாடல். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு "திராவிடப் பொன்னாடே" எனத்தொடங்கும் இந்தியத்திரைப்படப் பாடல் ஒன்று பிரபலம் பெற்றிருந்தது. அந்த மெட்டில் "ஈழத்திருநாடே' எனத் தொடங்கும் குழு நடனப் பாடலொன்று அமரரால் ஆக்கப்பட்டு, நடனம் பயிற்றுவிக்கப்பட்டது. பலவிருதுகளும் பெற்றது. எனினும் அன்னார் தமது கவியாற்றலை வெளிப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டாமை புதிராகவே இருக்கிறது.

**மனிதநேயம்**

மனித நேயம் என்ற தொடரின் பொருள் "நூல்போல் வளை" என்ற ஔவைமொழியில் தொடங்குகிறது என்பது ஒப்புக் கொள்ளக் கூடிய உண்மை. இதற்கமைய அமரர் சுற்றந் தாங்கிச் சுமந்தவர்; வளர்ந்தவர்; சுற்றத்தார் மட்டுமன்றி அயலவர் நண்பர்கள் எனப் பலதரத்தாரும் அமரரின்

நிழல் விருட்சத்தில் ஆறுதல் பெற்றவர்கள். 1987ஆம் ஆண்டில் நடைபெற்ற "லிபரேசன் ஒப்பரேசன்" என்ற இராணுவ நடவடிக்கையின் போது வடமராட்சி மக்கள் பெரும் எழுப்பில் இடம் பெயர்ந்தனர். அவ்வேளை அமரரின் இல்லத்தில் பெருங்கூட்டம் போஷனை பெற்றது. இவ்விடயம் மிகைப்பட்ட கூற்றல்ல.

கல்வி உபகரண வசதியற்ற மாணவருக்கு சொந்தப்பணம் செலவு செய்து உதவியமை பலரும் அறிந்த விடயம்.

இப்பிரதேச மக்கள் அமரர் முருகேசு ஐயாவைப் பற்றி நினைவு கூரும் போது நூலாக உருவாகும் நிலை தோன்றும். இயன்றவரை சுருக்கமாக இந்தக் கட்டுரை மூலம் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். இதற்குக் களம் அமைத்துக் கொடுத்த நினைவு மலர் வெளியீட்டுக் குழுவினருக்கு நன்றிகூறி நிறைவு செய்கிறோம்.

# 14

## சரித்திர முகப்பினில் இருப்பான்!

சோ.பத்மநாதன்

வெண்ணிற ஆடை, நெற்றியில் நீறு
விளங்கு சந்தனத்தில் ஓர்பொட்டு,
கண்ணிலே அறிவின் ஒளி, தனக்கியல்பாம்
கம்பிரத் தோடுவீற் றிருக்கும்
அண்ணலின் உருவே ஓவிய மாய்என்
அகத்தினில் பதிந்துளது; ஐயன்
புண்ணிய உலகம் போயினன்; ஓங்கு
புகழினன், சாதனை புரிந்தோன்!

சாதியென் றொருபேய் ஆட்டநற் தமிழர்
இனம் ஒரு பிரிவினர் தமக்கு
நீதியை மறுத்து நிகழ்த்திய கொடுமைக்(கு)
எதிருற நிமிர்ந்த போராளி!
சோதனை களினால் புடமிடப்பட்டுச்
சுடர்ந்தமாணிடன் முருகேசு
சாதனை படைத்த தமிழ்ச் சிறுபான்மைச்
சரித்திர முகப்பினில் இருப்பான்!

தக்கவர் இன்னார், தகவிலர் இன்னார்,
என்பதைத் தெளிவுறக் காட்டும்
எச்சமென் பதனைக் கண்ணுறக் கண்டேன்
இப்பெரி யவன்பயந் திட்ட
மக்களைக் கண்டும் அவர்க்கு வாய்த்திட்ட
துணைகளைக் கண்டும் நல் லறிவில்
மிக்கவராக விளங்குறு பேரப்
பிள்ளைகள் மேன்மைகள் கண்டும்!

# 15

## நல்ல ஒரு அயலவரை நான் இழந்துவிட்டேன்

கோப்பாய் சிவம்
ப.சிவானந்தசர்மா B.A(Hons)

அமரர் முருகேசுவாத்தியார் அவர்களை நான் நீண்டகாலம் அறிவேன். புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி மாணவனாக நான் இருந்தபொழுது அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். பின்னர், ஆவரங்காலில் நான் வசித்து வரும்போது அவர் எனது அயல்வீட்டவராக இருந்தார். அயல்வீடு என்று கூறினாலும், எனது வீட்டிற்கும் அவரது வீட்டிற்குமிடையில் சில வயல்கள் இருப்பதனால் சந்திப்பு நிகழ்வது இடையிடையேதான்.

அவரைக் காணும் போதும், அவரோடு உரையாடும் போதும் அவரது சாந்தம் தவழும் முகத்தையும் அமைதியான பேச்சுக்களும் எனக்கு வியப்பைத்தரும். ஏனெனில், நான் மாணவனாக இருந்தபோது, அவரது சமூக சீர்திருத்தப்பணிகள், போராட்ட நடவடிக்கைகள், புரட்சிகள் என்பன பற்றி நான் கேள்விப்பட்டபோது கற்பனை செய்து பார்த்த தோற்றத்திற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு அன்புத்தோற்றம் தான் நான் நேரில் கண்டது.

அவர் பெற்ற பிள்ளைகள் பலர். வளர்த்த பிள்ளைகளோ இன்னும் பலர். எனது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய கவிஞர் கலாநிதி காரை செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் முருகேசு வாத்தியாரின் மருமகன் என்று அறிந்தபோது எனக்கு இன்னும் ஒருபடி நட்பு அதிகரித்தது. புரட்சி, போராட்டம் என்றதும் அதனால் யாருக்காவது இடையூறு நேருவதே வழக்கம். ஆனால் முருகேசு வாத்தியாரின் புரட்சிகள் யாருக்கும் துன்பம் தருவதாக

இல்லாமல் சமூக விடிவுக்கு உதவுவதாக இருந்தன என்பதே உண்மை. அதனால்தான் அவர் அத்தனை மென்மையானவராகக் காட்சி தந்திருக்கிறார்.

ஆனால், அந்த மென்மைக்குள் மிகவும் வலிமையாக இறுகிய ஓர் உறுதி இருந்தது. அதுதான் அவரது வெற்றிகளின் இரகசியம்.

சமூக புனருத்தாரணம், சமய சமரசம், காந்தீயம், தீண்டாமை ஒழிப்பு என்பன அவரது இலட்சியங்களாக இருந்தன. இவற்றை முன்னெடுக்கத் தக்கதாகப் பல சங்கங்களிலிணைந்து பணியாற்றி வேறு பல சங்கங்களை உருவாக்கி உழைத்தவர்.

தமிழ் மக்களின் அரசியல் விடிவுக்காகவும் பாடுபட்டவர். தமது ஊரிலும் (அல்வாய்) தாம் வாழ்ந்த ஊரிலும் (ஆவரங்கால்) ஒவ்வொரு பாடசாலைகளை உருவாக்கியவர். இன்று வரை அவை வளர்ந்து வருவது அவரது இலட்சியத்திற்கு வெற்றி.

நல்ல நாடக எழுத்தாளராக, நெறியாளராக இருந்திருக்கிறார். ஈழத்தின் சமய, சமூக, கலை இலக்கிய அரசியல் வரலாற்றில் முருகேசு வாத்தியாரின் பெயர் ஆழமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

அவரது ஆத்மா சாந்தியடைக. அவர் சார்ந்த அனைவருடனும் எனது துயரங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

# 16

## சமூக மேம்பாட்டுக்கான கல்விச் சேவையாளன்

கலாநிதி. மா. கருணாநிதி
விரிவுரையாளர்
(கொழும்பு பல்கலைக்கழகம்)

அல்வாயூர் திரு.க.முருகேசு உபாத்தியாயர் அவர்கள் தமது 95 ஆண்டு கால வாழ்க்கையில் ஆற்றிய சமூகப்பணிகளும் அவற்றின்மூலம் கிடைக்கப்பெற்ற அனுபவங்களும் மனித உரிமைகள் மறுக்கப்பட்ட சமூகங்களிலுள்ள இளந்தலைமுறையினரும் சந்ததியினரும் நிச்சயமாக அறிந்திருக்க வேண்டியவை. எமது சமூக முன்னோடிகளுள் ஒருவாராகப் போற்றப்படுகின்ற முருகேசு வாத்தியார் அவர்கள் 1920 இலிருந்து 1970 காலம் வரையில் ஆற்றிய பணிகள் கல்வி மற்றும் சமூக விடுதலைக்கான அடிப்படைகளை வகுத்துக் கொடுத்திருந்தன.

கல்வி அபிவிருத்தியின் மூலம் சமூக விடுதலையை அடையலாம் என்னும் சிந்தனையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த இவருடைய கல்வி வாழ்க்கையோ ஒரு போராட்டமாக இருந்தது. இவருடைய தந்தையார் திரு.கந்தப்பு அவர்கள் பாடம் சொல்லிக் கொடுத்த திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 1914 இல் சேர்ந்து கொண்டார். அதன் பின்னர் எட்டு ஆண்டுகளில் தேவரையாளிச் சைவவித்தியாசாலையில் கற்றார் தமது 16 ஆவது வயதில் மாணவ ஆசிரியராக அமர்த்தப்பட்டார். அக்காலத்தில் எமது சமூகத்தில் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை. நிலவியமையால் சிறப்பாகப் பயன்படுத்த மாணவர்களை ஆசிரியராக அமர்த்துதல் வழக்கமாக இருந்தது. 1926 இல் ஆசிரியர் பயிற்சியைப் பெற முற்பட்டபோது அன்றிருந்த உரிமை மறுப்புக்கள் காரணமாக கோப்பாய் ஆசிரியர் கல்லூரியில் இவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. ஆயினும் பல்வேறு போராட்டங்கள் மற்றும் விடாமுயற்சியின் மத்தியில் 1930 தொடக்கம் 1931 வரையிலான காலப்

பகுதியில் தெல்லிப்பளை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் சேர்ந்து பயிற்சியை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொண்டார். அதன்பின்னர் மீண்டும் 1932 இல் தேவரையாளி சைவ வித்தியாசாலையில் சேர்ந்து ஏறக்குறைய 27 ஆண்டுகள் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பல நல்ல மாணவர்களை உருவாக்கிய பெருமைக்கும் உரியவர்.

உரிமை மறுக்கப்பட்டவர்களின் சமூக மேம்பாட்டுக் கல்வியின் பங்களிப்பு அத்தியாவசியமானது என்பதனை எமது சமூக முன்னோடிகள் நன்கு புரிந்தனர். எமக்கெனத் தனித்துவமான கல்வி நிறுவனங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டனர். அந்நிறுவனங்களை விரிவுபடுத்துவதிலும், பயன்படுத்துவதிலும் கவனங் கொண்டிருந்தனர். இந்த வகையில் தேவரையாளி இந்துக்கல்லூரியானது தரம்மிக்க கல்வி நிறுவனமாக மாறியமையை எவரும் மறுப்பதற்கில்லை.

யாழ்ப்பாணச் சமூகத்தைப் பொறுத்தவரையில் அடிப்படை உரிமைகளில் ஒன்றான கல்வி காலங்காலமாக ஒரு சாராருக்கு மறுக்கப்பட்டு வந்தது. இவர்கள் பொருளாதார ரீதியாக மேம்படுவதற்கும் வாழ்விடச் சூழல் தடையாக இருந்தது. சுயமுயற்சிகளில் ஈடுபடுவதற்குச் சொந்தமாக விவசாய நிலங்கள் இருக்கவில்லை. வாழ்விடங்களை அமைத்துக்கொள்வதற்காக சிறிதளவு நிலங்கள் மட்டும் இருந்தன. இவை இயல்பாகவே சமூக ஒடுக்குமுறையில் நகர்ந்து செல்வதற்கு தடைகளை விதித்திருந்தன. ஓரளவு வசதி படைத்தவர்கள் மட்டும் தென்னிலங்கையில் வியாபார முயற்சிகளில் ஈடுபட்டு வாழ்க்கையில் அந்தஸ்தை ஏற்படுத்திக் கொண்டனர். இச் சந்தர்ப்பத்தில் சமூக நகர்வை எண்ணக்கூடிய வழிமுறையாக்க கல்வியைத் தேர்ந்தெடுத்தமை சரியான வழியாகவே அமைந்தது. இதற்குத் தேவரையாளி இந்துக்கல்லூரி உறுதியான அடித்தளத்தை இட்டிருந்தது. இக்கல்லூரியின் வெற்றியிலே முருகேசு உபாத்தியாயருக்கும் பங்குண்டு. அங்கு கற்ற மாணவர்கள் உயர் கல்வியடைவுகளைப் பெற்றமையால் நல்ல தொழில் வாய்ப்புக்களைப் பெற்றார்கள். முதற் படியாக அநேகர் ஆசிரியர்களாக வரமுடிந்தமையால் அவர்களுடைய பொருளாதார கட்டமைப்பில் மாற்றங்கள் உருவாகின. அடுத்த கட்டத்திலே ஆசிரியர்களின் வழிகாட்டல்கள் இன்னும் பலரைக் கல்வியில் நாட்டங்கொள்ள வைத்தன.

இன்றைய நிலையைப் பொறுத்தவரையில் கணிசமான அளவில் மாற்றங்கள் உண்டாகி வருதலும், துரித நகர்வு ஏற்படுதலும் மகிழ்வு தரும் விடயமாகும்.

முருகேசு ஆசிரியரின் கல்விப் பணிகளில் காலத்தால் நிலைத்து நிற்கக்கூடிய பணியாக அவர் உருவாக்கிய பாடசாலைகள் அமைந்துள்ளன. கவிஞர் மு.செல்லையா அவர்கள் தேவரையாளிச் சைவ வித்தியாசாலையை விட்டுச்சென்ற காலத்தில் அவருக்கு ஒரு பாடசாலை அவசியமாயிற்று. மற்றும் பிரதேசரீதியாகப் பார்க்கும் பொழுது அல்வாய் வடக்கு மாறாம்புலம், மற்றும் அம்மன் கோவிலடியைச் சேர்ந்த கிராமங்களை மையப்படுத்தும் கல்வி நிறுவனமொன்றும் அவசியமாகக் காணப்பட்டது. இவ்விரு தேவைகளும் முனைப்படைந்த வேளையில், ஊர்மக்களின் ஒத்துழைப்புடன் அல்வையூர்ச் சிறீலங்கா வித்தியாசாலை 1954 இல் உருவாக்கப்பட்டது. கவிஞர் அவர்களும் முருகேசு உபாத்தியாயர் அவர்களும் தோழோடு தோள் நின்றமையால், இப்பாடசாலை துரித முன்னேற்றம் அடைந்து வடமராட்சியில் குறிப்பிடத்தக்கதொரு பாடசாலையாக விளங்கிற்று. இப்பாடசாலையை உருவாக்கிய முருகேசு உபாத்தியாயர், வாழ்ந்திருந்த புத்தூர் கிராமத்து மக்களின் வேண்டுகோளை ஏற்று அங்கும் ஒரு பாடசாலையை 1957 இல் ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம் என்னும் பெயருடன் உருவாக்கினார். இப்பணியின் பலாபலன்களை அந்தக் கிராமத்து மக்கள் அறுவடை செய்து வருகின்றார்கள்.

1940 கள் தொடக்கம் 1960 கள் வரையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சமூக விடுதலைப் போராட்டங்கள் சற்று வித்தியாசமான செய்நெறிகளைக் கொண்டிருந்தன. கவிஞர் செல்லையா, சி.வல்லிபுரம், ஆ.ம.செல்லத்துரை ஆகியோருடன் முருகேசு ஆசிரியரும் இணைந்து இப்போராட்டங்களில் ஈடுபட்டுள்ளார். இந்த முன்னோடிகள் உயர் சமூகத்தினரோடும் அக்காலத்து உயர் நிர்வாகப் பணிகளில் ஈடுபட்ட வர்களுடனும் சிறப்பான முறையில் கண்ணோட்டம் கொண்டிருந்தமையால் அமைதியான, சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லல் சாத்தியமாக இருந்தது. இந்தியாவில் சமஸ்கிருத மயமாதலும் இலங்கையில் பௌத்தமயமாதலும் சமூக விடுதலைக்கான எடுத்துக்காட்டுகளாக இருந்தபோதிலும் எம்மவர்கள் அதற்கு இயைந்து போகவில்லை. ஆயினும் பிற்காலங்களில் குறிப்பிட்டதொரு சந்தர்ப்பத்தில் முருகேசு உபாத்தியாயர்

அவர்கள் சில முரண்பாடான திருத்தங்களுடன் செயற்பட்டார் என்றும் அறிய முடிகின்றது. ஆயினும் அதற்கான சான்றுகள் வலுவாக இல்லை. எப்படியிருந்தாலும் இந்தியச் செல்வாக்குக்கு உட்பட்டிருந்த எமது ஆசிரியர்கள் ஆழமான சைவசமய உணர்வும் தமிழ்மொழி அபிமானமும் காந்திய நெறியில் பக்தியும் கொண்டிருந்தமை அவர்கள் தம்மை உயர் சமூகத்தினர் மத்தியில் தம்மை நிலைநிறுத்துவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியாகவே சிலர் தவறாகப் புரிந்துகொண்டனர். அத்தகைய விமர்சனங்களுக்கு அவர்கள் அஞ்சாமல் செய்த முயற்சியே மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் பொறுப்புணர்ச்சியையும் ஊட்டின. அவர்கள் சென்றபாதை உறுதியானது என்பதால் தான் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரக்கோயில், யாழ்ப்பாணம் பெருமாள் கோயில் மற்றும் நல்லூர் கந்தசுவாமி கோயில் என்பன அமைதியான முறையில் திறந்துவைக்கப் பட்டன. இதன் பின்னர் நீண்டகாலமாக இத்தகைய முயற்சிகள் இடம்பெறாமற் போனதும் தொடர்ந்து மாக்சிசவாதிகளால் ஆரம்பிக்கப்பட்ட ஒருசில முயற்சிகளின் பின்னர் மீண்டும் தோற்றுப்போனதும் உரிமை மறுக்கப்பட்டவர்கள் முழுமையான வெற்றிகளை ஈட்டிக்கொள்வதற்கும் தடையாக இருந்தது.

கல்வி, சமூக மேம்பாடு, விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்றமையினாலேயே முருகேசு உபாத்தியாயர் போற்றப்பட வேண்டிய வராகின்றார். அவரது இத்தகைய சேவைகளைக் கருத்திற்கொண்டு சேவாதிலகம் என்ற பட்டமளித்து எமது சமூகம் உண்மையிலேயே தமது பொறுப்பினை உணர்ந்துள்ளார்கள்.

# 17

## முருகேசு வாத்தியார் - இலட்சியவாதி

கலாநிதி செ.திருநாவுக்கரசு
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

அல்வாய் முருகேசு வாத்தியார் அவர்கள் சிறியன சிந்தியாத உயர்ந்த இலட்சியங்களை அணுகிச் செயற்பட்டார். யாழ்ப்பாணத்தின் இறுக்கமான சமூக கட்டுமானத்தின் கீழ் சாதிய அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக, அரும்பாடுபட்டு உழைத்திட்ட உத்தமர் அவர். மனப்பாங்குகளில் மாற்றங்கள் ஏற்பட்டாலன்றி, எந்தச் சட்டங்களிலும் அடக்குமுறையையும், அடிமைத்தனத்தையும் இல்லாதொழித்துவிட முடியாது என்பதையுணர்ந்து, உயர்சாதி தமிழர்களின் உள்ளக்கதவுகளை உணர்வுபூர்வமாகத் திறப்பதற்கு முனைந்து செயற்பட்டவர். அவர் ஒரு தமிழ்த்தேசியவாதி. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளராகச் செயற்பட்டவர். சைவசமய ஆசாரங்களைக் பின்பற்றி நின்ற புனிதர். நீறிட்ட நெற்றியும், சந்தனப் பொட்டுமாக, வேட்டியும் நாஷனலும் அணிந்து. மெல்லிய தேகத்தைக் கப்பீரமாக்கி நடந்து வருவதைப் பார்த்தவர்கள். "உள்ளத்தனைய துயர்வு" கொண்ட பெரியார் எனப் போற்றி நின்றனர். ஆசிரியராக , அதிபராக, பத்திரிகையாளராக, பாடசாலைகளின் தாபகராக, சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் உபதலைவராக, சைவ ஹரிசனர் வாலிபர் சங்கம், வடமராட்சி சமூக சேவா சங்கம், மக்கள் முன்னேற்ற மன்றம், சமூக புனருத்தாரண ஐக்கிய சங்கம், காந்திய சேவா சங்கம், சைவசமய சமரசசங்கம் முதலான பல்வேறு அமைப்புகளின் பொறுப்பு வாய்ந்த பணியாளராக, தமிழரசுக் கட்சியைச் சார்ந்த அரசியல் வாதியாகப் பன்முகப் பரிமாணங்களை வெளிப்படுத்தியவர் முருகேசு வாத்தியார். பல்வேறு சவால்களையும் ஈடுகொடுத்து நின்றே பல சாதனைகளை நிலைநாட்டியவர் அவர். தான் இறக்கும்வரை ஒரே அரசியல்

சித்தாந்த நெறியிலேயே அவரது பயணம் சென்றுகொண்டிருந்தது. அதனாற்தான் அவர் விளம்பரங்களை விரும்பாது, அடக்கமான பணிகளை முன்னெடுத்து வந்தார். எளிமையும், தன்னடக்கமும் முருகேசு வாத்தியாரின் வெற்றிகளுக்கான தூண்களாயின.

சாதீயக் கொடுமைகளையும் அளவுக்கு மீறி நெருக்கடிகளையும் அனுபவித்தது போதும், சற்றும் மனந்தளரா நிலையில் அந்நுகத்தடிகளைக் கல்வியாலும், பொருளாதாரத்தாலும், ஒடுக்கப்பட்ட மக்களின் ஒற்றுமையாலும், விழிப்புணர்வாலும், உயர் சமூகத்தவர்களின் மனித நேயத்தாலும் சாதிக்கலாமென்பதை உணர்ந்து செயற்பட்டார். சாத்துவீகமான வழிமுறைகளில் அமைந்த போராட்டம் அவருடையது. முதன்முதல் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வீதிகளில் திருமுறைகளைப் பாடிக்கொண்டு ஏ.எம்.செல்லத்துரை, கவிஞர் செல்லையா, சைவப்புலவர் வல்லிபுரம், நல்லையா ஆகியோருடன் சென்ற நிகழ்ச்சி 09.07.1956 இல் நடைபெற்றது. இதன்பின்னர் அந்த ஆலயம் சகலருக்கும் வழிபாடியற்றக்கூடிய சூழ்நிலை கொண்டு விளங்குகிறது. இதே போன்று தேநீர்க்கடைப் பிரவேசங்களும் முதலாளிகளுடன் கலந்து பேசி அவர்களது மனதில் நீதியான மாற்றத்தினை உருவாக்கியதன் மூலமே சாதிக்கப்பட்டது. சிறுபான்மைத் தமிழர் போராட்டங்களில் வன்முறையினை முருகேசு வாத்தியார் எப்போதும் ஆதரித்தவரல்லர். இதனாற்தான் வதிரியில் தேவரையாளி சைவப் பாடசாலையை நிறுவிய சூரன் என்பவரின் வழியைப் பின்பற்றி, பொதுமக்கள் ஆதரவுடன் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம், புத்தூர் புத்தகலட்டி விஷ்ணு வித்தியாலயம் ஆகிய இருபாடசாலைகளையும் கட்டிமுடிக்க முருகேசு வாத்தியாரால் முடிந்துள்ளது. தனது காணியை விற்றார்; சம்பளத்தைச் செலவழித்தார். தனது மக்களிடம் நிதி சேகரித்தார்; இப்படி எத்தனையோ சிரமப்பட்டு நிறுவிய இப்பாடசாலைகள் இன்று தமிழ் மாணவர்களுக்கு வரப்பிரசாதமாக விளங்குகின்றன. கோப்பாய் பா.உ. வாகவருந்த அமரர்.கு.வன்னியசிங்கம் அவர்களும் புத்தூரில் பாடசாலை அமைப்பதற்கு முருகேசு வாத்தியாருக்குப் பெரிதும் உதவினார். கோயில்களிலும் பொதுவிடங்களிலும் அமைதியான போராட்டங்கள் மூலமே சமூக மாற்றத்தினை உருவாக்க வேண்டுமென்பதே வாத்தியாரின் குறிக்கோளாகும்.

இதனாலேயே டானியல் போன்றவர்களின் தீவிரவாதப் போராட்டங்களிலிருந்து அவர் விலகி நின்றார்.

இன்பருட்டி வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் எட்டாம் வகுப்பு வரை படிக்கையில் எதிர்கொண்ட சிரமங்கள், 1929 இல் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறுவதற்கு ஏற்பட்ட தடைகள், பின்னர் தெல்லிப்பளையிலுள்ள கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெறும்போது சைவாசாரங்களைப் பின்பற்றுவதில் ஏற்பட்ட கஷ்டங்கள், அத்துடன் சமூக ரீதியாக அனுபவித்த தடைகள் ஆகியவற்றையெல்லாம் சமாளித்து வாழ்ந்து காட்டிய பெரியார் முருகேசு அவர்கள் தற்போது யாழ்ப்பாணத்தின் சமூகக் கட்டிறுக்கங்கள் தளர்ந்து போயுள்ளன. எனது பேரனுக்குக்கூட முன்பு இப்படியெல்லாம் நடந்தது என்றும் சொன்னால் நம்பமாட்டான்." (சரிநிகர் டிச -சன - 12, 2000) எனக் கூறியதன் மூலம் இன்று சமூக மாற்றத்தைப் பல காரணிகள் உருவாக்கிவிட்டாலும், அதில் அதாவது பங்களிப்பும் மன நிறைவைத் தந்தமையை உணர முடிகிறது.

இலட்சிய நோக்கோடு செயற்பட்ட முன்னோடி மனிதராக நாம் முருகேசு வாத்தியாரைக் காணுகிறோம். ஆயிரம் பிறைகள் கண்டு, கடந்த நவம்பர் 26 ஆம் திகதி தனது 95 ஆவது பிறந்தநாளையும் நிறைவான முறையில் குடும்பத்தவர் அனைவருடனும் கொண்டாடிய சில நாட்களின் பின்னர் அமைதியான முறையில் 1999 இல் நல்லூரில் வசித்த அவரது மூத்த மகளின் இல்லத்தில் அவர் தங்கியிருந்தபோது அவரைச் சந்தித்து உரையாடிய நாட்கள் எனக்கு நினைவுக்கு வருகிறது. அந்தச் சந்தனமரம் நிரந்தரமாக ஓய்வு கண்டுவிட்டாலும் அதன் வாசனை பரவிக்கொண்டே இருக்கும்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

# 18

# சம்பூரண இராம காவியன்: எனின் சடுதியில் மறைந்த இராகவன் அல்லர்

கனக மனோகரன்,
சட்டத்தரணி,கனடா.

பல நாடுகளின் பதம் கண்டு, பல்லாயிரம் உயிர்களின் வதம் கண்ட "சுனாமி" என்ற பதம் முன்னர் யாம் கேட்டறியாதது. அது விளைத்திருக்கும் கேடோ பாரியது.

இணையிலாக் கம்பன் நிலையிலா வாழ்வினை "நீர்க்கோல" வாழ்வு என்றான். நெடிய நீர்க்கோலம் கொடிய போர்க்கோலம் கொண்டதால் உயிர்ச் சேதாரம் நிறைந்த குறுங்கால குருஷேத்திரம் நிகழ்ந்து நிறைவு பெற்றிருக்கிறது.

"சார்ஸ்" வதம் எமக்கு புதிய கொடுமை. சாசுவதம் பெற்ற சாகரத்தின் சாவுக்கரம், சகாவரம் பெறாத ஓர் இலட்சம் மன்னுயிர்களை ஒரே தினத்தில் அணைத்ததுவும், அவர்தம் உடல்களை சிதைத்ததுவும், இந்நிகலுலகில் இதுகாறும் நிகழாத ஒரு நிகழ்வான கொடுமையிற் கொடுமை.

வாழ்வு நீர்க்குமிழி ஒத்த - நித்தியம் அற்ற - நிச்சய சாவினுக்குரிய ஒன்றென்பது நிதர்சனமான, நிச தரிசனம் ஆகிவிட்டிருக்கும் இன்றைய நிலையில் பெருமகன் முருகேசு ஆசானின் பிரிவுச் செய்தி எனக்கு எவ்விதத்திலும் ஓர் அதிர்வுச் செய்தி ஆகிவிடவில்லை!

மரணம் என்பது ஒரு பிரிவு; ஒரு செலவு; ஒரு இழவுதான். அது வரவல்ல வரவேற்பு பெறுவதற்கு. குரும்பைகள் ஒத்த - கருத்துக்கள் நிகர்த்த, குஞ்சு குருமான்கள் ஆயிரக் கணக்கில் நெடும் பயணம் தொடர்ந்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் குரு மனிதரின் நெடும் பயணமும் நிறைவு

பெற்றிருக்கிறது. குருத்து ஓலைகளே கூடுதலாக குதறப்பட்ட ஒரு நிலையில் பைந்தமிழ் பாட்டோலை போல் பயன்பட்ட ஒரு காவோலைக்கு சாவோலை நீட்டப் பட்டிருக்கிறது. பல கருவறைகளே கல்லறைகள் ஆன நிலையில், முகவுரைகளே முடிவுரைகளான பொழுதில், ஒரு பூரண காவியம் தங்க வைக்கப்பட்ட மனையில் தெங்கிலைத் தோரணங்கள் தொங்க விடப்பட்டிருக்கின்றன. தத்தம் வாழ்க்கைப் பாதையின் மையத்தையே காணாத இளவல்களின் உடலங்களே ஊர்வலம் சென்றிருக்கும் நேரத்தில், வையத்தில் வாழ்வாங்கு பெருவாழ்வு வாழ்ந்த பெருமகனின் தியாக காவியம் "மயான காண்டம்" கண்டிருக்கிறது.

ஆயுசு நூறென இப் பெருந்தகையை வாழ்த்திய அனைவரும் பிரமரிசிகளாய் இருப்பரோ? இனிய இவர் வாழ்வும் ஒரு சம்பூரண இராமாயணம் ஆகிவிட்டிருக்கிறது. எனின், சாவீட்டில் கூடியோர் ஓவென்று கூவி அழ இவர் மரணம் அகால மரணமல்ல. சரயூ நதியில் விழுந்திறந்த இராமனை ஒத்த அவல மரணமும் அல்ல.

தன் தாய்மாமன் பிரியா விடைகொண்ட செய்தியை எனக்கு உடன் தந்தவர் அவரது உடன் பிறந்தாளின் உதிரத்தில் பிறந்தவள். என்னளவில் உடன்பிறவாதவள் - பவானி தர்மகுலசிங்கம்.

அவளின் ஏகமகன் கோமகனின் மரணம் அகாலத்தில் நிகழ்ந்த ஒன்று. எனக்கும் அதிர்வு தந்து என்னை அழவும் வைத்தது. அன்று "கோமகனின் இறப்பு; பூமகள் இழப்பு" என்ற மகுடத்தில் அன்று யான் யாத்த பாக்களில் இரண்டினை ஈண்டு தருகிறேன்.

நேயன் தனைப் பெற்றவளை நெடு நாளாய் அறிவேன்
தூய அவளைப் பெற்றவர் ஆய இன பணி அறிவேன்
தாய் வழி மாமன்கள் தகு குணம் நனி அறிவேன்
நேய மிகு தங்காய் நினக்கேன் இக்கதி? அறியேன்.

வித்துவான் முருகேசர் திகழ் மனைத் திரு மகளே
புத்தூர் வாழ் புகழ் ஆசான் முருகேசு மருமகளே
சத்துறு சமுகப் பணியன் இல்லக இணைப் புறவே!
முத்தனை நின் மகற்கு மோட்சம்! இதிலென் ஐயுறவே...?

பலரும் அரைக்கின்ற மாவினை என் பங்கறிகு யானும் அரைப்பதில் பய்ன ஏது? அவர்தம் புகழ்க் கதைகளில் நான் அறிந்த புதுக் கதைகளை புதிர்க்கதைகளை அல்ல - சொல்லப் புகுகிறேன்.

1981இல் யாழ் நூலகம் எரிகிறது என்ற செய்தி, மேலோனும் முப்பத்திரண்டு மொழிகளை அறிந்த நூலோனும் ஆகிய தாவீது அடிகளுக்கு அவரது உயிர் குடிக்கும் பேரிடி ஆயிற்று.

சாந்த சாகரம் என்கிறோம். கட்டாறுகள் அடிக்கடி கரை புரள்வதுண்டு. கடலோ குமுறிக் கொந்தளித்தாலும் பொதுவில் கரைகளை எகிறிப் பாய்வதில்லை. சுனாமி என்ற பேர் மாற்றம் பெற்ற வேளையில் அமைதிப் புனலான அலைமகள் மலைமகள் போல் உயர்ந்த உருவெடுத்து உருக் குலைத்த இடங்களில் கலைமகளின் பீடங்களான கல்விக் கூடங்களும் அடங்கும். அமரரின் பிறந்தகமான அல்வாய்க்கு அருகில் அமைந்துள்ள என் தாய்மண் வல்வையிலே இரு பள்ளிக்கூடங்களுக்கு சுனாமியானது, பலிபீடம் ஆகிவிட்டிருக்கிறது.

வித்தியார்த்தப் பணிகளை விருப்பொடு வாழ்நாளில் வீழ்நாள் இன்றிப் புரிந்தும், சிறீலங்கா வித்தியாசாலை உருப்பட வழிவகை புரிந்தும் ஒரு நடமாடும் கலைக்கூடமாக இருந்த இந்த முன்னாள் அதிபரான முது அறிஞனின் ஆத்மாவிற்கு இத்தகைய அழிவுகளைத் தாங்கும் சக்தி இல்லாததாற்றான் அவ்வான்மாவானது, தீர்க்க தரிசனத்தோடு தன் தீர்க்க ஆயுளுக்கு ஒரு முத்தாய்ப்பை வைத்திருக்கவேண்டும்.

முருகேசனார்க்கு அயோத்தி - மிதிலை அனைத்துமே அல்வாய்தான். பின்னாளில் அவர் புத்தூருக்கு புது வரவானார். அல்வாயை அரவணைத்து வைத்திருக்கும் பருத்தித்துறை முந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு.க.துரைரத்தினம் என் உறவுக்காரன், உற்ற நேயன். அந்த முன்னாள் ஆசான் இந் நல்ஆசானுக்கு இனிய தோழன். புத்தூரை உள்ளடக்கும் கோப்பாயின் அந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் சி.கதிரவேற்பிள்ளை ஒரு சிந்தனைப் பேழை: ஒரு சீரிய சட்ட மேதை. அவர்தம் சட்டப் பாசறையில் யான் சட்டம் பயின்ற பிள்ளை. அவரால் நெஞ்சார நேசிக்கப் பெற்றவர் முருகேசு மாஸ்டர் என்ற இந்த சட்டாம் பிள்ளை.

அன்று பௌத்த சிங்கள அரசின் பக்க துணையுடன் கத்தி இன்றி இரத்தம் இன்றி செந்தமிழரை வீழ்த்த சிங்களவராய் மாற்ற முற்பட்ட அணியினரை எதிர்த்து நின்ற இருவர் அணி (Tag team) இவர்களது.

ஒரு சமயம் எனது சமூகத்தில் திரு.கதிரவேற்பிள்ளை, அவர்களிடம் "மாஸ்டர் ஒரு சிங்கள இந்து கூட இல்லாத இந்த நாட்டிலே எப்படி நாங்கள் எங்கள் பகுதியில் புத்த பள்ளிக் கூடம் அமைவதையும் தமிழ்ப் புத்தர்கள் உருவாவதையும் அனுமதிக்க முடியும்?" எனக் கேட்டார். அப்போது அமைதிப் பூங்கா அன்ன அவர் வதனத்தில் கோபம் கொப்பளிக்கப் பார்த்தேன்.

1986இல் எங்கள் வல்வை விழாக்கோலம் கொண்டது. அப்போது அதன் நடுநாயகமாய் அமைந்த சனசமூக சேவா நிலையம் வெள்ளி விழா கண்டது. அந்நாள் நிலையத் தலைவரும், பிந்நாள் நகர முதல்வருமான ஞானமூர்த்தி அப்பா கவியரங்கு ஒழுங்கு பண்ணும் பாரிய பணியை பள்ளி மாணவன் எனக்கு தருகிறார்.

நான் இலக்கு வைத்த பெருங்கவிகளுள் ஒருவர். காரைநகரில் பூத்த கவிமலர் அல்வாய்க்கு வாய்த்த மருமகன் - பேர் கவிஞர் காரை.செ.சுந்தரப்பிள்ளை. இறைமை - தாய்மை - கோண்மை - காதல் - சகோதரத்துவம் என்ற தலைப்புகளுடன் முதன்முதலாக சுந்தரக் கவிஞரை கண்டிடச் சென்றேன். அவர் புதுமனையாள் வெகு அன்போடு வரவேற்றார். காதல் தலைப்பை ஏற்றார். "தம்பி கட்டாயம் அவர் வருவார்" என்று உறுதி மொழியும் தந்தார். திரும்பும் வழியில் முருகேசு மாஸ்டரைக் கண்டேன்; கதைத்தேன்.... "கவிஞரின் மனைவிளக்கு தனிமகள் எனக்கு" என விளக்கினார். "இந்திரா" அவர் பேர் என்றும் சொன்னார்.

கண்ணதாசன் பாடிய வரிகள் என் நினைவுக்கு வருகின்றன.
இந்திய மலைகளில் எல்லாம் நான் இந்திராவைப் பார்க்கிறேன்
இந்திய நதிகள் தோறும் இந்திரா எனும் ஒலி கேட்கிறேன்
இந்தியா இந்திராவே; என் இந்திரா தான் இந்தியாவே.

முருகேசு மாஸ்டருக்கு எல்லாமே இந்திராதான் என்பதையும், அமண்ணின் முதல் பல்கலைக்கழகப் பட்டதாரி அந்த இந்திரா தான் என்பதையும், பின்னர் நான் தெரிந்து கொண்டேன். கவியரங்கக் கவிஞர்க்கு கவிதையிலே நன்றி சொல்கையில் யான் சொன்னேன்.

காரைச் சுந்தரரை கண்டிடச் சென்றேன்.
கார் கொண்டுதான் அல்வாய் சென்றேன்
இல்லான் இல்லால் அன்றகன் றிருந்தார்

இல்லாள் இல்லினுள் நன்கமர்ந் திருந்தார்
கணவனின் அழைப்பை மகிழ்வுடன் ஏற்றார்
களவியல் தலைப்பை நகுவுடன் ஏற்றார்
களவியல் வாழ்வின் உயர்நிலை கண்டேன்
களிப்பொடு விடை தர யான் கொண்டேன்.

ஒருநாள் மாஸ்டர் எதிரிகளே இல்லாத இனிய கதிரியரின் சட்டப் பணிமனைக்கு சில அன்பர்களுடன் வருகிறார். "சின்னண்ணை (அனைவருக்கும் அவர் சின்னண்ணை தான்) உங்களிடம் புத்தூரில் உள்ள காணிகளை எங்கள் பகுதி ஏழைகட்கு பகிர்ந்து கொடுக்க வேணும்' எனக் கேட்டார். சின்னண்ணை ஒரு நிறைகுடம். அவர் வார்த்தைப் பதங்கள் என்றுமே சொற்சிக்கனதோடு தான் வெளிப்படும். ஆனால் அவற்றினுள் அர்த்தங்களோ செறிந்திருக்கும். "ஓம் மாஸ்டர். நான் தாறன். நான் தாமதம் இல்லாமல் தாறன். ஆட்களை ஆயுத்தம் செய்யுங்கோ. மாஸ்டர் நீங்களும் தேவைக்கு அதிகமாக வைத்திருக்கிறீங்கள். கொஞ்சம் தாருங்கோவன்.

இப்போது பந்து மாஸ்டரின் பாதத்தில். அடுத்த கட்ட பந்தடியைப் பார்;கக அவாவுகிறேன். உலகின் உன்னத காற்பந்தாட்டக்காரனான பிரேசில் நாட்டின் பேலே (Pele) பற்றி ஒரு விமர்சகன் எழுதினான்.

"He stops the ball and kicks the ball in the same moment"

அதே வேகத்தை அன்று மாஸ்டரில் அவதானித்தேன். "ஓம் தாராளமாக நானும் தருகிறேன்" இரு வாரங்களில் இருவர் காணிகளும் பங்கிடப்பட்டு இலவசமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. அந்த உறுதிகளை எல்லாம் அத்தாட்சிப்படுத்தியவர், சின்னண்ணையின் ஒரு கனிஷ்ட சட்டத்தரணி. எனக்கு அவர் சிரேஷ்ட சட்டத்தரணி. அந்த அக்கா அப்போது செல்வி. வசந்தா இராஜசிங்கம், இன்று திருமதி. வசந்தா அருளையா ஆகி கனடாவில் வன்கூவரில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

நன்னெறி என்ற பழந்தமிழ் பனுவல் நமக்குக் காட்டும் நல்வழிகளில் ஒன்று.

"எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்தென்று அவர்
மைந்தர் தம் ஈகை மறுப்பரோ?"

"இரப்பார்க்கு ஈந்து இருப்பதை இழப்பாரின் மக்கள் மட்டுமல்ல மருமக்களும் ஈகை மறுக்கார்" என்பதற்கு ஓர் உதாரண அமர புருசனை

எங்கட்கு ஈண்டு அடையாளம் காட்ட விழைகிறேன். தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளையோர் அங்கமான தமிழ் இளைஞர் பேரவை 1974ஆம் ஆண்டு ஆடித் திங்களில் சிறை இருக்கும் இளைஞர்களுக்கு நிதி சேர்த்தது. அதனைப் பொறுப்பேற்று பொறுப்புணர்வோடு நிறைவேற்றிய அன்றை அகிம்சைப் போராளி உமாமகேஸ்வரன் தான் பிந்நாளில் ஆயுதப் போராளி யகிய புளட் இயக்கத்திற்கு தலைமை தாங்கிய முகுந்தன். வெள்ளவத்தை தரைப் பகுதிக்கு பொறுப்பேற்ற யான் அதிக நிதி சேர்த்தவரை விட ஆறு பங்கு அதிகம் சேர்க்க முடிந்தது. அதற்குத் தலையாய காரணம் கருணையோடு நிதி தந்த ஒருவர். அவர் பெயரே கருணாநிதிதான். 1000.00 ரூபாவை அவர் அள்ளித் தந்தார். அது அன்றை காலகட்டத்தில் மிகப் பெருந்தொகை. ஒரு பட்டதாரியின் மூன்று மாத வேதனம். அப்போது வெள்ளவத்தையில் இன்னும் இரு சட்ட மாணவர்களுடன் நான் குடியிருந்த அறை வாடகை ரூ. 150.00 மட்டுமே. அன்று கணக்கியல் விரிவுரையாளனாக கொடி கட்டிப் பறந்த அவருக்கு பயிற்றும் கலை கைவந்த கலையாகக் காரணம், அவர் பிறப்பால் ஆசிரியப் பயிற்சியில் அதி தேர்ச்சி பெற்றவரான எம் முருக ஈசரின் மருகர் ஆனமையே.

ஒரு சமயம் கலைஞர் கருணாநிதிக்கு விழா எடுத்தவர்கள் உங்கள் பேரில் கருணையும் உண்டு. நிதியும் உண்டு. கருணையுடன் நிதி தரவேண்டும் என்றார்கள். ஆனால் அந்த சொற் சிலம்பாட்ட வீரரோ....'என் பேரையே பாருங்கள். கருணை மூன்றெழுத்து, நிதி இரண்டெழுத்து. அங்கேயும் நிதிக்கு தட்டுப்பாடு, பற்றாக்குறை; எப்படி நீங்கள் கேட்டதை எல்லாம் தரமுடியும்......?" என்க் கேட்டு கழுவிய மீன்களில் அவர் நழுவிய மீன் ஆனார்.

ஆனால் எங்கள் ஈழக் கருணாநிதி அண்ணனிடமோ கனநிதியும் அன்றிருந்தது. ஈழத்தில் கரிசனையும் குருதி மணி நீருடன் கலந்திருந்தது. எனவே தாராளமாகவே தந்திருந்தார்.

கட்டுரை கட்டுரைக்கக் கூடாதல்லவா? இன்னோர் நிகழ்வுடன் அமைகிறேன். 1975இல் த.இ.பேரவையின் அனைத்திலங்கை இடைக்கால அமைப்பாளருள் ஒருவனாகவும், பருத்தித்துறை கிளையின் தலைவனாகவும் இருந்த நான் எங்கள் கீரைப் பாத்தி ஒத்த கீலத் தொகுதியில் பன்னிரண்டு

கிளைகளை அமைத்தேன். அல்வாயில் பலத்த எதிர்ப்புக்களை எதிர் கொண்டோம். எதிரணிக்கு தலைமை ஏற்றவர் அன்றும் இன்றும் என் நண்பனான கனடா வாழ் சட்டத்தரணி திரு.மு.சிவகுருநாதன் "இட இடதுசாரிகளின் கோட்டை. நாம் ஒரேகுரலில் பேசியே பழக்கப்பட்வர்கள். இங்கே மாற்றுக் கட்சிக் கிளை அமைப்பதை நாம் அனுமதிக்க மாட்டோம்". என வாதாடினார். சிங்களவர்களுடன் ஜனநாயக உரிமைகளுக்குப் போராடிய நாம், அன்றைய தினம் உரிமைக்காக எங்களவர்களுடன் போராட நேரிட்டது. அது கண்டனங்கள் சொல்பவர்கள் கண்டதுண்டமான காலம் அல்லவே. மாலை ஏழு மணிக்கு ஆரம்பமான கண்ணியமான சொற் போர் சிலமணி நேரம் தொடர்ந்து, வெற்றிகரமாக கிளையை அமைத்துவிட்ட நாம் திரும்பியபோது நேரம் அதிகாலை மூன்று மணி இருக்கும்.

அன்று எங்களுக்கு பக்க, தக்க துணையாக நின்றவர்களுள் எங்கள் விறலோன் முருகேசு அவர்கள் பெற்ற முத்துக்களும், அவர்தம் மைத்துனர் வித்துவான் முருகேசு அவர்கள் பெற்ற வித்துக்களும் உள்ளடக்கம். அவர்களில் ஒருவனும் பவானியின் தம்பியுமான நவயுகன் ஆசிரியர், பாதியில் உதிர்ந்துவிட்ட ஒர பாரிஜாத மலர்.

1987 வைகாசியில் ஒப்பரேசன் லிபரேசன் இடம்பெற்ற போது என் சட்ட ஆலோசனைக் கூடம் முற்றாக தகர்ந்திருந்தது. அப்போது உருக்குலைந்த ஆவணங்களுள் ஒன்று முருகேசு ஐயா எழுதிய ஒரு முடங்கல். 1976 சித்திரையில் வல்வை முத்து மாரியம்பாள் ஆலயப் பிரவேசம் நடத்தி, எம்மவரிடமே அடி வாங்கயிருந்த வேளையில் உடல், உள வாதைகளுக்கு ஒத்தடம் தந்த மடல் அஃது. அவரது எழுத்தைத் தாங்கி வந்த திருமுகம் சின்னா பின்னமாகி சிதைந்திருக்கலாம். ஆனால் அமரர் முருகேசு அவர்கள் இலட்சணம் மிகுந்த - இலட்சியம் பொதிந்த திருமுகம். அம் தேவஸ்தான ஆலயம், நான் சிதை ஏறும் நாள்வரைக்கும் என்னுள் சிதையாது இருக்கப் போவது நிச்சயம்!

# 19

## உங்களைப் போற்றுகின்றோம்

முதுகலைஞர் கலாபூஷணம்
நவாலியூர் நா.செல்லத்துரை

பஞ்சமர்க் காய்ச்சமூக சேவையைச் செய்துதாழ்ந்தோர்
பட்டஅத் துயரங்களை இயன்றன வாய்த்துடைத்த
முருகேசு அண்ணலேமா போற்றலுக் குரியவரே
புதுஏடு ஒன்றைத்தாழ்ந்தோர் உயர்வுக்காய்த் தந்தவரே
அநீதியை எதிர்த்துநாங்கள் சமத்துவங் காணஉணர்வுக்
கனதியைத் தந்திட்டீர்கள் உங்களைப் போற்றுகின்றோம்

**தெய்வத்தால் அனுப்பப்பெற்ற**
**இவர் ஒரு.......**

வடஅல்வாய் மக்களெல்லாம் ஒன்றிணைந்து செய்துநின்ற
தவமெல்லாம் பலித்துஅல்வாய்த் தலம்வந்த புரட்சிவீரன்
முருகேசனார் மாபுகழை முழுமனதாய் ஏத்திப்பாடி
அவதாரப் புருஷனென்று அவரைநாம் போற்றுவது
நிச்சயம் தகுதியாகும் எவரெவர் எதைச்சொன்னாலும்
சத்திய மாகஅவர் தெய்வத்தின் அவதாரம்தான்

**இவர் பிறந்தார் ஏன்......**

நாங்களும் உங்களைப்போல் இம்மண்ணில் பிறந்தவர்தான்
"நீங்களும் எங்களைப்போல் நற்தமிழ் நாவினர்தான்
உருவமும் அப்படித்தான் உண்மையில் மாற்றமில்லை
பருவமும் வளரும்போது சமமாகத் தானிருக்கும்

இரத்தமும் சிவப்பேயன்றி வெவ்வேறு நிறமாயில்லை
வருத்தமும் சுகபலமும் இருவர்க்கும் ஒன்றுதானே
இப்படி நாமிருக்க இங்கேனோ வேறுபாடு
செப்படி வித்தைகாட்டிச் செகத்திலே எம்மைச்சாதி
குறைந்தவர் என்றுதள்ளிக் கழித்திட உங்களுக்கு
உரைத்தவர் மண்ணவரா உணர்த்தியோர் விண்ணவரா
இல்லையேல் பாதியிலே நீங்களே ஆக்கியதா
தொல்லையே தந்து எம்மைத் தாழ்த்துதல் நீதிதானோ
உயர்சாதிக் குணமிதுவா கூசாமல் எங்கள்சாதிப்
பெயர்கூறி எம்மைத்தள்ளி வைப்பதும் நியாயம்தானா
ஆண்சாதி பெண்சாதியாய் ஆனார் சாதியன்றி
வான்ஆதி வகுத்ததுண்டா வெவ்வேறு சாதிகளை...?"
என்றெல்லாம் தம்மனதில் எழுந்ததை எண்ணியெண்ணி
விண்ணெல்லாம் முட்டுதற்கும் மண்ணெல்லாம் அறிவதற்கும்
குரல்தனை எழுப்பிஇந்தக் கோரமாம் அநீதிநிறை
மறத்தினைச் சாடிச்சாதி மனவெறி மாற்றிடவே
மனங்கோணாச்சமூகசேவை கீழ்ச்சாதி மக்களுக்காய்
தினந்தோறும் செய்தவர்கள் துயரினைத் துடைத்துநிற்கின்றார்
இச்சேவை தெய்வசேவை என்பதை உணர்ந்துதானே
தம்வாழ்வை அர்ப்பணிக்க இம்மண்ணில் அவர்பிறந்தார்.

**குதிக்க முடியாத் தேர்தலிலே இவர்.....,**

உரிமைகள் மறுக்கப்பட்டு உடமைகள் எரிக்கப்பட்டு
சலுகைகள் கூடஇங்கு கொடுத்திடோம் பஞ்சமர்க்கு"
என்றெல்லாம் சாதிமான்கள் அக்காலம் எழுப்பிநின்ற
மண்ணெல்லாம் பரப்பிநின்ற உயர்சாதிக் கொடுமைதனை
முறித்துமே பஞ்சமரும் முன்னேற்றம் காண்பதற்காய்
விழித்துமே எழுந்து ஆட்சி மன்றுக்குள் இடம்பிடிக்க
கட்டைவேலிக் கிராமசபைத் தேர்தலிலே களங்குதித்தார்
நொட்டைசொல்லிக் கூத்தடித்தோர் வெட்கும்படி வென்றதால்
தாழ்த்தப்பட்டோர் வாழ்வினிலே தெய்வமானார் முருகேசனார்
உயர்ந்தவர்கள் வாழ்வில்ச் சவால் ஆயுதமாய்க் காட்சி தந்தார்.

**திறக்காத ஒரு சில**
**கோயில்க் கதவுகள்.....**

"கீழ்சாதி உங்களுக்குக் கடவுளிலே பக்தியென்றால்
மேல்சாதி எங்களது கோயிலாடா வணங்குவதற்கு
எங்கள்கோயில்க் கதவுகளோ ஏற்றிடாது கீழ்ச்சாதியை
உங்கள்பாதம் அங்குவந்து உட்புகுந்து வணங்குவதற்கு"
என்றுரைத்த மேல்சாதியின் அதிகார வார்த்தைக்கும்
வாய்அடைத்துச் சவால்நாட்டப் புறப்பட்ட நான்குபேரில்
ஒருவர்முரு கேசனாராம் இவருடன் கவிஞர் சைவப்
புலவர் ஆ.ம செல்லத்துரை நான்குபேரும் வடமராட்சி
நான்குபேரும் அகிலஇலங்கைச் சைவசமயச் சமரசங்கள்
தோற்றுவித்து ஸ்ரீகாந்தா – ஸ்ரீபத்ம நாதன்-சிவ ஞானசுந்தரம்
குமாரசாமி ஸ்ரீகந்தராசா என்றபெரி யோர்சகிதம்
நியாயவாதம் கோயில்க்குரு மார்களுக்கு எடுத்துரைத்து
வண்ணைசிவன் கோவிலிலும் வரதராஜப் பெருமாளிலும்
சிந்தைஉவந் தருள்புரியும் வேலவன்வாழ் நால்லூரிலும்
தாழ்த்தப்பட்டோர் இறைவணக்கம் தாராளமாய்ச் செய்வதற்குச்
சேர்க்கப்பட்டார் சரித்திரந்தான் கதவுகளும் திறபட்டன.

**வானுறையும் தெய்வத்துள்**
**வாழும்கிறார் அவரை....**

தெய்வமொன்று சாட்சியாக வாழ்ந்து காட்ட வேண்டுமென்றே
புத்தரையும் யேசுவையும் நாயகமாம் நபிகளையும்
இத்திரையில்ச் சத்தியத்தின் இதயமான காந்தியையும்
கற்பனையில் அல்லாமல்தன் உண்மைவாழ்வில்க் கடைப்பிடித்து
விற்கலையில் அர்ச்சுனன்போல் தெய்வவாழ்வில் சிறப்புங் கண்ட
அல்வாய்தந்த முருகேசனார் சமூகப்பணி வித்தகனார்
எவ்வாயிலும் பேசப்படும் எற்றமிகு செம்மனத்தார்
வாழ்வாங்கு வாழ்ந்ததனால் வானுறையும் தெய்வத்துள்ளே
சீர்பொங்கு அமரராகி வாழுகிறார் போற்றுகிறோம்.

# 20

## ஒரு சமூக எழுச்சியின் முதல் அத்தியாயம் மூதறிஞர் கந்த முருகேசு ஆசிரியர்

சுவிஸில் இருந்து
ஆழ்வார் காசிநாதர் யோகராஜா (சைவம்)

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறுகிறார்கள்....

"யாழ்ப்பாணத்தின் சமூக அமைப்பிறுக்கத்தைத் தொடர்ந்து நாம் பேச வேண்டுமா? என்று நாம் கேட்கக்கூடிய அளவுக்கு நெகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது உண்மையே. ஆனால் இந்த நெகிழ்ச்சி திடீரென ஏற்பட்ட ஒன்றல்ல. இதற்காக பல போராட்டங்கள் நடத்தப்பெற்றன. கொலைகள் திட்டமிடப் பட்டன. கொலைகள் நிகழ்ந்தன. இயக்கங்கள் நடத்தப்பெற்றன. நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

தமிழரின் ஒற்றுமை நிலையியற் போராட்டம் நடைபெறும் இன்றைய காலகட்டத்தில் இந்த ஒருமை நிலை உருவாவதற்குக் காலாக, பசளையாக இருந்தவர்களை நினைவுபடுத்திக் கொள்ளல் அவசியம். யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சியில் சமமான சமூக வாய்ப்புக்கள் இருத்தல் வேண்டும் என்ற போராட்டத்தில் கந்த முருகேசு உபாத்தியாயரின் பெயர் முக்கியமானது. இதுவரை எழுதப்படாத வரலாறுகள் எழுதப்படட்டும். போற்றப்படட்டும்" (முருகேசு ஆசிரியரின் பவளவிழா மலரில்).

சுனாமிப் பேரலையின் கொடூரங்களும், கோர அழிவுகளும் அதனால் உருவான துன்ப துயரங்களும், எம்மைச் சூழ்ந்த கார் மேகங்களும் விலகிக் கொள்வதற்கு முன்பாகவே 2005 புத்தாண்டின் மறு தினம் 02.01.2005 ஞாயிறு அன்று மூதறிஞர் கந்த முருகேசு அவர்கள் தமது 95வது வயதில் இயற்கை எய்தினார். டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அவரது நூற்றாண்டு நினைவை அடுத்தும், தலித்திய நோக்கிலும் தமிழ் நாடு அடங்கலாக இந்தியா முழுவதும்

மீழுயிர்ப்புப் பெற்றுவருகின்ற இன்றைய சூழலில் திரு.கந்த முருகேசு அவர்களின் இறப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததே.

தலித் மக்களின் விடிவை நோக்கிய பயணத்தில்,

1. கல்வியைப் பரப்புவது
2. அரசுப் பணிகளில் அதிக பிரதிநிதித்துவம் பெற்றுத் தருவது,
3. கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்நிலையை முன்னேற்றுவது.

ஆகியவற்றை வாழ்க்கையின் மூன்று குறிக்கோள்களாகக் குறிப்பிட்டவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள்

திரு.கந்த முருகேசு அவர்கள்

**சாதி எதிர்ப்பு உணர்வலைகளை பல்வேறுபட்ட வழிகளில் முந்நிறுத்தியவர், தாழ்த்தப்பட்ட சமூகத்தின் வாழ்நிலைப் பண்பாட்டின் பிதாமகன், இவர் ஒரு சமூகத்தின் வரலாறு.**

ஆகிய முக்கிய பிரமாணங்களில் இவர் தாழ்த்தப்பட்ட மக்களின் மேலாளன் ஆகின்ற அதேவேளையில் தமிழ் மொழிவழி சார்ந்து தமிழ்த் தேசிய வளர்ச்சிக்காக அன்றிலிருந்து செயற்பட்ட மூத்த சிந்னையாளரும் ஆவார்.

தமிழ் தேசிய எழுச்சியின் தற்கால அலைகளுக்கு மத்தியில் இளந் தலைமுறையினர் இவரைப்பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பில்லைத்தான். இருந்தும் கடந்த ஐந்து ஆண்டுகளுக்குட்பட்ட காலத்தில் ஆண்டு 2000 ஜனவரி 12க்குரிய சரிநிகர் பத்திரிகையில் வெளிவந்த இவருடனான உரையாடலிலும், பிரான்சில் இருந்து வெளிவரும் உயிர் நிழல் சஞ்சிகையின் 2001 மே - ஆகஸ்ட் இதழில் மறு பிரசுரம் செய்யப்பட்ட (1993 ஆண்டு பவளவிழா மலரில் தெணியான் அவர்கள் எழுதிய) இவரது வாழ்க்கை வரலாறும் இவரைப் பற்றிய அண்மைக்காலப் பதிவுகளாகும்.

சரிநிகர் பத்திரிகையில் இவரைப்பற்றிய அறிமுகம் இப்படித்தான் ஆரம்பிக்கிறது..... "1999 நவம்பர் 26ம் திகதி தனது எண்பத்தொன்பதாவது வயதைக் கடந்திருக்கிறார். அல்வாய் வடக்கைச் சேர்ந்த முருகேசு

உபாத்தியார். தனது வாழ்க்கையையே பஞ்சமர்களின் விடுதலைக்காக அர்ப்பணித்த முருகேசு உபாத்தியாயர் மிகவும் எளிய வாழ்க்கையே வாழ்ந்து வருகிறார்.

அல்வாய் ஸ்ரீ லங்கா வித்தியசாலை, புத்தூர் ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் என்பவற்றின் ஸ்தாபகரான முருகேசு உபாத்தியாயர் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் உபதலைவராகவும், சைவ ஹரிசன வாலிபர் சங்கம், வடமராட்சி சமூக சேவா சங்கம், மக்கள் முன்னேற்ற மற்றும், சமூக புனருத்தாரண ஐக்கிய சங்கம், காந்தீய சேவா சங்கம், சைவ சமய சமரச சங்கம் போன்றவற்றின் மூலமாகவும் பெரும் சமூகத் தொண்டாற்றியுள்ளார். முருகேசு உபாத்தியாயர் ஒரு பத்திரிகையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. யாழ் வைத்தியர் முருகேசு நடத்தி வந்த தூதன் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று சிறிது காலம் நடத்தி வந்தார். தூதன் பத்திரிகையில் தான் டானியலின் முதற் படைப்பு பிரசுரமானது.

சிறு பராயத்தில் இருந்து இளமைக்காலம் வரையான மனித வளர்ச்சியை நோக்குவோமாயின் பொதுவாக 5,9,12,16 ஆகிய வயது நிலைகளை அடுத்து 18 வது வயது மிகமுக்கியவயதாகக் கருதப்படுகின்றது. மகாத்மா காந்தி அவர்கள் முதன் முதலாக 1927ஆம் ஆண்டு நவம்பர் 26இல் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் கால் பதித்த அன்று, திரு.கந்த முருகேசு அவர்கள் தமது 18வது வயதின் நுழைவாயிலில் அடி வைத்திருந்தார். தமது 18வது வயதின் ஆரம்ப நாளன்று மகாத்மா காந்தி அவர்களின் தரிசனத்தைப் பெற்றதனாலோ என்னவோ திரு.கந்த முருகேசு அவர்கள் தன்னையும் ஒரு சாந்தமான, அமைதியான, காந்திய வாதியாகவே நிலை நிறுத்திக்கொள்ளத் தலைப்பட்டார். யாழ்ப்பாண சாதிய ஒடுக்குமுறைச் சமூக நிலைமை அவரை ஒரு காந்தியவாதியாகத் தொடர்ந்திருப்பதற்கு அனுமதிக்கவில்லை. தம்மையும், தம்மைச் சார்ந்த சமூகத்தையும் சாதிய ஒடுக்குமுறையில் இருந்து விடுவிக்கும் பொருட்டு பல்வேறுபட்ட போராட்ட வழிகளில் முன்செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார். அவரது ஆத்மார்த்த விருப்பு வெறுப்புக்களையும் தாண்டி, சூழ்நிலை அவரது வாழ்நிலையை நிர்மாணித்தி ருந்தது.

சமபந்தி போசனத்தை ஆதரித்திருந்த இவரது மனத்திடத்தினால், 1929இல் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சிலகாலம் மூடப்பட்டிருந்தது. மீண்டும் அது திறக்கப்பட்போது சூழ்ச்சியுடன் கூடிய முயற்சியினால் அவருக்கான அனுமதி அங்கு மறுக்கப்பட்டிருந்தது. ஓராண்டு காலம் தாமதித்து வேறொரு (தெல்லிப்பளை மிசனரி) ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அனுமதியைப் பெற்றுக் கொண்டார்.

இவரது ஆரம்பகாலக்கல்வியும் இவ்வித ஒடுக்குமுறைகளுக் கூடாகவே நகர்ந்தது. அல்வாய் வடக்கு இன்பருட்டி வெஸ்லியன் பாடசாலையில் ஆதிக்க சமூகத்து மாணவர்கள் கதிரை மேசைகளில் அமர்ந்தபோது இவர் மண்ணில் இருந்தே கற்கவேண்டியகட்டாயம்.

1920களின் ஆரம்பத்தில் ஹண்டி பேரின்பநாயகம் அவர்களும், அவரது நண்பர்களும் மேற்கொண்ட முன்முயற்சியினால் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரஸ்தான் நிறுவனரீதியான சாதிய எதிர்ப் புணர்வுக்கு கால்கோளாக அமைந்த முதல்ஸ்தாபனம்.

"தமிழர் சமுதாயத்தின் வரலாற்றில் இவ் வாலிபர் காங்கிரசுக்கு என்றும் அழியாத புகழுண்டு. ஏனெனில் தமிழர்கள் மத்தியில் தேசப்பற்று, தேசிய உணர்வு, மொழி, கலாசார, சமூகப் பார்வைகளில் தெளிவு, சாதி தீண்டாமைக்கு எதிரான நடைமுறைச் செயல்பாடு என்பவற்றில் காங்கிரஸ் முற்போக்கான பாத்திரத்தைக் கொண்டிருந்ததை எவரும் மறுப்பதற்கில்லை.....

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் தீண்டாமைக்கு எதிரான முனைப்புமிக்க நடவடிக்கைகளின் மத்தியிலேயே தாழ்த்தப்பட்ட மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் தனியான ஸ்தாபனம் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. (சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் - பக். 51,54).

இவ் ஸ்தாபனம் தி.யோவேல், திரு.டி.ஜேம்ஸ் ஆகியோரை இணைச்செயலாளர்களாகக் கொண்டு ஆதிக்க சமுகத்தைச்சேர்ந்த நல்லெண்ணம் கொண்டவரான திருநெவின் செல்லத்துரை அவர்களின்

தலைமையில் 16,07 1927இல் 'ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கம்' என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் இங்கு நோக்கப்படவேண்டிய முக்கிய விடயம், தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகம் 1910களில் இருந்தே எழுச்சி கொள்ள ஆரம்பித்துவிட்டது என்பதுதான். சமூக எழுச்சி என்பது சாதியத்துக்கு எதிரான நேரடிப் போராட்டம் மட்டுமல்ல. ஒரு சமூகம் பண்பாட்டு நெறிமுறைகளை நோக்கி நகர்த்தப்படுவதும், வளர்ச்சியை நோக்கி உயர்த்தப்படுவதும்கூட சமூக எழுச்சியின் வெளிப்பாடே. வடமராட்சி தாழ்த்தப்பட்ட சமூகத்தின் கல்வி சார்ந்த எழுச்சியின் முதல் அத்தியாயம் 1917ஆம் ஆண்டு தேவரையாளி சைவ வித்தியாசாலையின் தோற்றத்துடன் ஆரம்பமானது. இதன் பிதாமகன் வதிரி சூரன் அவர்கள். அன்றைய கிறிஸ்தவப் பரம்பல், ஆதிக்க சமூகத்தின் சாதிரீதியான மிரட்டல்கள் என்று இரு முனை எதிர்ப்புக்களின் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட இம் முயற்சி வடமராட்சி தாழ்த்தப்பட்ட சமூகத்திடையே ஓர் ஒருமை நிலையைத் தோற்றுவித்திருந்தது. இது அன்றைய சமூகச் சூழலில் இருந்து நோக்கப்பட வேண்டிய ஒரு பேரெழுச்சி என்பதில் ஐயமில்லை.

அல்வாய் வடக்கு (திரு.கந்த முருகேசு அவர்களின் தந்தை) கந்தப்பு அவர்கள் உட்பட ஆசான்கள் சிலரது ஆசிரியப் பணியினாலும், இன்னும் பலரது முயற்சிகளினாலும் இது மேலும் வளர்ச்சி பெற்றது. பின்பு அது கல்வி, பண்பாடு, அறநெறி, சார்ந்து திரு.சூரன் அவர்களின் வழி வந்தவர்களாக விளங்கிய கவிஞர், பண்டிதர் மு.செல்லையா ஆசிரியர், சைவப்புலவர் திரு.சி.வல்லிபுரம் ஆசிரியர், திரு.ஆ.ம.செல்லத்துரை ஆசிரியர், திரு.கந்த முருகேசு ஆசிரியர் ஆகிய நால்வர்களினால் தொடரப்பட்டது.

இவர்கள் கல்வி, பொருளாதார மேம்பாட்டினாலும் சமூக நடைமுறை மாற்றங்களினாலும், சைவசமய பண்பாட்டுக்குரிய ஒழுங்கு விதிகளை மேற்கொள்வதன் மூலமும், தாழ்த்தப்பட்ட சமூகத்தின் இருத்தலை ஆதிக்க சமூகத்திற்கு ஒத்த வகையில் உயர்த்த முற்பட்டனர். இதன் மூலம் சாதிய ஒடுக்குமுறைகளில் இருந்தும் எமது சமூகத்தைவிடுவித்துக் கொள்ளலாம் என்றும் எண்ணினர். இவர்களது இத்தகைய முன்னெடுப்புக்கள் சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக பாரிய பலன்களை விளைவிக்காவிட்டாலும்,

வாழ்வியலில் பல மாற்றங்களை உண்டுபண்ணியது என்ற வகையில், இவர்கள் வடமராட்சி தாழ்த்தப்பட்ட சமூகத்தின் வாழ்நிலைக் கருத்தியலின் பிதாமகர்கள் ஆனார்கள்.

இவர்களது இத்தகைய முன்னெடுப்புக்களினாலும், தேவரையாளி சைவ வித்தியாசாசை, தேவரையாளி இந்துக் கல்லூரியாகப் பரிணமித்து வடமராட்சி தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு ஒளியூட்டியமையினாலும் வடமராட்சி பள்ளர் சமூகத்தை தேவரையாளிச் சமூகம் என்று அடையாளப் படுத்துகிறார் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள்.

வடமராட்சியில், துன்னாலை, கரவெட்டி, கரணவாய், அல்வாய், பொலிகண்டி, சமரபாகு பருத்தித்துறை தும்பளை என்று பரந்து வாழ்ந்த பெரும்பான்மையான தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வி கிட்டத்தட்ட 1965 ஆம் ஆண்டுவரை தேவரையாளி இந்துக் கல்லூரியில்தான் மையங்கொண்டிருந்தமையையும் நுனித்து நோக்கவேண்டும்.

திரு.கந்த முருகேசு அவர்கள், மேற்படி செயற்பாடுகளை அல்வாய் வடக்கு, புத்தூர் என்று மேலும் சில கிராமங்களுக்கும் நகர்த்த விரும்பினார். வெற்றியும் பெற்றார். இவர் தேவரையாளிச் சமூகத்தின் பரிமாணங்களுக்கு அப்பால், வேறு பல செயற்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஓடிக் கொண்டிருக்கும் சமூகத்தின் கடிவாளத்தைப் பிடித்துக்கொள்ளும் சாரதியாக இவர் இருந்ததில்லை. சமூகத்தில் மாற்றங்களை உண்டுபண்ண விரும்பிய இவர், சமூகத்தின் தட்ப வெப்ப சூழலுக்கேற்ப, தமது வழிமுறைகளிலும், நெறிமுறைகளிலும், ஏன்.... போராட்ட முறைகளிலும்கூட நடைமுறை வாழ்வியலை மையப்படுத்தினார். இவர் என்றுமே ஒரு கலகக்குரலாக ஒலித்திருக்கிறார். அது சாதியத்தை எதிர்த்தும் ஒலித்தது. இன ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் எழுந்தது. ஆதனால்தான் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள், இவரது பவளவிழா உரையிலே முதுமாணிப் பட்டத்துக்கான ஆய்வை மேற்கொள்ளும் மாணவர்கள், (ஆழ்நிலையில் ஒரு மனமும், புறநிலை முரண்பாடு கொண்ட) இவரது வாழ்வியலை தமது கருப்பொருளாக கொள்ளமுடியும் என்று கூறினார்".

திரு.கந்த முருகேசு அவர்கள் சமூகப் புனருத்தாரண ஐக்கிய சங்கம் ஒன்றை உருவாக்கி அல்வாய்க் கிராமத்திற்கான பிரத்தியேகச் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கினார். 1936இல் "விக்னேஸ்வரா" சனசமூக நிலையத்தை ஆரம்பித்து முதியோர்களுக்கான கல்வியையும் முக்கியத்துவப்படுத்தினார். கோயில்களைப் புனரமைப்பதிலும் தமது கவனத்தைச் செலுத்தினார். பள்ளர் சமுகத்துக்கென அடையாளப்படுத்தப் பட்டிருந்த அண்ணமார் கோயில்கள் புனரமைக்கப்பட்டு விதிமுறைப்படி சைவ ஆச்சார, அனுஷ்டானங்களுக்கு ஏற்ப கும்பாபிஷேகமும் செய்யப் பட்டு பிள்ளையார் கோயில்கள் ஆக மாற்றப்பட்டன. கிராமங்களில் வேள்விக் காலங்களில் கோவில்களில் மிருகங்களைப் பலியிடுகின்ற வழக்கத்தைத் தடுத்துநிறுத்தினார். தொடர்ந்து 1940 இல் கரவெட்டி இரத்தினம் ஆசிரியர் அவர்களுடன் இணைந்து வடமராட்சி சமூக சேவா சங்கத்தைத் தோற்றுவித்து, தமது சேவைகளை மேலும் விரிவுபடுத்திக்கொண்டிருந்தார்.

இவ்வாறு சைவசமயப் பண்பாட்டிலும், காந்தியச் சிந்தனையிலும் பயணித்துக்கொண்டிருந்த இவருக்கு, தாழ்த்தப்பட்ட சமூகத்தின் வரலாற்றுத் தேவையை உணர்ந்து அரசியல் வழியில் கால்பதிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அன்றைய காலச் சூழலும், சமூக மாற்றத்தின் அவசியமும், நடைமுறை நிகழ்வுப் போக்குகளும் ஒன்றுகுவிந்து அவரை இடதுசாரி அரசியலின்பால் ஈர்த்துவிடுகிறது. இங்குதான் எதையும் நடைமுறையில் இருந்து நோக்குகின்ற அவரது பார்வை வெளிச்சம் பெறுகின்றது.

வடமராட்சியில் முதன் முதலாக மாக்சிஸ இடதுசாரிக் கருத்துக்களை விதைத்தவர். நடைமுறை வாழ்விலும் அதற்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர், தொழிலாளர், தாழ்த்தப்பட்டவர் என்று ஒடுக்கப்பட்ட மக்களின் நலனில் மிகவும் அக்கறையாக இருந்தவர், யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரசை அடுத்து தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்புப் பெறவும், சாதியத்துக்கெதிராக எழுச்சிபெறவும் காரண கர்த்தாவாக விளங்கியவர், ஆதிக்க சமூகத்தில் இருந்து தோற்றம் பெற்ற ஒரு மகான், சமதர்மவாதி. அவர்தான் தோழர் ஜெயம் என்று அழைக்கப்பட்ட சி.தர்மகுலசிங்கம் அவர்கள். இன்றும் அவரது மறைவு பற்றிய எங்கள் அருந்தலைவர் தோழர் தர்மகுலசிங்கம் மறைந்தாரே" எனும் பாடல் வடமராட்சி தாழ்த்தப்பட்ட சமூகத்தின் உள்ளத்தில் தலைமுறை தலைமுறையாக, அழியாத குருத்துக்களாகத் துளிர்த்துக்கொண்டிருக்கிறது.

தோழர் சி. தர்மகுலசிங்கம் அவர்களது தொடர்பு வலுப்பெற்றதைத் தொடர்ந்து, அவரது கருத்தியல் களம் துணைநிற்க வரமராட்சி சமூகசேவா சங்கத்தின் நான்காவது மகாநாட்டை தாழ்ந்தப்பட்ட மக்கள் எழுச்சி பெறும் வகையில் திரு. கந்த முருகேசு அவர்கள் தமது கிராமமான அல்வாய் வடக்கில் மிகவும் வெற்றிகரமாக நடத்தி முடித்திருந்தார். இம் மாநாடு இவரது பிந்தைய நடவடிக்கைகளுக்குக் கட்டியம் கூறி நின்றதை அன்று எவரும் உணர்ந்திருக்க வில்லை, அல்லது காலம் பிந்தியே உணரத் தலைப்பட்டனர்.

திரு கந்த முருகேசு அவர்கள் 1944இல் கட்டைவேலி கிராமசபைத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் சார்பில் முதன்முதலாக போட்டியிட்டு, முதல் நபராகவும் தெரிவுசெய்யப்பட்டார் . தொடர்ந்து பன்முகப்பட்ட போராட்ட வழிமுறைகளிலும் ஈடுபடத்தொடங்கினார். இச் சமூகத்தின் விடிவை நோக்கிய இவரது தொடர்ச்சியான முன்னெடுப்புக்களுக்கு எழுச்சிமிகுந்த இம்மாநாடும், தோழர் ஜெயம் அவர்களின் உறுதிமிக்க ஆதரவுமே கால்கோளாக அமைந்தது என்றால் மிகையாகாது. 1948 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தோழர் தர்மகுலசிங்கம் அவர்களின் வெற்றிக்காக தமது உதிரத்தையே பிழிந்தார் கந்த முருகேசு அவர்கள், வடமராட்சி வாழ் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் ஆதரவை அவருக்காகவே ஒன்று குவித்திருந்தார். தனது சமூகத்தின் ஆழமான எதிர்ப்பையும் மீறி தாழ்த்தப்பட்ட மக்களின் பால் மிகுந்த அக்கறை கொண்டிருந்ததனால், ஆதிக்க சாதியின் கரம் அவருக்கு எதிராக ஓங்கியிருந்தமை தோழர் ஜெயம் அவர்கள் தோல்வியைத் தழுவிக்கொள்ளக் காரணமாயிற்று.

ஆதிக்க சாதியின் ஆத்திரத்திற்கும், எதிர்ப்புக்கும் மத்தியில் அடுத்தடுத்து இருதடவைகள் கட்டை வேலிக் கிராமசபையின் உறுப்பினராகத் தேர்வுசெய்யப்பட்ட திரு. கந்த முருகேசு அவர்கள் 1952ஆம் ஆணுடுத் தேர்தலில் தோல்வியடைந்துவிடுகிறார். இத் தோல்வியை, இம் மக்களின் பலவீனமாகவும், அவர்களுக்கிடையேயான பெரும் பிளவாகவும் கருதி, அவர்கள் மீதான பெரும் தாக்குதலுக்குத் தயாரானது ஆதிக்க சாதி, அப்போதுதான் திரு. கந்த முருகேசு அவர்களுக்கு பன்முகப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் பற்றிச் சிந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

அவ்வாய் மக்களின் முழு ஆதரவுடன், திரு. கந்த முருகேசு அவர்களின் வழிகாட்டலில் திரு. இராசையா, திரு. மகாலிங்கம், வைத்தியர் சின்னத்துரை, திரு. சூசைப்பிள்ளை ஆகியோர் இரும்பும், நெருப்புமாக முன்னிலையில் நின்று எதிரியைத் தோற்கடித்தனர். இப் போராட்டத்தின் தொடர்ச்சி மாதங்களைத் தாண்டி வருடத்தைக் கடந்தது.

வருடம் தோறும் இடம் பெறும் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவில் திருவிழா, வழக்கம் போல் 1953ஆம் ஆண்டிலும் ஆரம்பமானது. அல்வாய் வடக்கு பள்ளர் சமூகத்திற்குரிய ஒன்பதாவது நாள் திருவிழாத் தினத்தன்று, அச் சமூகத்துப் பெண்கள் வெளிவீதியைச் சுற்றி தீய்ச்சட்டியைத் தூக்கு வதற்கான அனுமதி பலத்த எதிர்ப்புடன் மறுக்கப்பட்டது. இது ஆலயப் பிரவேசப் போராட்டமல்ல. ஆன்மீக அமைதிக்கான ஒரு வேண்டுதல். இதற்குக் கூட தடை விதிக்கப்படுகிறதே என்ற நிலையில் ஆத்திரமுற்ற திரு. கந்த முருகேசு அவர்கள் சாதிய எதிர்ப்புப் போராட்ட முயற்சியில் இன்னொரு வழிக்குச் செல்ல முயற்சிக்கிறார். அவரது போராட்ட வழிமுறை குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டிய முக்கிய விடயமும் இதுவே.

ஆம்! டாக்டர் அம்பேத்கார் அவர்களது வழியில் மதமாற்றத்துக்கான முயற்சியில் அடி பதிக்கிறார் திரு. கந்த முருகேசு அவர்கள். அவர் தேர்ந்தெடுத்த மதமும் கூட கிறிஸ்தவ அல்லது முஸ்லிம் மதமோ அல்ல. ஏற்கனவே எமது நாட்டுக்கும், ஆதித் தமிழர் பண்பாட்டுடனும் பழக்கப்பட்டிருந்த மதம். 27.05.1953 இல் மஞ்சள் நிற காகிதத்தில், **எல்லோரும் வாருங்கள் புத்த மதம் ஒன்றே நமக்குக் கதி** என்று ஒரு பகிரங்க அழைப்பொன்றை விடுத்திருந்தார். ஆண், பெண் என்று பாராது சிலர் தமது உடைகளை மஞ்சள் நிறத்திற்கு மாற்றிக்கொண்டனர். தனது சொந்த வீட்டிற்கு **சித்தார்த்தர் அகம்** என்று பெயரும் சூட்டிக்கொண்டார்.

திரு. கந்த முருகேசு அவர்களின் இம் முயற்சி ஆதிக்க சாதிச் சைவர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியது. இது பேரலையாக மாறி தமிழ் மக்களின் ஒருபகுதியினர் பௌத்தத்தைத் தழுவப்போகிறார்களே என்று அச்சங்கொண்டனர் ஓடி ஒழித்தனர் எனவே இந்த முயற்சியைத் தடுக்கவேண்டுமென அவர்கள் கருதி தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த திருவாசக மணி கே.எம்.பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் யாழ்

நகரசபை மண்டபத்தில் கூட்டம் ஒன்றைக் கூட்டினர். இக் கூட்டத்தின் இறுதியில் சைவ ஹரிஜன சங்கம் என சைவர்களுக்குள் ஒடுக்கப்பட்டோருக் கென பிரத்தியேகமான ஒரு சங்கத்தை நிறுவிக் கொடுத்தார்கள். அதன் தலைவராக கவிஞர் மு.செ. அவர்களும், செயலாளராக திரு. க. மு. அவர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள் என்பது வேடிக்கையும் விசனமும் மிக்க ஒரு சம்பவம் எனலாம் (1993 - கந்த முருகேசு அவர்களின் பவள விழா மலர்)

ஈழத்துச் சாதிய அமைப்பு எண்ணிக்கையளவில் ஆதிக்க சக்திகளை அதிகமாகவும், ஒடுக்கப்படுபவர்களை மிகக் குறைவாகவும் கொண்ட தலைகீழ் பிரமிட் முறையைக்கொண்டது என்பதை உணர்ந்ததனாலோ என்னவோ, வயது 45 தாண்டி 1956ஆம் ஆண்டில் இருந்து இவரது வாழ்வியல் வேறொரு திசைவழியில் செல்ல ஆரம்பித்தது. சைவசமயப் பற்றுறுதி மிக்கவராகி கூடியிருந்து பெறல் கொள்கை வழிக்குத் தன்னை மாற்றிக்கொண்டார். அமரர் சி. தர்மகுலசிங்கம் அவர்களின் இழப்பும், 1950களின் ஆரம்பத்தில் இலங்கை அரசியல் கட்சிகளிடையே ஏற்பட்ட மாற்றங்களும் இதற்குக் காரணமாகலாம். யூ.என்.பி. கட்சியில் இருந்து எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் பிரிந்து ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பித்தமை. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் காங்கிரஸ் கட்சியில் இருந்து எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் பிரிந்து தமிழரசுக் கட்சியை தோற்றுவித்தமை போன்றன குறிப்பான நிகழ்வுகளாகும்.

தென்னிந்தியத் தமிழர்கள் திராவிட இயக்க வழியில் புத்துணர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த காலம், இன, மொழிக் கவர்ச்சியுடன், சுயாட்சிக் கொள்கையினாலும், படித்தவர்க்கு வேலைவாய்ப்பு, உத்தியோகத்தில் தக்கவைத்தல், இடமாற்றப் பிரச்சனைகளில் கவனம் செலுத்துதல், போன்ற செயற்பாடுகளினாலும், உத்தியோகப் பற்றுமிகு மத்தியதர வர்க்கப் பிரிவினரை போதியளவில் கவர்ந்திழுத்துக் கொண்டது தமிழரசுக்கட்சி. ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தமிழ்க் கங்கிரஸ் தாழ்தப்பட்ட மக்களையோ அவர்களது பிரச்சனைகளையோ ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாத நிலையில், தாழ்த்தப்பட்ட மக்களிடையே காணப்பட்ட பணக்காரார்கள், படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், உத்தியோகப் பதவிகளில் இருப்பவர்கள் போன்ற

உயர்நிலைப் பிரிவினரையும் உள்வாங்கும் நோக்கில் இசைவாக்கம் அடைந்திருந்தது தமிழரசுக்கட்சி.

ஏற்கனவே சுயாதீனமான காந்தியச் சிந்தனையால் கவரப்பட்டிருந்த திரு. கந்த முருகேசு அவர்களுக்கு தந்தை செல்வாவின் காந்தீயப் பேச்சு இன மொழி உணர்வு, தாழ்த்தப்பட்ட பகுதியினரையும் உள்வாங்கும் வகையிலான தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடுகள், அவரை அக்கட்சியுடன் இணைத்துக் கொள்வதற்கான தோற்றப்பாட்டைத் தோற்றுவித்திருந்தது. இருந்தும் 1956இல் இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தாழ்த்தப்பட்ட மக்களின் நலனில் மிகவும் அக்கறையாக இருந்தவரும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்டவருமான தோழர் பொன் கந்தையா அவர்களின் வெற்றிக்காக உழைப்பதில் உறுதியாக இருந்தார்.

1956 ஆண்டு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களினால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் திரு. கந்த முருகேசு அவர்கள் மீது பாரிய தாக்கத்தைச் செலுத்துகிறது. தமிழ்த் தேசிய உணர்வுடன் கூடிய மொழிவழிக் கொள்கையின்பால் தம்மைப் பிணைத்துக்கொள்கிறார். தனிச் சிங்களச் சட்ட அமுலாக்கத்தைத் தொடர்ந்து, தமழரசுக் கட்சி இளைஞர் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சிங்களச் 'ஸ்ரீ' அழிப்புப் போராட்டத்துக் கான இவரது ஆதரவின் நிமித்தம், இவரது வளர்ப்பு (சொந்தச் சகோகரர் இளையதம்பி அவர்களின்) மகன் சி. தங்கத்துரை அவர்கள் அப் போராட்டத்தில் ஈடுபட்டு 14 நாட்கள் சிறையிருந்தமையை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்தல் பொருத்தமே.

1957ஆம் வருடம் யூன் 9ஆந் திகதியில் நிகழ்ந்த அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் 14வது மகாநாட்டைத் தலைமையேற்று நடாத்திய திரு. கந்த முருகேசு அவர்கள், மகாசபையின் புதிய நிர்வாகத் தேர்வின்போது உபதலைவராக தெரிவுசெய்யப்பட்ட போதும், அதன் நிர்வாகப் பொறுப்பு இடதுசாரிச் செயற்பாட்டாளர்களிடம் கைமாறியதைத் தொடர்ந்து மகாசபையுடன் இருந்த தொடர்பை மெல்லனத் துண்டித்துக் கொண்டார்.

"இந்நிலையில் அன்றைய (பண்டாரநாயக்காவின் மக்கள் ஐக்கிய முன்னணி) அரசாங்கம்.. சிறுபான்மைத் தமிழர் - மகாசபையின் நீண்டநாள் கோரிக்கையான சாதிய தீண்டாமைக்கு எதிரான சட்டமொன்றைக் கொண்டுவந்து நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை நிலவியது. எனவே அவ்வாறான நிலை வருவதற்கு முன்பாகவே தமிழரசுக் கட்சி தானே சமூகக் குறைபாட்டுச் சட்டத்தை முன்மொழிந்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அன்றைய திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் இராஜவரோதயம் முன்மொழிய கோப்பாய் தொகுதி உறுப்பினரான கு.வன்னியசிங்கம் வழிமொழிந்தார். அரசாங்கத்தின் பூரண ஆதரவுடன் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச்சட்டம் 13.04.57இல் நிறைவேற்றப்பட்டது. இலங்கையின் வரலாற்றில் தமிழர்கள் மத்தியில் பெரும் கொடுமையாக இருந்து வந்த சாதி - தீண்டாமைக்கு எதிரான சட்டம் என்ற வகையில் இச்சட்டம் முக்கியத்துவம் பெற்ற அதே வேளைஅச்சட்டம் மிகவும் மெலிந்த ஒன்றாகவே இருந்தது". (சாதியமும் அதற்கெதிரான போராட்டமும் நூலில் பக். 70 - 71)

மேற்படி நடவடிக்கைகள் திரு. கந்த முருகேசு அவர்கள் திரு. இராஜவரோதயம் அவர்களின் மீதும், தமிழரசுக் கட்சியின் மீதும் மேலும் பற்றுறுதியை வலுப்படுத்திக்கொள்ளக் காரணமாயிற்று. தனிப்பட்ட ரீதியில் திரு. இராஜவரோதயம் அவர்கள் மிகுந்த மதிப்புக்கும் மரியாதைக்குமுரிய நண்பர் ஆனார். அதனாலேயே இவரது பிள்ளைகளுக்கு கந்தவரோதயன், இராஜவரோதயன், இந்திரோதயன் என்று பெயர்களையும் சூட்டிக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, தேவரையாளிச் சமூக நண்பர்கள் (கவிஞர் மு. செல்லையா, சைவப்புலவர் சி. வல்லிபுரம், ஆ.ம. செல்லத்துரை, கந்த முருகேசு ஆகியோர் இணைந்து சட்டத்திற்குட்பட்ட வகையில் சாத்வீகப் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினர். "அகில இலங்கை சைவசமய சமரச சங்கம்" ஒன்றை உருவாக்கி, அன்று உயர்பதவியில் இருந்த பலரை அணுகினர். ஏற்கனவே மகா சபையினர் விடுத்திருந்த வலுவான வேண்டுகோளைத் தொடர்ந்து, ஆலயப் பிரவேச முயற்சிகளுக்கு உதவுதல் என்ற நோக்கில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஸ்ரீ காந்தா, முன்னாள் இலங்கையின் இந்தியத் தூதுவர் ஸி. குமாரசாமி, அன்றைய உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஸ்ரீஸ்கந்தராசா, சிவபாத சுந்தரம் ஆகியோர் இணைந்து "அலயப் பிரவேச உரிமை வழங்கும் சபை" ஒன்றை அமைத்திருந்தனர். இவர்களுடன், சைவசமய சமரச சங்கமும்

இணைந்து, நல்லூர் கந்தசாமி கோவில், வண்ணை பெருமாள் கோயில், வண்ணை சிவன் கோயில் ஆகிய யாழ்நகரத்தின் பிரதான வழிபாட்டு ஸ்தலங்களில், 09.07.1957 அன்று மேற்கொண்ட ஆலயப் பிரவேச முயற்சிகள் வெற்றியளித்தன.

பௌத்தத்தில் சேரும் முயற்சியைக் கைவிட்டு, சைவப் பற்றாளனாக விளங்கியபோதும், திரு. கந்தமுருகேசு அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவை நோக்கி டாக்டர் அமபேத்கார் அவர்கள் முன்வைத்த முக்கிய மூன்று குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதில் குறியாக இருந்தார். தனித்துவமான முறையில் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்தும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் மூலமாகவும் இப் பணிகளை நிறைவேற்றுவதற்காக தன்னை அர்ப்பணித்தார்.

1961இல் தந்தை செல்வநாயகம் அவர்களின் தலைமையில் தமிழரசுக் கட்சி மேற்கொண்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இவரது சகோதரர்கள், சகோதரங்களின் பிள்ளைகள் என்று எல்லோரும் பங்கு பற்றி குடும்பம் முழுவதுமே எழுச்சி பெற்றுக்கொண்டது. குறிப்பாக இவரது மூன்றாவது சகோதரி காசிநாதர் மணிமேகலை தமது முப்பதாவது வயதில், மூன்று சிறார்களுக்குத் தாயாரான நிலையில் தினந்தோறும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்குபற்றியதை நளினமாகவும், பெருமையாகவும் அல்வாய் வடக்கு மண் இன்றும் நினைவு கூர்ந்து கொண்டே இருக்கிறது. இவர் 1990களின் ஆரம்பத்தில் தமிழ் நாட்டுப் காவல் துறையினரால் தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களின் பின்னணியில் பலத்த விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்.

சுமார் அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பே, இத்தகைய ஒருபோராட்டத்தில் (தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருந்து) பங்கு பற்றிய பெண்மணி திருமதி கா.மணிமேகலை அவர்களும், சிங்களச் "ஸ்ரீ" அழிப்புப் போராட்டத்தில் பங்குபற்றி 14 நாட்கள் சிறை வைக்கப்பட்ட சி. தங்கத்துரை அவர்களும், அவர்களது போராட்ட உணர்வுகளும் அன்றோ, அல்லது பிந்தியோ அக் கட்சியினரால் எந்தவிதத்திலும் மேன்மைப் படுத்தப்பட்ட தாகத் தெரியவில்லை. இவ் விடயத்தை தமிழரசுக் கட்சியின் அன்றைய சாதியக் கட்டுமானத்தில் இருந்தே நோக்க வேண்டும்.

1960 களின் மத்தியில் சமூக அக்கறையும், சாதிய எதிர்ப்புணர்வும் மிக்க, ஆன்மீகப் பணியாளர் குன்றக்குடி அடிகளார் அவர்களை வரவேற்று, அவர் மூலம் சாதிய எதிர்ப்புணர்வை பரப்புரை செய்வதில் மிகவும் அக்கறையாக இருந்தவர் திரு. கந்த முருகேசு அவர்கள். ஆனால் 1966 – 70களில் நிகழ்ந்த தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தின் போது, (இவரது அரசியல் பின்னணி காரணமாக) இவர் மௌனமாக இருந்தமையை கவலையுடன் நோக்க வேண்டியிருந்தது. பின்பு 1981ல் நிகழ்ந்த மாகாண அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது, **சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி** சார்பில், சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் முன்னாள் செயலாளர் அன்ரனி மாஸ்ரர் அவர்களும், அவரது நண்பர்களும் இவரைச் சந்திக்கச் சென்றபோதுதான், அறுபதுகளில் நிகழ்ந்த போராட்டங்களை, இவர் மௌனமாக அங்கீகரித்திருந்தார் என்ற உண்மை புலப்பட்டிருந்தது.

இருந்தும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பிந்திய காலத் தலைவர் தொண்டமானாறு க.கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்கள் ஆதங்கப்படுவது போன்று, (ஆண்டு அறுபதுகளுக்குப் பிந்திய இவரது மிதவாதப் போக்கு காரணமாகவோ தெரியவில்லை) "இவரது நீண்டகால வாழ்வில் சாதிய எதிர்ப்பு ரீதியில் இவர் சாதிக்கவேண்டிய இன்னும் பல விடயங்களைச் சாதிக்காமல் விட்டுவிட்டார்" என்ற ஆய்வுக்குரிய கருத்தையும் அசட்டை செய்துவிட முடியாது.

1968 – 70 களில் வடபகுதித் தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதிகளில் பௌத்த பாடசாலைகள் அமைக்கப்பட்டு வந்ததை தீவிரத்துடன் எதிர்த்தவர் திரு. கந்த முருகேசு அவர்கள். இதனால், ஓய்வூதியத்துக்குப் பிந்திய இவரது பதவி நீடிப்பு அரச உத்தரவுப்படி நிற்பாட்டப்பட்டது. "ஆரம்ப காலங்களில் பௌத்தத்தில் சேரும்படி அழைப்புவிட்ட இவர், இப்போ பௌத்த பாடசாலை அமைப்பதற்கே எதிராக நிற்கிறார்" என்று அப்போது எள்ளிநகையாடப் பட்டார். இவ் வாதம் தர்க்கத்துக்குச் சரியானதுதான். ஆனால் ஒன்றுக்கொன்று முரண்பட்ட இவ் இரட்டைப் போக்கை யதார்த்த நிலைமைகளுடன், அவரது உணர்வு நிலையில் இருந்து ஒப்பிடுவதே சிறப்பு.

இங்கு டாக்டர் அப்பேத்கார் அவர்கள் தான் நினைவுக்கு வருகிறார். "புத்தமத மாற்றத்தின் மூலம் அவர் (அமபேத்கார்) நோக்கமாகக் கொண்டது

தாழ்த்தப்பட்டவர்களை ஆன்மீகப் படுத்துவதல்ல, மாறாக அரசியல் படுத்துவதே." (டாக்டர் அம்பேதகாரின் போர்க்குரலில்......... அ. மார்க்ஸ்) ஆம்........ 1953 இல் பௌத்தத்தில் சேர்வதை இந்துமத சாதிய கட்டுமானத்தின் மீது தொடுக்கப்பட்ட சாதிய எதிர்ப்புப் போராட்டமாகவே கருதினார் திரு. கந்த முருகேசு அவர்கள். ஆனால் பிந்திய காலத்து பௌத்த மதமாற்றத்தை, அரசின் அரசியல் சூழ்ச்சியுடன் சம்பந்தப்படுத்தினார், தமிழ்த் தேசிய உணர்வுக்கு எதிரானது, தமிழர் பிரதேசம் என்ற நிலைப்பாடடை சிதறடிப்பது, தனிச் சிங்கள உணர்வை வலுப்படுத்துவது, தமிழ்மொழி உணர்வுக்கு எதிரானது, போன்ற தமிழ் தேசிய உணர்வு நிலைகளில் நின்று நோக்கினார். ஏற்கனவே சி.தங்கத்துரை அவர்களின் சிங்கள "ஸ்ரீ" அழிப்புப் போராட்டமும், தங்கை கா.மணிமேகலை அவர்களின் சத்தியாக்கிரகப் போராட்டமும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பின்னணியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, 1985ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து 87 மே வரையிலான இவரது மகன் திரு. முருகேசு கந்தவரோதயன் அவர்களின் இருபத்திநான்கு மாதங்களுக்கு மேற்பட்ட வெலிக்கடைச் சிறைவாசமும் திரு. கந்த முருகேசு அவர்களின் குடும்பரீதியான தமிழ்த் தேசிய உணர்வைப் புலப்படுத்தும் சில நிகழ்வுகளாகும். இத்தகைய உணர்வு நிலைகளே அவரது பிந்தைய காலத்து பௌத்தமத மாற்றத்தின் மீதான எதிர்ப்புணர்வுக்குரிய காரணங்கள் என்பதை அப்போது பலர் புரிந்திருக்கவில்லை.

கலை முயற்சிகளிலும் இவர் சளைத்தவர் அல்ல. குறிப்பாக சிறுவர்களை, அன்றைய சூழலுக்கேற்ப சமூகத்தை, வழிப்படுத்தும் நாடக எழுத்திலும், இயக்கத்திலும் இவர் அதிகமாக ஈடுபட்டார். இவரது நாடகத் துறையின் வெளிப்பாட்டுச் சின்னமாக, குறியீடாக உயர்ந்து நிற்பவர் நடிகமணி டாக்டர் வி. வி. வைரமுத்து அவர்கள். இவரை வளர்த்தவரும், உருவாக்கியவரும் இவரே.

இன்று ஈழத் தமிழரிடையே முதன் முதலாக சினிமாத்துறை சார்ந்த கற்கைநெறிகளை அறிமுகப்படுத்தி, வெளிநாட்டு வல்லுனர் பலரின் தொடர்புகளுடன், அதற்கான பயிலருங்குகளையும் (ஙூழசமளுழி) வழிப்படுத்தி வருபவர் காசிநாதர் ஞானதாஸ் அவர்கள். திரு.கா.யோகராஜா அவர்கள் சுவிற்சலாந்து தமிழ் நாடகக் கல்லூரியின் முதன்மை எழுத்தாளராகத்

திகழ்கிறார். இவர்களது இச்செயற்பாடுகள் இவரது குடும்பம் சார்ந்த கலை முயற்சிகளுக்கு சில எடுத்துக் காட்டுகள். இவர்கள் இருவருமே திரு. கந்த முருகேசு ஆசிரியர் அவர்களின் சகோதரி கா.மணிமேகலை அவர்களின் புதல்வர்கள் ஆவர்.

திரு. கந்த முருகேசு அவர்களது வாழ்வியல் நிகழ்வுகள், நிலைப்பாடுகளில் இருந்து, இவர் சமூக வாழ்வியலை அல்லது சமூக எழுச்சி மீதான தனது செயற்பாடுகளை, தத்துவம் சார்ந்த வரையறைகளுக்குள் அடக்கிக் கொள்ளாமல் நடைமுறை (Practical) யூடாகப் பார்த்தவர் என்ற உண்மைகளை காலைச்சூரியனின் குளிர்ச்சியுடன் உணர்ந்துகொள்ள முடிகின்றதல்லவா?

இவர் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுடன் நட்புரீதியான உறவை வலுப்படுத்திக் கொள்ள முயற்சித்தபோது (யாழ் குடாவைத் தவிர்ந்த) சாதியக் கட்டுமானமும், சாதிய பண்பாட்டு இறுக்கமும் மிகத்தளர்ந்து காணப்பட்ட திருகோணமலைத் தொகுதி நாடாளுமன்ற உறப்பினர் இராஜவரோதயம் அவர்களையே இவரால் நெருக்கமுடன் அணுகிக்கொள்ள முடிந்தது என்றால்...?

சிறு வயதில் இருந்து ஒடுக்குமுறைகளின் நேரடித் தாக்குதல்களை அனுபவித்த இவரது ஆழ்மனதில் படிந்துவிட்டிருந்த சாதிய எதிர்ப்புணர்வு தான் அவரை அதிகமாக ஆளுமை செய்திருந்தது. அவர் அதிக அளவில் வெளிப்படையாக எழுச்சிபெற்றதும் அதற்கெதிராகத்தான்.

திரு. கந்த முருகேசு அவர்களின் உணர்வலைகள் உண்மையானவை, உயர்ந்தவை. இனம், மதம், மொழி, தேசம் என்றும் அதைக் கடந்தும் விரிந்தவை, பரந்தவை இன்று, இவரது வாழ்வு ஒரு நூற்றாண்டின் வாயிலை எட்டியபோதும், இவரது இருத்தலின் உண்மையை, உணர்வை, உயர்வை துர்அதிஷ்டம் மட்டுமல்ல, இன்னும் தொடரப்பட வேண்டிய சமூக எழுச்சியின் அடுத்த பல அத்தியாயங்களையும் கோடிகாட்டி நிற்கிறது.

வடமராட்சி வாழ் தாழ்ததப்பபட்ட மக்களின் சமூக எழுச்சியின் முதல் அத்தியாயம், கல்வி சார்ந்து ஆரம்பித்து, திரு.கந்த முருகேசு அவர்களுடன்

பின்னிப் பிணைந்து, இச் சமூகத்தின் விடிவை, விடுதலையை நோக்கி பல்வேறு போராட்டத் தளங்களில் பயணித்து, கல்லின்மேல் எழுத்தாகப் பதிந்துவிட்ட நிலையில், இவரது (திரு. கந்த முருகேசு அவர்களின்) மறைவுடன் அவ்வெழுச்சியின் முதலாவது அத்தியாயம் முற்றுப் பெறுகிறது. அவரோ இச் சமூகத்தின் வரலாற்றுவடிவமாக, குறியீடாக, ஓர் அடையாளச் சின்னமாக எழுந்து நிற்கிறார். அவரது ஆத்மாவின் அகக்கண்களாக அவர் தோற்றுவித்த, புனரமைத்த பாடசாலைகளும், கோவில்களும் காட்சியளிக்கின்றன. ஆனால் தொடரப்படவேண்டிய சமூக எழுச்சியின் சின்னமாக இன்னும் புதுப்பொலிவு டன் விழித்திருக்கிறது சித்தார்த்தர் அகம்.

# 21

# நெஞ்சுறுதியும் தெளிந்த சிந்தனையும் பற்றுறுதியும் கொண்டு ஒரு நூற்றாண்டு வரை வாழ்ந்து எமக்கு வழி காட்டிய நல் ஆசிரியர்

சி.கணேசமூர்த்தி JP
(ஓய்வு பெற்ற அதிபர்)

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்லல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல்" என்றும் குறள் வழி நின்று வாழ்வாங்கு வாழ்ந்து வையகத்தில் உயர்ந்த புகழ் அல்லாமல் ஒப்பற்ற பொருளாக அழியாமல் நிற்கவல்லது வேறொன்றும் இல்லை என நிலையான புகழுடன் அமரர் கந்தப்பு முருகேசு உயத்தியாயர் இம்மண்ணில் வாழ்ந்து மறைந்தார்.

அமரர் அவர்கள் சமயம், கல்வி , சமூக பொருளாதார ஆகிய துறைகளில் தன் முத்திரையைப் பதித்து சமூகத்தின் விடியலுக்காக உழைத்த உத்தமர் ஆவார்.

சைவ சமயத்தினை தன் வாழ்நாள் முழுவதும் கைக் கொண்டு ஆன்மீகவாதியாகி ஆலய கட்டுமாணப் பணிகளிலும் திருஉருவ அலங்காரப் பணிகளிலும் தொண்டுகள் பல புரிந்து மக்கள் எல்லாரது மதிப்புக்கும் ஆளானார்.

எமது சமூகம் கல்வியிலே பின்தள்ளப்பட்டு உள்ளமையே சமூக ஒடுக்கு முறைக்குக் காரணம் என்பதை உணர்ந்து தனது உடை, நடை, பாவனைகளை சீர்படுத்திச் சமூக முற்போக்கு வாதியாகி சகல மக்களாலும் மதிக்கப்பட்டார்.

வகுப்பறைக் கற்பித்தல் அமரருக்குக் கைவந்தகலை கரும்பலகை யில் அழகாக எழுதிக் கைநூல் இன்றிக்கற்பிக்கும் ஆற்றல் மிக்கவர்.

கிராமங்கள் தோறும் கல்வியில் ஊக்கம் காட்டிய மாணவர்களது வளர்ச்சிக்கு பக்க பலமாக நின்று வேண்டிய உதவிகள் செய்து முன்னேற்றிய பெருந்தகை என்று கூறினால் அது மிகையாகாது அமரர் அவர்கள் சமூக ஒடுக்கு முறைக்குப் பல போராட்டங்களில் தன்னை இணைத்துச் செயல் பட்டார் கிராம சபைத் தேர்தலில் போட்டியிட்டு சாதி ஒடுக்கு முறைக்கு வித்திட்ட முதல் மனிதர் அமரர் அவர்கள் காந்திவாதியாகித் தூய வெண்ணிற கதர் ஆடை தரித்து என்றும் தூய்மையாகத் தோற்றமளித்தார் இதனால் காந்திய சேவா சங்கம் ஒன்றை அமைத்துப் பின்னர் சமூக சேவா சங்கம் என மாற்றச் சமூக சேவையில் ஈடுபட்டுத் தனது பணியைத் தன் கிராமத்துடன் நின்று விடாமல் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களுக்கு விஸ்தரிக்கலானார்.

இதனால் அமரர் அவர்களின் சமூகப் பணிக்குப் பல கிராமங்களிலும் சிலர் உதவியாக நின்று அகிம்சை வழியில் தேனீர்க்கடைப் பிரவேசம் ஆலயப் பிரவேசம் முதலிய செயற்பாட்டில் ஈடுபட்டு பல வெற்றிகள் கண்ட செயல் வீரன்.

அமரர் அவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சிக்காக எங்கு பாடசாலை தேவையோ, அங்கு சென்று மக்களைத் திரட்டிப் பாடசாலைகளை நிறுவிய சிந்தனையாளர் கல்வியோடு நின்று விடாமல் விவசாயச் செய்கையிலும் மக்களை இணைக்கப்பாடுபட்டவர் விவசாய நிலம் அற்ற மக்களுக்குச் குடியேற்றங்கள் மூலம் வன்னிப் பெரும் நிலப்பரப்பில் காணிகளைப் பெற்றுக் கொடுத்துத் தன்னலம் கருதாது செயற்பட்ட உண்மைத் தோழன் என்பர்.

அமரர் அவர்கள் சமூக, சமய விடுதலைக்காக சகல துறைகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வந்தமையினால் அவரது புகழ் என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இதற்கு அன்னாரது அரசியல் பின்னணிதான் காரணம் என்று கூறினால் சாலப் பொருந்தும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடியலுக்கு இடதுசாரிக் கட்சிகளின் அரவணைப்பு பெரும் இடைஞ்சலாகும் என உணர்ந்து தமிழரசுக் கட்சியில் அமரர் வன்னியசிங்கம் அவர்களுடன் இணைந்து முழுமூச்சாகச் செயற்பட்ட முறையில் அமரர் அவர்களின் வெற்றியும் செல்வாக்கும் வளர்ந்தது எனலாம்

அமரர் அவர்களின் சகல செயற்பாடுகனிலும் நானும் அவரோடு இணைந்து சமபந்தி போசனத்திலும் ஆலயப் பிரவேச நிகழ்விலும் தேனீர்க்கடைப் பிரவேச நிகழ்விலும் ஈடுபட்டேன்.

அப்போதெல்லாம் அமரர் காணப்போகும் பெரியவர்கள் எல்லோரும் மதிப்பும் மரியாதையும் செய்து அவரோடு அளவளாகும் பாங்கை எண்ணி நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன் என்று கூறுவதில் வியப்பேதுமில்லை.

அமரர் கந்தப்பு முருகேசு ஒரு சிறந்த கல்வி ஆளன் ஆசிரியர் களுக்கு எல்லாம் வழிகாட்டிய கடமை உணர்வுடன் கூடிய ஒரு நல் ஆசிரியர்

அமரர் அவர்களின் செயற்பாட்டுத் தேவை அவர் வாழ்ந்த ஒரு நூற்றாண்டு காலப்பகுதியில் அதிகம் தேவைப்பட்டன. அதன் பயனாக சகல துறைகளிலும் தன்னை ஈடுபடுத்திச் செயற்படும் முன்னோடி எனலாம்.

சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டு மகிழ்ச்சியுடன் வாழும் சமுதாயத்தில் இனறு இருக்கிறோம்.

அமரர் அவர்களின் ஈடு இணையற்ற சேவைதான் நாம் இனறு காணும் எமது சமுதாய வளர்ச்சி பல சிரமத்தின் மத்தியில் அமரர் அவர்கள் செயற்பட்டார் என்பதை நினைக்கும் போது வேதனையிலும் நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடியதாக உள்ளது.

தற்போதுள்ள சந்ததியினருக்கு இவை தெரியாமல் இருக்கக் கூடும் அதனால் விடுதலை கிடைத்துவிட்டது என்று சிந்திப்பதை விடுத்து இன்னும் இரகசியமான முறையில் ஒடுக்கு முறை இருக்கிறது என்பதை உணர்ந்து சகலரும் இணைந்து அமரரின் வழியில் செயற்படுவோமாக.

# 22

## பெரியார் முருகேசு

கவிஞர்
வி.கந்தவனம்
கனடா.

பெரியார் முருகேசு
அரியார் ஆகிவிட்டார்!
இனியார் இவர்போல
என்ற இரங்கலுக்கும் வித்திட்டார்!

மாசுமறு வில்லாத உள்ளம்!
பேசுகையில் பெருகும்
அன்பு வெள்ளம்!

முகத்தில் வீசுவது அறிவொளி -
இருட்டில் இருப்பவருக்கு
அது
நிதம் காட்டுவது அறவிழி!

இலக்கியங்களிலே பெரிய பண்டிதர்!
எப்பொருளிலும்
எப்பொழுதும் மெய்ப்பொருளையே
கண்டவர்!

அடக்கம் கூற்றையும் அடக்கும்!
ஒழுக்கம் இமயத்தையும் ஒடுக்கும்!

இனநலம் இரத்தத்தில் ஊறியது!
வினைநலம் வேண்டுவார்க்கு
உதவுவது!

ஐயனே!
எளிமையான வாழ்க்கையை
முழுமையாக வாழ்ந்தனை!
அதுவே எமக்கு ஒரு பாடம்!
அமைதிதரும் ஆனந்தக் கூடம்!

உன்னை உலகம் மறவாது!
உன்னுயர் பெருமை மறையாது!

# 23

## எங்கிருந்தோ வந்தான்.........!

திரு.அ.க.த.கிருஷ்ணராசா J.P
தலைவர், நீர்வேலி பல.நோ.கூ.சங்கம்.

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

"நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு"
இது வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு

அமரர் திரு.முருகேசு ஆசிரியர் அவர்கள் நீதியையும் நேர்மையையும் பண்பையும் பெரிதும் போற்றிப் பிறர்க்கும் பயன்பட வாழ்ந்த பெரியார் வள்ளுவர் வாக்குகளுக்கு இசைய வாழ்ந்த நல்ல மனிதர்.

இன, மத, மொழி, நாடு என்பதில் ஈடு இணையற்ற பற்றுக்கொண்டவர். இப்பற்றுக்களை மனதார பயபக்தியுடன் தழுவிய போதிலும் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற கோட்பாட்டோடு வாழ்ந்த காரணத்தால் சகல மக்களிடத்திலும் நன்மதிப்பையும் கௌரவத்தையும் ஈட்டிக் கொண்டார்.

ஆவரங்கால் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம் உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர். அதன் முதல் அதிபரும் இவரே. பல்வேறு இடர்பாடுகளையும் எதிர்கொண்டு அதன் வளர்ச்சிக்கு உழைத்தவர். இக்கல்விக்கூடத்தை அமைப்பதற்காக அப்பகுதியில் இடம்பெற்ற தொடர்ச்சியான எழுச்சிக்கூட்டங்களில் நானும் எனது நண்பர்களான தமிழரசு சின்னத்துரை, திரு.நா.கணபதிப்பிள்ளை, திரு.சி.கிருஷ்ணபிள்ளை போன்றோரும் கலந்து கொண்டதோடு உரையாற்றிய நிகழ்வுகள் இன்னமும்

பசுமையாக மனக்கண்முன் நிழலாடுகின்றன. ஐம்பதுகளின் இறுதிக்காலங்களில் இடம்பெற்ற இந்நிகழ்வே எனக்கும் அமரருக்குமிடையில் நெருக்கமான நட்புக்கு வித்திட்ட தெனலாம். இதன் பின்னர் சமூக, அரசியல்துறைகளில் ஒருமித்த கருத்தும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளும் எங்களின் தொடர்பை கடடிக்காத்து நின்றதெனலாம்.

நண்பனாய், மந்திரியாய் நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான்"

என்று கண்ணபெருமானைப் பற்றி பாட்டுக்கொரு புலவன் பாரதிபாடிய அடிகளை எப்பொழுதும் நினைவுகூரவைக்கும் வகையில் ஆழமாகவும், அகலமாகவும் தாம் கொண்டிருந்த பாரியசேவைப்பரப்பில் மனிதநேயம் படைத்த நல்ல மனிதராக வாழ்ந்து மற்றவர்களுக்கும் வழிகாட்டியவர். அமரர் துன்னாலையில் பிறந்து அல்வாயில் புகுந்து வாழ்ந்து தம் நீண்ட இறுதிக்காலத்தை ஆவரங்காலில் செலவழித்து அமரரானார். இராமன் இருக்குமிடம் அயோத்தி என்றாங்கு ஆசிரியர் முருகேசு எங்கெல்லாம் கால்பதித்தாரோ அவ்விடங்களெல்லாம் காந்தியநெறிநின்ற போராட்டகளமாகவே பர்ணமித்தன. இப்போராட்டங்கள் அத்தனையும் தமிழர் பாரம்பரியத்தையும் வாழ்க்கை நெறியையும் பண்பாடு கலாச்சாரங்களையும் மீளப்புத்துயிரளித்து விழித்தெழச் செய்து பல்வேறு பிரிவினைகளால் சிதறுண்டு கிடந்த தமிழ் மக்களை ஒன்றுதிரட்டும் பணியின் முக்கிய கட்டங்களாகவே நோக்க வேண்டியுள்ளது. இப்பாரிய சீர்திருத்தப் பணியில் நூற்றுக்கணக்கானோர் ஈடுபட்டிருந்தபோதிலும் இலட்சியப் போக்கிலிருந்து பிறளாமல் சைவத் - தமிழ்நெறி காத்து இறுதிவரை வாழ்ந்த நால்வரை குறிப்பிடுவது அவசியமாகும். சமகாலத்தவராக வாழ்ந்து ஒரே இலட்சியத்திற்காக ஒன்றிணைந்து விளங்கிய சமூக முன்னோடிகளான கவிஞர் மு.செல்லையா, சைவப்புலவர் சி.வல்லிபுரம், ஆசிரியர் ஆ.ம.செல்லத்துரை ஆசிரியர் க.முருகேசு ஆகியோர் ஏனைய மற்றைய பெரியவர்களிலிருந்து பெரிதும் வேறுபட்ட சிந்தனையையும் வாழ்க்கை நெறிகளையும் கொண்டிலங்கினார்கள் என்பது நோக்கற்பாலது. இந்த இடத்திலேதான் நல்நால்வரதும் தனித்துவ ஆளுமை மேலோங்கி நிற்பதை அவதானிக்கலாம். மிகவும் பின்தங்கிய ஒரு சமூகம், அடக்கி ஆதிக்கம் செலுத்திய நிலப்பிரபுத்துவம் கொண்ட மேட்டுக்குடியினரது மனங்களை மாற்றமடையச் செய்வதற்கு

சமயப்பாரம்பரியம், காந்தியநெறி பன்முகப்பரிமாணங்களைக் கொண்ட நெறிபிறழாத கல்வி என்பனவற்றாலே தம்மைச் செம்மைப்படுத்தி சமூக மறுமலர்ச்சி காண்பதற்கு கால்கோள் இட்டவர்கள் வரிசையில் இந்நால்வரும் சிறப்புடையவர்களாக விளங்கினர். ஆரம்பக்கல்வியைக்கூட சுயாதீனமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இல்லாத சூழ்நிலைத் தாக்கங்களுக் கெல்லாம் முகங்கொடுத்து உயர் கல்வியைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட அவமானங்களையும் இடர்பாடுகளையும் முறியடித்து ஆசிரியர்களாக அரியணை அமர்ந்த இவர்கள் வளர்ச்சிப்படிகள் அத்தனையும் கரடு முரடானது மாத்திரமல்ல காட்டுமிராண்டித்தனத்தையும் காவுகொண்டதாக அமைந்தது என்றே சொல்லவேண்டும். சைவத்தமிழ்க் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் தடை, ஆசிரிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ள அனுமதி கிடைக்காமை, இந்துக் கோயில்களின் கதவடைப்பு, பொது நிறுவனங்களில் புறந்தள்ளல் என்பன போன்ற மேல்மட்டத்தாரின் கெடுபிடிகள் மேலோங்கி நின்ற காலமது. இத்தகைய கெடுபிடிகளுக்கு மாற்றுமருந்தாக கிறிஸ்தவ கலாசாலையில் உயர்கல்வி சொந்த இந்துக்கோயில்கள், பாடசாலைகள் பொது நிறுவனங்கள் நிறுவுதல், அம்பேத்கார் வழியில் புத்தசமயத்தைத் தழுவுவதாக அறிவிப்பு என பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி கடும் போக்காளர் மனங்களில் மாற்றம் ஏற்பட எடுத்த இவர்கள் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் இளையோடி நின்ற புனிதப் பாரம்பரியப்பண்பு ஒன்றை நாம் இனங்காணும் போது இவர்களின் தலைமைத்துவப்பண்பு பீறிட்டெழுந்து நிற்பதைப் பார்க்கலாம். சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தைப் பேணவும் அதன் மூலம் சமூக மேம்பாட்டை அடைவதுமே இவர்கள் குறிக்கோள். ஆனால் கிறிஸ்தவ கலாசாலையில் கல்வி, கிறிஸ்தவர்கள் வழிகாட்டலில் – தூண்டுதலில் பல்வேறு அமைப்புக்களைத் தோற்றுவித்து கத்தியின்றி இரத்தமின்றி நடைபெற்ற யுத்தங்கள் என்பன எதுவும் இவர்களின் இலட்சியத்தை எந்தவகையிலும் சிதைக்காமல் இருந்திருக்கிறதை வியந்து பாராட்டாமல் இருக்ககூடியாது. இக்காலகட்டங்களில் ஆசிரியத் தொழிலைப் பெற்றுக்கொள்வதற்காகவே "சம்பளம்' எனும் பஞ்சாட்சரக் கிறிஸ்தவர்கள் மேல்மட்டத்திலிருந்தும் தோற்றம் பெற்ற வரலாறு உண்டு. இதே நேரத்தில் சைவத்தமிழ்க் கல்வி கலாச்சாரப் பாரம்பரியங்களை மேற்கொள்ளமுடியாத பலதடைகள் குறுக்கீடுகள் ஒருபுறமும், மறுசமயங்களின் அரவணைப்பு மறுபுறமும் என இருதலைக் கொள்ளி எறும்பாக இருந்த நிலைமையில்கூட பாரம்பரிய

சைவத்தமிழ் கலாசாரங்களை கட்டி வளர்ப்பதில் இந்நால்வரும் திடகாத்தி ரத்தோடு இறுதிவரை இருந்திருக்கிறார்கள் என்பது மனங்கொள்ள வேண்டிய ஒன்றாகும். இத்தகைய இலட்சியத்தில் வைராக்கியங்கொண்ட தலைவர்கள் சமூக முன்னோடிகளாகவும் சமூகத்தலைவர்களாகவும் இருப்பது வியப்பல்ல. இயல், இசை, நாடகத்துறைகளில் தலைசிறந்து விளங்கிய ஆசிரியர் முருகேசு அவர்கள் இத்துறைகளின் ஊடாக பலதரப்பட்ட மக்களின் மனதிலும் குடிகொண்ட ஒருவராகத் திகழ்ந்தார் என்பது இவரது தனிச்சிறப்பு எனலாம்.

இத்தகைய ஒருவர் இளமைக்காலம் முதல் சமூக மேம்பாட்டுப் பணிகளில் தம்மை முற்றாக ஈடுபடுத்தி அடிமட்டத் தொண்டனாக வழிகாட்டியாக முன்னோடியாக வளர்ந்து தலைமை நிலைக்கு உயர்ந்த ஒருவர் பல்வேறு அமைப்புக்களில் பல்வேறு பொறுப்பான பதவிகளை வகித்து சிறப்பான சேவைகள் மூலம் சமூகத் தலைவர்களில் சிறப்பானவராக இனங்காணப்பட்டவர். இத்தகைய ஒருவர் ஆரம்பத்தில் தம் இயக்கங்களுக்கு வலுச்சேர்த்தவர்கள் என்ற வகையில் இடதுசாரி அணியைத் தழுவிநின்றமை ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல. ஆனால் தமிழ்த் தேசியத்தில் இறுக்கமான பற்றுடைய அமரர் ஆசிரியர் முருகேசு அவர்கள் இலங்கைத் தமிழரசுக்கட்சியில் இணைந்து பல்வேறு பொறுப்புக்களில் இருந்து அரசியல் தொண்டின்மூலம் தந்தை செல்வா கோப்பாய் கோமான் வன்னியசிங்கம் போன்ற பெருந்தலைவர்களின் ஆசியையும் அன்பையும் மதிப்பையும் பெற்றவர். இதனால் அரசியல் பதவிகள் பல அவர் சார்ந்த சமூகத்திற்கு கிடைக்க வழிசமைத்தவர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்தார்.

நாட்டுப்பற்று, சமயப்பற்று, சமூகப் பற்று என்பனவெல்லாம் அவரது நிலைப்பாடில் குறுகிய வட்டத்திற்குள் சுயநலம் கலந்ததாக இருந்ததில்லை. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற பரந்த சிந்தனைவாதியாக வாழ்ந்தவர். இதனால் படிமுறையாக வந்த அரசியல் நடவடிக்கைகள் ஆசிரியர் முருகேசு அவர்களின் இறுதிக்காலங்களில் "ஈழத்தமிழ் தேசியம்" கொண்டதாகவே மலர்ந்திருந்தது. இத்தகைய போக்குத்தான் - அரசியல் நகர்த்தலின் படிமுறை நிலைப்பாடாகக் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த நாட்டின் நல்ல குடிமகனாக வாழ்ந்தவர். சமுதாயத்தின் நல்லணியாகத் திகழ்ந்தவர். பிறந்த மண்ணுக்கும் வாழ்ந்து மடிந்த மண்ணுக்கும் பெருமை சேர்க்கும் வண்ணம் வாழ்ந்தவர். தெய்வப்பற்றையும் தேசப்பற்றையும் இருகண்ணென மதித்து வாழ்ந்தவர். கடமை உணர்வு நிரம்பியவர். கலையில் ஆர்வம் மிகுந்த பெருங்கலைஞர் மாபெரும் இரசிகர். இலக்கிய ஆர்வலர்.

தொண்ணூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்த ஆசிரியர் முருகேசு அவர்கள் மூன்று தலைமுறைகளின் இணைப்புப் பாலமாக இருந்திருக்கிறார். அவர் மூலம் அறியவேண்டிய வரலாற்று நிகழ்வுகள் பல. தன்னடக்கம் காரணமாக அவர் தனது பாத்திரம் பெறக்கூடிய வரலாற்றை தவிர்த்திருந்தாலும் தம் காலத்து நினைவுக்குறிப்புக்களையேனும் தராமல் போய்விட்டார்கள். இந்தவகையில் நம்நாட்டு எழுத்தாளர்களும் ஊடகவியலாளர்களும் தம் பங்குபணியாக ஆவணத்தொகுப்புகளுக்கு நிறையவே செய்யவேண்டியுள்ளது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது தமிழ்மறை.

ஆத்ம நாண்பர்களான அரசியல் பெருந்தலைவர்கள், தன்வழி தோழமையுடன் செயற்பட்ட பெரியவர்கள் என்று பல்வரிசை சார்ந்த இம்மண்ணின் விடிவுக்காக உழைத்து உயிர்நீர்த்த உத்தமர்கள் பலர். இவர்கள் யாவரும் சொர்க்கவாசல் கதவுகளைத் திறந்து அமரத்துவம் எய்திய ஆசிரியர் முருகேசு அவர்களை இதுவரை வரவேற்று உபசரித்திருப்பார்கள். அங்கே இவருக்கென வழங்கப்பட்ட ஆசனம் பெரும் பூரிப்பில் திளைத்து நிற்கும். கவிஞர் மு.செல்லையா அவர்களை "காந்தி" என்றும் திரு.க.முருகேசு அவர்களை "நேரு" என்றும் மக்கள் அக்காலத்தில் அழைத்ததாக ஒரு செய்தி 'பாதிவழி சென்ற புத்தன் மீதிவழி நேருவாக திரும்பி வந்தான்' என்று கவியரசு கண்ணதாசன் பாடினார். பலிக்குமா? நடக்குமா? நடப்பதெல்லாம் நல்லனவாகவே நடக்கும்.

# 24

## வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர்

இ.வே.செல்வரட்ணம்
கனடா

க.முருகேசனார், இவ் வையத்தில் 95 வருடங்கள் வாழ்வாங்கு வாழ்ந்து, அவரது பூத உடல் மறைய, புகழுடம்பு என்றும் வாழும் வகையில் அமரராகிவிட்டார். அவரது பூத உடல் மறைந்ததையிட்டு அவரது மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனுதாபம் தெரிவித்தோர். ஆழ்ந்த கவலையில் இருப்பது தற்காலிகமானது. ஆனால் அவரது (புகழுடம்பு) என்றும் வாழும் வகையில் வாழ்ந்து காட்டினார் என்பது அவரது பூதவுடலின் இறுதியாத்திரையின் பொழுது எல்லோருக்குமே அறிந்திருக்காமல் இருக்க முடியாது. அவர் பிறந்த, வாழ்ந்த, உலாவிய இடங்களில் அவரது பூத உடலுக்கு அளிக்கப்பட்ட மரியாதையையும் அஞ்சலி நிகழ்ச்சிகளும், அவரின் புகழைக் காட்டி நின்றன. சிறப்பாக அவரது சமூகக் கல்விப் பணிகளும் சேவைகளுமே அவரது புகழைக் காட்டி நின்றன.

1943 ஆம் ஆண்டு நான் 13 வயது மாணவனாக இருந்த பொழுதே அவரையும், அவரோடு வடமராட்சி சேவா சங்கத்தை ஆரம்பித்து சமூகப்பணி புரிந்த அமரர்கள் ஆ.ம.செல்லத்துரை, கவிஞர் மு.செல்லையா, புலவர் சி. வல்லிபுரம், கே.டி.மாணிக்கம், த.இரத்தினம் பொ.அண்ணாச்சாமி ஆகியோரை அறிய வந்தேன் இவர்கள் எல்லோரும் ஆசிரியர்கள் வடமராட்சி சேவா சங்கத்தின் பிரச்சாரக் கூட்டம் ஒன்றிற்கு அவர்கள் பகுதிக்கு வந்த பொழுதே அறிய வந்தேன். இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையிலேயே சேவா சங்கத்தினர் முயற்சி எடுத்ததன் பலாபலனாகவே நானும் என் பகுதியைச் சேர்ந்த இன்னும் மூவரும் 1944 ஆம் ஆண்டு அதுவரையும் எம்சமூகப் பிள்ளைகளைச் சேர்க்காத உடுப்பிட்டி

அ.மி. ஆங்கிலப் பாடசாலையில் சேர்ந்து படித்தோம். அதன் பிறகுதான் எம் சமூகத்தவர்கள் உயர் கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றார்கள். அதற்குப் பின்னர் ஆதியாமலை ஜே.எஸ்.சுந்தரம், சீ.இ.ராமலிங்கம், சீ.சண்முகம் வல்வெட்டி க.தம்பிராசா, மா.பரமானந்தம், கம்பர்மலை க. வல்லிபுரம், ச.இராமலிங்கம் ஆகியோர் எனக்கு வயதில் மூத்தவர்கள். இவர்கள் ஆரம்ப கல்வியை அ.மி.தமிழ்ப்பாடசாலையில் முடித்த பின்னர் முறையே தெல்லிப்பளை யூனியன் கல்லூரியிலும் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரியிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் உயர் கல்வியைப் பெற்று அரச பணியாளர்களானார்கள்.

வடமராட்சி சேவா சங்க அங்கத்தவர்கள் 1943 மேற்கொண்ட முயற்சியின் பலாபலனாக இன்றுவரை உடுப்பிட்டி அ.மி. கல்லூரியில் படித்து உயர்கல்வி பெற்று ஆசிரியர்களாகவும், இஞ்சினியர்களாகவும், டாக்ரர்களாகவும், கணக்காளர்களாகவும், நிர்வாகப் பணியாளர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும் பாடசாலையை அண்டிய பகுதியில் எம்மவர்கள் மிளிர்கிறார்கள். இந்த நிலையை ஆக்கிய சமூகப் பணிக்கு கால்கோளாக இருந்தவர்களில் அமரர் க.முருகேசனாரும் ஒருவர். எனக்கு முன்னர் தேவரையாளி இந்து தமிழ்பாடசாலையில் எமது பகுதியில் இருந்து சென்று எஸ்.எஸ்.சி. தகைமை பெற்றவர்கள் அங்கேயாங்கே தகைமை பெறுவதன் பொருட்டு நாங்கள் சேர்ந்து படிக்க ஆரம்பிப்பதைத் தொடர்ந்து இப்பாடசாலையில் சேர்ந்து படித்தார்கள். இன்று இப் பாடசாலையில் ஆசிரியர்களாகவும் ஏன் இதன் அருகாமையிலுள்ள சகோதர நிறுவனமாகிய உடுப்பிட்டி அ.மி.பெண்கள் கல்லூரியில் இன்று அதிபராயும் இருப்பவர் எம்மவரே. இதையிட்டு நாம் பெருமைப் படாமலிருக்க முடியாது.

1955 இல் நான் சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்தில் 1942 இல் அகில இலங்கையிலும் எம் சமூகத்தவர்களின் சமூகப் பொருளாதார, கல்வி, அரசியல் மேம்பாட்டுக்கென ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் இணைச் செயலாளர்களில் ஒருவராக ஆக்கியதில் அமரர் க.முருகேசனாருக்குப் பெரும் பங்குண்டு. அப்பொழுது அவர் மகாசபையின் உப தலைவராக இருந்து கருமம் ஆற்றினார். அப்பொழுதுதான் தீண்டாமை ஒளிப்புப் பிரசாரம் முடுக்கி விடப்பட்டது. அதன் விளைவாக யாழ்நகரில் உள்ள நல்லூர் கந்தசாமி

கோயில், வண்ணை சிவன்கோயில், பெருமாள்கோயில், என்பன சிறுபான்மைத் தமிழர்களின் வழிபாட்டுக்காகத் திறந்துவிடப்பட்டன. அத்துடன் வி.எஸ்.கே. மலாயன் கபே, தாமோதர விலாஸ், சுபாஸ் கபே, பாரத் கபே போன்ற பிரபலமான உணவுச் சாலைகள் எமது மக்களுக்குத் திறந்துவிடப்பட்டன. அவரது கல்விச் சேவையைப் பொறுத்தவரையில் தேவரையாளி இந்துக்கல்லூரியின் ஸ்தாபிதத்திலும் கால்கோளாய், இருந்தவர்களில் இருந்ததும் அல்லாமல் அதன் நல்லாசிரியனுமாய் இருந்தார். மேலும் தனது பிறந்தகமாகிய அல்வாய் வடக்கில் சிறீலங்கா வித்தியாலயத்தை ஆரம்பித்து அதன் அதிபராக சேவையாற்றியுள்ளார். அத்துடன் புத்தூர் கிராமத்தில் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் எம் சமூகப் பிள்ளைகள் சேர்க்கப்படாமையைக் கருத்தில் கொண்டு எம்மக்கள் அதிகமாக வாழ்ந்துவரும் புத்தகலட்டி எனும் பகுதியில் ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயத்தை ஆரம்பித்து அதை கல்விக்கான இந்து சபையாரிடம் (இந்து போட்) கையளித்து அதன் அதிபராகவும் இருந்த காரணமாய் ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு அருகாமையில் காணி வாங்கி பெரிய வீடொன்று கட்டி அமரத்துவம் அடையும் வரை வாழ்ந்து வந்தார்.

அத்துடன் அரசியலைப் பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து முக்கியஸ்தராய் அங்கத்துவம் வகித்தார். தான் பிறந்த இடத்து கிராம சபையின் அல்வாய் வடக்கின் ஒரு வட்டாரத்தின் தேர்தலுக்கு நின்று வெற்றியீட்டி சமூகத்தின் முதல் கிராம சபை உறுப்பினர் என்ற பெருமையைப் பெற்றார்.

இச் சேவைகள் எல்லாம் அவர் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தார் என்பதையே காட்டுகின்றது. அந்த வகையில் அவரது பூதவுடல் மறைந்தாலும் அவரது புகழுடம்பு இவ்வையகத்தில் தெய்வத்திற்கு நிகராய்ப் போற்றப்பட்டுவருகிறது. இதுவே தெய்வத்தைப் பற்றி நான் கொண்டு இருக்கும் எண்ணக்கரு என்று கூறுவதில் பெருமைப்படுகிறேன். கனடாவில் இவரது பவளவிழா மலர் ஒன்று கனடாவில் வாழும் இவரது மருமகள் பவானி மூலம் கிடைத்தது. அதைப் படித்தேன் அதையிட்டு கடிதமொன்று அமரர் க.முருகேசனாருக்கு எழுதினேன் அதற்குரிய பதிலோ அல்லது அது கிடைத்தது பற்றியோ அறிமுடியவில்லை. கனடாவிலிருந்து வந்து நாற்பது நாட்கள்வரை இலங்கையில் தங்கினேன் ஜனவரி 1 2005 சனிக்கிழமை

அவரைப் பார்க்கப் போனேன் அவரது உடம்பு நலிந்ததாகப்படவில்லை. ஆனால் அவரது புலன்கள் தொழிற்படவில்லைபோல் தோன்றியது. அவர் என்னை இனங்காண முடியாத நிலையில்தான் இருந்தார். இருந்திருக்க வேண்டும். அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை அவர் இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி அறிந்தேன். அவருக்கும் எனக்கும் இருந்த பாசத் தொடர்பு காரணமாக அவர் மரணிப்பதற்கு முதல் நாள் அவருடன் உரையாற்ற சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு அகமகிழ்ச்சியடைந்தேன். இந்த நேரத்தில் அவரது மறைவால் துயருறும் மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் அன்னாரது ஆத்மா சாந்திஅடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

# 25

## "நினைவில் நீங்காத நிலைவலைகள்"

சி.தெய்வேந்திரன்,
விசாரணை அதிகாரி,
வ.பி.போ.சபை. கோண்டாவில்.

வடமராட்சி அல்வாயை பிறப்பிடமாகக் கொண்டு, வலிகாமம் கிழக்கு ஆவரங்காலை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட அமரர் அவர்கள் எமது சமூகத்தால் "ஆவரங்கால் வாத்தியார்" என்ற அதிஉயர் சிறப்புப் பெயரைப் பெற்றவர்.

கல்வியால், பொருளாதாரத்தால் வறுமைப்பட்ட எமது சமூகத்தின் முன் எடுப்புக்களில் மகாசபை போன்ற அமைப்புக்களிலும், தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற அரசியற் கட்சிகளிலும் இணைந்து செயற்பட்டு எமது சமூகத்திற்கு வழிகாட்டியவர். இந்த வகையில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி 1977ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் எமது சமூகத்திற்கு ஒரு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று ஏகமனதாக முடிவெடுத்து தந்தை செல்வாவின் சிபார்சில் அமரர் அவர்களின் பெயர் முன்மொழியப்பட்ட போது அமரர் அவர்கள் நோய்வாய்ப்பட்டதினாலும், எமது சமூக இளைய படித்த தலைமுறைக்கு இடம் கொடுக்க வேண்டுமென்ற பெருமனதாலும் அரசியலை விரும்பாத காரணத்தாலும் அமரர் அவர்களின் பரிந்துரையின் பிரகாரம் அமரர் பிறந்த இடமான அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்ட கல்விமான் மறைந்த அமரர் ரி.இராசலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டு வெற்றியும் கண்டார் என்பதை எவரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

அமரர் அவர்களும், அவரது குடும்பமும் எனது குடும்பத்துடன் நீண்ட காலமாக குடும்ப உறவுடன் பழகி வந்தோம். அந்த பழக்கத்தின் காரணமாக

நற்பண்புகளை நன்கு அறிந்து எனது நன்மதிப்பையும், மரியாதையையும் பெற்றிருந்தார். இந்த வகையில் நான் 1996ஆம் ஆண்டு குடாநாட்டை விட்டு வன்னிக்கு இடம்பெயர்ந்து திரும்ப குடாநாட்டிற்கு 2003ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த போது எமது நன்மதிப்புக்குரியவர்களை ஒவ்வொருவராக சந்தித்து சுகம் விசாரித்து வந்த பொழுது அமரர் அவர்களையும், அவரது குடும்பத்தையும் பார்த்துப் பேச ஆவல் கொண்டு ஒரு நாள் சாயந்தரம் அமரர் அவர்களின் வீட்டிற்கு வந்து குடும்பத்தினர் அனைவரையும் சுகம் விசாரித்து, "வாத்தியார் எங்கே" என்று கேட்ட பொழுது, முன்னால் தோட்டத்திற்குள் நிற்பதாக கூறிய போது நான் அமரர் அவர்களை அணுகி "வாத்தியார் எப்படி சுகமாக இருக்கிறியளோ' என்று கேட்ட பொழுதும் அவர் என்னை அடையாளம் காணமுடியாதிருந்தார். அடையாளம் காணமுடியாத தள்ளாத வயதிலும் தோட்டத்தில் வேலை செய்வதைப் பார்த்து பெருமைப்பட்டு "நான் இமையாணன் தெய்வேந்திரம்" என்று கூறிய பொழுது, ஆ-தெய்வமா? என்ன வந்தது என்று கேட்க அவரின் பெறாமகள் இந்திரா 'அண்ணை கொஞ்சக் காசு வேணும் என்று கேளுங்கோ" என்று கூற, நானும் வாத்தியார் எனக்கு கொஞ்சக் காசு வேணும் கஷ்டமாக இருக்கிறது என்று கூறியபொழுது, அமரர் அவர்கள் தனது பாரியாரை அழைத்து தெய்வத்திற்கு அவர் கேட்கும் காசைக் கொடுக்கும்படி நான் போகும் வரை வற்புறுத்திக்கொண்டே இருந்தார். அமரர் அவர்களின் தள்ளாத வயதிலும் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற மனம் எனது நெஞ்சில் நீங்காத நினைவலைகளாக இன்றும் பதிந்திருக்கிறது என்பதை அமரர் அவர்களின் நினைவு மலரில் சிறப்பாக குறிப்பிட்டு, இந் நாளில் அமரர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சந்நிதி முருகனை வேண்டுகின்றேன்.

# 26

## யாழ்/ஸ்ரீவிஷ்ணுவித்தியாலயத்தின் ஒளிவிளக்கு

அன்பு மாணவன்
சி.தெய்வேந்திரம் (சுந்தரம்)
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

**யாழ்மாவட்டத்தின் புகழ்பூத்த அல்வாயூரைப் பிறப்பிடமாகவும், பல்வகையிலும் மேலோங்கிய ஆவரங்கால் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு அமரர் க.முருகேசு அதிபர் அவர்களின் சமூக சேவை மடல்**

யாழ்/ ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் முதல் அதிபருமான உயர் திரு.க.முருகேசு ஆசிரியர் அவர்களின் தலைமையில் நான் 6ஆம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த காலமது. நான்கு பக்கமும் சிறிய ஓலைக் கொட்டில்களாகக் காணப்பட்ட பாடசாலையாக இப்பாடசாலை அப்போது இருந்தது. பின்பு சிறிது சிறிதாக கட்டிடங்கள் கட்டப்பட்டு மேலோங்கி அதி உன்னத ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயமாக மிளிர்ந்து கொண்டிருந்தது. அப்போது ஆயிரம் மாணவர்களுக்கு மேல் கல்வி கற்றுக் கொண்டிருந்தோம். அமரர் அவர்கள் பாடசாலையின் வளர்ச்சியில் முழுமுச்சுடன் உழைத்து இப்பாடசாலையின் விடிவெள்ளியாகத் திகழ்ந்தார். அப்பாடசாலையின் மூலம் பல்வேறு துறைகள் சார்ந்த பல விற்பனர்களையும் தோற்றுவித்தார். கல்வி, விளையாட்டு, கலை, சமயம், சுகாதாரம் போன்ற இன்னும் பல துறைகளிலும் இப்பாடசாலையை மேலோங்கச் செய்தார்.

### நாடகக் கலை

நாடகக் கலையில் சிறந்து விளங்கிய அதிபர்திரு.முருகேசு ஆசிரியர் அவர்கள் ஆண்டு தோறும் கலைவிழா நிகழ்ச்சிகளை ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்தில் நடாத்தி வந்தார்கள். அந்த வரிசையில் "பக்த மார்க்கண்டேயர்" "சகுந்தலை" போன்ற இன்னும் பல நாடகங்களை

இப்பாடசாலை மாணவர்களைக் கொண்டே நடிக்க வைத்து மேடையேற்றினார்கள். இந்நாடகங்கள் பல ஊர்களிலும் மேடையேற்றப்பட்டுப் பல பாராட்டுப் பத்திரங்களையும் பெற்றுக் கொடுத்தன. மேலும் முழுக்க ஆங்கில பாசையில் சேக்ஸ்பியரின் "வெனிஸ் வர்த்தகன்" என்னும் நாடகத்தை இப்பாடசாலை மாணவர்களாலேயே நடிக்கவைத்து ஏற்றிய பெருமையும் அவருக்குண்டு.

**விளையாட்டுத்துறை**

ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தில் வருடாந்த மெய்வல்லுனர் போட்டிகளை அதிபர் அவர்கள் நடாத்தி வந்தார்கள். அதுமட்டுமல்லாமல் கோப்பாய் வட்டார மட்டத்திலும், யாழ் மாவட்ட மட்டத்திலும் இப்பாடசாலை மாணவர்களை கலந்து கொள்ள வைத்து பல பாராட்டுப் பத்திரங்களையும் வெற்றிக் கேடயங்களையும் பெற்றுத்தந்தார்கள். இதனால் பாடசாலையின் விளையாட்டுத் தரம் மேலோங்கியது. கிளித்தட்டு விளையாட்டில் ஆர்வம் கொண்ட அதிபர் அவர்கள் என் போன்ற பல மாணவர்களுடனும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**சமூக சேவையின் விடிவெள்ளி**

அமரர் திரு.க.முருகேசு ஆசிரியர் ஆசிரியத் தொழிலோடு சமூக சேவையிலும் பெரும் தொண்டாற்றினார்கள். தந்தை செல்வா, திரு.கு.வன்னியசிங்கம் போன்ற இலங்கைத் தமிழரசுக்கட்சி உறுப்பினர்களோடு தோளோடு தோள் நின்று தமிழினத்தின் விடுதலைக்காகப் பாடுபட்டு உழைத்தார். புத்தூர் கிராமசபையால் தந்தை செல்வாக்கு அளிக்கப்பட்ட மாபெரும் வரவேற்பு விழாவில் வரவேற்புரை நிகழ்த்தி தந்தை செல்வாவுக்கு மரியாதை செலுத்தினார்கள். மேலும் சிறுபான்மைத் தமிழரின் மகா சபையிலும் பதவி வகித்து நலிவுற்ற மக்களுக்குச் சேவையாற்றினார். கதர் உடையுடன் காட்சி தரும் முருகேசு வாத்தியார் என்று செல்லமாக அழைக்கப்படும் அவர் கிராமசபை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்பட்டார். அல்வாயூரிலும் அவர் ஆற்றிய சேவைகள் அளப்பரியவை. அவ்வூரில் ஸ்ரீ லங்கா பாடசாலை, குருக்கட்டுப் பிள்ளையார் தேவஸ்தானம் போன்ற பல ஆலயங்களிலும் அவரது சேவைகள் சிறந்து விளங்கின.

**லிங்கன் மத்திய சனசமூக நிலையத்தின் கலங்கரை விளக்கம்**

ஆவரங்கால் கிழக்கு லிங்கன் மத்திய சனசமூக நிலையம் ஆரம்பமாகி புதிய கட்டிடம் கட்டப்பட்ட காலமது. இந்நிலையக் கட்டிடமானது கூரைவேலை பூர்த்தியாகாத நிலையில் பொருளாதாரக் கஷ்டத்தால் முடிவு பெறாத நிலையில் இருந்தது. அப்போது இந்நிலையத்தின் தலைவராக இருந்த நான் அதிபர் திரு.க.முருகேசு ஆசிரியர் ஆகிய எனது ஆசானை கூரை வேய்வதற்கு ஓடுகள் வாங்கித் தந்து உதவுமாறு கேட்டுக்கொண்டேன். அதிபர் அவர்களும் எவ்வித மறுப்பும் இன்றி என்னை யாழ் நகரில் உள்ள அலுப்பாந்தி என்ற இடத்திற்கு அழைத்துச் சென்று தேவையான ஓடுகளை பெற்றுத் தந்தார்கள். இன்னும் வேறுபல உதவிகளையும் இந்நிலையத்திற்குச் செய்து தந்ததோடு, இங்கு நடைபெறும் சகல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அன்னாரின் மகத்தான சேவையால் இந்நிலையமானது மேலும் பல பொது ஸ்தாபனங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது.

லிங்கன் மத்திய சனசமூக நிலையம்
எவறெஸ்ற் விளையாட்டுக் கழகம்
பம்மல் நாடக மன்றம்
கிராம முன்னேற்றச் சங்கம்
மாதர் அபிவிருத்திச் சங்கம்
லிங்கன் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கம்
லிங்கன் முன்பள்ளி
அருள்மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானம்
அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தானம்

இந்நிலையங்களுக்கு அவர் ஆற்றிய பெருஞ்சேவைகளை மனதில் கொண்டு பெருமகனார் முருகேசனார் அமரர் ஆகிவிட்டாலும் கூட என் நன்றி இந்நாளிலும் எப்போதும் அவர் மேல் உண்டு. என் மனத்திரையில் காட்சி தரும் முருகேசனாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை என்றென்றும் இறைஞ்சுகின்றேன்.

நன்றி

# 27

## ஒரு சமூக முன்னோடியின் கிராமத்து வாழ்வுப் பதிவுகள்.........

செ.சதானந்தன்
ஓய்வுபெற்ற அதிபர் J.P
"ராஜ்பவன்" அல்வாய்

வட அல்வை தந்த முது பெரும் தலைவன் மூதறிஞன் கந்தப்பு முருகேசு அவர்கள் பல பரிமாணத்துக்குரியவர் என்பது அவர் வாழ்ந்த வாழ்வு சான்றுபகரும். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கால வாழ்க்கையினைச் சாதனையாக்கிக் கொண்ட அமரர் கந்தப்பு முருகேசு ஆகிய க.மு அவர்களது வாழ்வியலின் முற்பகுதியினை இன்றைய சந்ததியினரின் அறிதலுக்குரிய பதிலாக இருக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். அமரர் க.மு. அவர்களின் உணர்வு பூர்வமான சமூக சேவையில் அவரது கல்விப் பருவ வாழ்வியல் கோலங்களும் சிந்தனைக்குரியன.

அமரர் க. மு அவர்களும் அவருடனான சமகாலச் சமூக முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் அமரர்கள் அல்வாயூர்க்கவிஞர் மு.செல்லையா, வதிரியைச் சேர்ந்தவர்களான சமூகஜோதி ஆ.ம. செல்வத்துரை, சைவப்புலவர் சி. வல்லிபுரம், கரவெட்டியைச் சேர்ந்த த.இரத்தினம், நீ.சுப்பிரமணியம் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்கள் அனைவரும் எமது சமூகத்தின் அங்கிகரிக்கப்பட்ட அரச சேவைக்குரிய ஆசிரியர்களுமாவர். மேலும் இவர்கள் தாம் பிறந்த சைவசமயத்தைப்பேணி அதன்படி ஒழுகியவர்கள். இவர்களுடைய சைவப்பாரம்பரியத்துக்கு முன் உதாரணமாக அக்காலத்தில் விளங்கிய சைவப்பெரியார் கா.சூரன் ஆசாரியார், அல்வாயூர் க.வேலுச்சோதிடர், வட அல்வை பெரியதம்பி, அமரரின் தந்தையார் கந்தப்பு போன்றவர்களின் சைவசமய வாழ்க்கையினை நாம் முன்னிறுத்திக் கொள்ளவேண்டிய வர்களாவோம். ஒடுக்கப்பட்ட அடிமட்டத்துச் சமூகத்தைச் சேர்ந்த

இப்பெரியார்கள் உரிமைகள் மறுக்கப்பட்ட அக்கால கட்டத்தில் - பாடசாலைக்குச் சென்று கல்வியறிவினைப் பெறமுடியாத நிலையிலும் எவ்வாறு சமயசம்பந்தமான அறிவைப்பெற்றுக் கொண்டனர் என்பது எமது சிந்தனைக்குரியதாகும். இப்பெரியார்கள் தாம் வாழ்ந்த சூழலில் வசித்த மேல்தட்டுச்சமூக நிலையில் உள்ளவர்களின் வீட்டுக்குச் சென்று, அவர் களுக்குரிய பணிவிடைகள் சிலவற்றைச் செய்து கொடுத்து - அவர்களிடம் வாய் மூலமாகப் பெற்ற திருமுறைகளையும், சமயச் சிந்தனைகளையும் செவிமடுத்தே அவர்களைப் போன்றே, அவர்களைப் பின்பற்றி சைவசீலத் தைப் பேணினர் என அறியமுடிகிறது. இதன்பேறாகவே மேற்குறிப்பிட்ட சமூக முன்னோடிகள் கல்விகற்றுப் பல இடர்களின் மத்தியிலும் சைவ ஆசார சீலர்களாகக் கல்வியில் முன்னுக்குவர இனங்காணப்பட்டனர் எனக் கூறப்படுகிறது.

அமரர் க.மு. அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் அவரை ஒரு யுக் புருஷராகக் கணிக்கலாம். கல்வியில் தேர்ச்சி பெற்று ஓர் ஆசிரியராக, அதிபராக நீண்டகால அரசசேவையில் திகழ்ந்தவர். தான் பிறந்த கிராமத்திலும் பின்னர் புகலிடமாகக் கொண்ட புத்தூரிலும் இரண்டு பாடசாலைகளை நிறுவி அவற்றில் அதிபராகவும் மிளிர்ந்தவர். அவர் ஒரு கைதேர்ந்த ஒப்பனைக் கலைஞர்; நாடகத்தயாரிப்பாளர். அவருடைய கல்விச் சேவையில் பல கலைஞர்களை இனங்கண்டு வளர்த்தெடுத்தவர். இவர்களில் அண்மையில் கௌரவக்கலாநிதிப்பட்டம் பெற்ற அமரர் வி.வி. வைரமுத்து அவர்களும், புத்தூரைச் சேர்ந்த சங்கீதவித்துவான் பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் திரு.சி.பத்மலிங்கம் ஆகியோர் குறிப்பிடத்தக்க வர்கள். எமது சமூகம் சார்ந்த கிராமத்துப் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அழைத்துச் சென்று கல்வி கற்க வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

அமரர் க.மு. அவ்ர்களின் சமூக சேவையின் பல்துறைப் பரிமாணத்துக்குரிய ஈடுபாடுகளைக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளும் பொழுது - அவரது சிந்தனையின் வெளிப்பாடாக இன்னொரு விடயத்தை நாம் மனத்துள் கொள்ளவேண்டும். எவ்வாறு ஐரோப்பிய நாடுகளில் கறுப்பின மக்களின் விடிவுக்காகப் பாடுபட்ட மாட்டின் லூதர் கிங், இந்திய ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர் டாக்டர் அம்பேத்கார் போன்றவர்கள் அந்த அடி மட்டத்து வாழ் மக்களின் வாழ்வியல் நிலைகளை வளர்த்தெடுத்து, ஏனைய உயர் மட்ட

மக்களுக்கு ஈடாக வாழ சமூக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பச் சிந்தித்தார்களோ அதே போன்று அமரர் க.மு. அவர்களும் எமது சமூகத்திலும் கல்வி, பொருளாதார மேம்பாட்டுக்காகச் சிந்தித்துச் செயற்பட்டவர். வடமராட்சிப் பகுதியில் முதன் முதலாக தாழ்த்தப்பட்ட சமூகத்து மாணவர்கள் இங்குள்ள உயர்வகுப்புக்களைக் கொண்டிருந்த கல்லூரிகளில் ஆங்கிலக் கல்வியினை மேற்கொள்ளத் தலைப்பட்டதுடன், அதில் வெற்றியும் கண்டனர். அக்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகள் இப்படியான கல்லூரிகளுக்குச் சென்றுவருவதற்கு அச்சப்பட்ட நிலையில் அவர்களுக்குச் போய் வருவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

வடமராட்சிச் சமூக சேவா சங்கம் என்ற ஒரு சமூக விழிப்புணர்வு கொண்ட ஓர் அமைப்பு பிற்பட்ட சமூக மக்களுக்காகத் தொண்டாற்றி வந்த காலத்தில் சமூக விடுதலைக்கான சில செயல்த்திட்டங்களை வகுத்து அதில் அரசியல் விடுதலைக்கான பொறுப்பினை அமரர் அவர்களிடம் ஒப்படைத்ததுடன் அவரையே அப்பகுதியிலுள்ள கிராமச்சங்க வட்டாரத் தேர்தலில் அபேட்சகராகவும் நியமித்தனர். இதற்கு அமரர் க.மு.அவர்கள் மிகப் பொருத்தமானவராகவும் காணப்பட்டமைக்குப் பல பின்புல வசதிகள் அவரிடம் இருந்தமையும் முக்கிய காரணமாகும். க.மு. அவர்கள் எப்பொழுதும் நெஞ்சுரம் கொண்ட ஒருவராகவும் - எதனையும் அஞ்சா நெஞ்சத்துடன் ஓர்மம் உள்ளவராகவும், தேர்தல் போன்ற களேபர ஈடுபாட்டிற்கு முகம் கொடுக்கக்கூடிய ஒரு அர்ப்பணிப்புடன் செயற்படத்தக்க படையணியையும் பக்க பலமாகக் கொண்ட ஒருவாகவும் அக்காலத்தில் திகழ்ந்தவர். இந்நிலையில் அவருடைய தேர்தல் வெற்றிகள் பல்வேறு மட்டத்தில் பிரபல்யம் பெற்றிருந்தது. அதாவது கிராமசபை அங்கத்தவராகிச் சரியாசனம் பெற்றது மட்டுமல்லாமல், சமூக ஒடுக்குமுறைக்கு எதிராகவும், இந்த ஒடுக்கு முறைக்குப் பக்கபலமாக விளங்கி வந்த அரச கூலிப்படை களுக்கு எதிராகவும் விடுதலைவேண்டிப் போராடவும் தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்படைந்து விட்டார்கள் என்பதையும் சங்குநாதம் செய்தது எனலாம். மேலும் இந்தச் செயற்பாடுகளின் மறுபக்கமாக ஏற்பட்ட ஓர் அவலநிலை - இப்பகுதித் தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வியல் ஆதாரத்துக்கான சீவல் தொழிலுக்குரிய பனை தென்னை மரங்கள் உயர்சாதி மக்களால் தடை

செய்யப்பட்டன. ஆசிரியர் அவர்கள் அதற்கு மாற்று நடவடிக்கையாக வன்னிப்பகுதிகளில் ஒன்றான முல்லைத்தீவுப் பிரதேசத்தில் அன்றைய நடைமுறையிலிருந்த கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கெடுத்து சீவல் தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரம் தேடிக் கொடுத்தார். இவற்றினால் அமரர் க.மு. அவர்களுக்கு நீதிமன்ற விவகாரங்கள், தொழில் நடவடிக்கை போன்றவற்றாலும் பொருளாதார நஷ்டங்கள் ஏற்பட்ட பொழுதிலும் கலங்காது, மனஞ்சலிக்காது சமூக விடுதலையினை நோக்காகக் கொண்டு இயங்கினார்.

ஆரம்பகாலத்தில் ஜெயம் என்றழைக்கப்படும் தர்மகுலசிங்கம் என்ற சமதர்மவாதியுடன் தனது சகாக்கள் சகிதம் செயற்பட்ட அமரர் அவர்கள் பிற்காலத்தில் தமிழ் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கம், திருமலை தந்த செம்மல் இராசவரோதயம் ஆகியோரால் ஆர்கஷக்கப்பட்டவராக தமிழரசுக்கட்சியில் இணைந்து கொண்டதுடன், அதன் பிற்படுத்தப்பட்ட சக இயக்கமான "மக்கள் முன்னேற்ற மன்றம்" என்ற அமைப்பில் காலஞ்சென்ற செனேற்றர் ஜி.நல்லையா, ஸ்ரேசன் மாஸ்டர் ஞானப்பிரகாசம், ந.த.செல்லத்துரை, R.P.குணரத்தினம், சேவியர், முன்னாள் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் க.நடராசா, கணபதிநாதன், நடேசு(சித்தன்கேணி) ஆகியோரைக் கொண்ட குழுவினருடன் பலவேலைத் திட்டங்களை முன்வைத்துச் செயற்பட்டார். அமரர்கள் க.மு.போன்றவர் களின் அழுத்தங்கள் காரணமாகவே, தமிழ்த் தேசிய வாதிகளால் பிற்படுத்தப்பட்ட சமூக அரசியல் பிரதிநிதித்துவங்களாக ஜி.நல்லையாவின் செனெற்சவை உறுப்புரிமையும், உடுப்பிட்டித் தொகுதியில் கூட்டணி வேட்பாளராக நின்று சக மக்களாலும் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராகத் திரு.த.இராசலிங்கம் அவர்களின் பிரதிநிதித்துவமும் சாதனைகளாகும். இவ்வாறு அமரர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றுப் பாதையில் அவர் பதித்த பாதச்சுவடுகள் - இவற்றின் பேறாகச் சமூகத்தில் ஏற்பட்ட அபிவிருத்திப் பெறுபேறுகளாகும்.

# 38

## இரண்டு பாடசாலைகளை உருவாக்கினேன்

2000 .01.12 இல் 'சரிநிகர்' - பத்திரிகையில்
வெளிவந்த பேட்டி

அல்வாயில் உள்ள அவரது இல்லத்தில் அவரைச் சந்தித்து உரையாடியதிலிருந்து சில பகுதிகள்

**நீங்கள் எங்கு கல்வி கற்றீர்கள்?**

நான் இன்பருட்டி வெஸ்லியன் மிஷன் பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை படித்தேன். நிலத்தில்தான் எழுதிப் படிப்போம். ஆறாம் வகுப்புக்குமேல் பனை ஓலையில் எழுத்தாணியால் எழுதிப் படிப்போம். வெஸ்லியன் மிஷன் பாடசாலை கிறிஸ்தவப் பாடசாலையாக இருந்தாலும் அங்கும் எமக்கு சம அந்தஸ்து கிடையாது உயர் சாதியினர் கதிரை மேசையில் அமர்ந்து படிப்பார்கள். நாங்கள் நிலத்தில் அமர்ந்து படிப்போம்.

**ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் நீங்கள் எவ்வாறு நடத்தப்பட்டீர்கள்.**

ஆரம்பத்தில் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையிலும் எமக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. தெல்லிப்பழையைச் சேர்ந்த சாமுவேல் யோவேல் போல் என்பவர் (அவரும் ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்) அரசாங் கத்துடன் வாதாடி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி பெற்றுத்தந்தார். 1929 ஆம் ஆண்டு என்னையும் சேர்த்து 80 மாணவர்கள் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப் பட்டனர். இதனைக் கேள்விப்பட்ட உயர் சாதியினர் இராமநாதனிடம் சென்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இடம் அளிக்கக் கூடாது என வாதாடினார். எனினும் மகா தேசாதிபதி அதற்குச் சம்மதிக்கவில்லை. இராமநாதன் அப்போது ஸ்டேட் கவுன்சில் உறுப்பினரா யிருந்தார்.

ஸ்டேட் கவுன்சில் உறுப்பினர் தான் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு நிதி ஒதுக்கீடு செய்வது வழக்கம். நான் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றபோது இருபாலைச் சந்தியில் வைத்து கோப்பாய்ச் சாமிநாதன் என்பவர் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றவர்களைத் திருப்பியனுப்பிக்கொண்டிருந்தார். நான் எனது தந்தையாருடன் நேர்முகப் பரீட்சைக்குச் சென்றேன். அவர்கள் எங்களையும் மறித்தார்கள். எனினும், நாங்கள் அவர்களைப் பொருட்படுத் தாமல் சென்று நோர்முகப் பரீட்சைக்குத் தோற்றினோம். நான் நாற்பத்து மூன்றாவது மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டேன். உடனே இராமநாதன் நிதி இல்லை எனக் கூறி அவ்வாண்டுக்கான அனுமதியை ஐம்பது வீதமாகக் குறைக்குமாறு உத்தரவிட்டார். அந்த ஆண்டு இதன் காரணமாக 39 உயர் சாதி மாணவர்களும், ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்தனர். பின்னர் நான் தெல்லிப்பழை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் எனது பயிற்சியைத் தொடர்தேன். அங்கும் நாங்கள் ஏனைய மாணவர்களுடன் சமமாக உட்கார்ந்து சாப்பிடமுடியாது. தனி அறை தான் வழங்கப்பட்டது. தீருநீறு பூச முடியாது எனினும், நாங்கள் இரகசியமாக திருநீறு பூசுவோம்.

**உங்களுக்கு பாடசாலை கட்டும் நோக்கம் எற்பட்டதன் காரணம் என்ன?**

அப்போது எமது சமூகத்தைச் சார்ந்த சூரன்என்பரால் ஆரம்பிக்கப்பட்ட தேவரையாளி இந்துக்கல்லூரியில் மட்டும் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு வந்தது. (அப்போது தேவரையாளி சைவப்பாடசாலை என்ற பெயரில் இது இயங்கி வந்தது)

இலங்கையில் தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாறு எழுதுவோர் சூரனைப் புறக்கணித்துவிட்டு எழுத முடியாது. தேவரையாளி இந்துக்கல்லூரி எமது கிராமத்திலிருந்து சுமார்ஒன்றரை இரண்டு மைல் தூரத்திலிருந்தது. இதனால் ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்குப் பெற்றோர் பெரிதும் சிரமப்பட்டனர். எனவேதான் நான் எமது கிராமத்திலேயே ஒரு பாடசாலை கட்டுவதற்குத் தீர்மானித்தேன்.

**பாடசாலை கட்டுவதற்கான நிதியை எப்படித் திரட்டினீர்கள்**

கிராம மக்களிடம்தான் திரட்டிக் கட்டினோம். எமது மக்கள் மிகவும் வறிய மக்கள் தங்களிடம் இருந்ததைத் தந்தார்கள். மிகுதிக்கு எனது பருத்தித்துறைக் காணியை விற்கவேண்டியேற்பட்டது. அத்துடன் எனக்கு

நூறு ரூபா சம்பளம் கிடைக்கும். அந்தப் பணமும் பாடசாலை கட்டுவதற்குத்தான் செலவழிக்கப்பட்டது. அல்வாயீயல் பாடசாலை கட்டி முடிக்கப்பட்டதும் புத்தூரில் உள்ள சிறுபான்மை மக்களும் தமக்கும் ஒரு பாடசாலை கட்டித்தர வேண்டும் என்றனர். புத்தூர் பாடசாலை கட்டும் பொறுப்பை இந்துமகாசபை (இந்து போர்ட்) என்னிடம் ஒப்படைத்தது.

**இந்துப் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறதே?**

அவர்கள் சாதிக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வந்தாலும் சமயம் மாறுவதை அனுமதிக்கவில்லை.

**புத்தூரில் பாடசாலை கட்டும் போது உங்களுக்கு எதிர்ப்புகள் ஏதும் வரவில்லையா?**

வந்தது. புத்தூர் மழவராயரின் ஆட்களல்லவா பாடசாலை கட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். நாம் எமது காணிக்குள் பாடசாலை கட்டியபடியால் அவர்களால் ஏதும் செய்யமுடியவில்லை. புத்தூர் பகுதி மக்கள் கல்வியறிவு குறைந்தவர்கள். அவர்களுக்கு உயர்சாதியினரின் வாக்கு வேதவாக்கு மாதிரி.

**நீங்கள் கிராமசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டபோது என்ன நடந்தது.?**

நான் கிராமசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு கிராமசபைக்குச் சென்றபோது, வேளாளர் என்னைத் தாக்க முற்பட்டனர். நான் எனது ஆதரவாளர்கள் புடை சூழச் சென்றபடியால் அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. இரண்டு தடவைகள் நான் கிராமசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டேன். மூன்றாவது தடவை இடதுசாரிகள் கணேசன் என்ற எனது உறவினரை எனக்கு எதிராகத் தேர்தலில் நிறுத்தினர். இதனால் தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகள் இரண்டாகப் பிளவு பட்டன. இதன் காரணமாக உயர்சாதியினர் ஒருவர் தேர்தலில் வெற்றிபெற முடிந்தது.

**தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுத்தவர்கள் என்ற வகையில் டானியல் . எம்.சி.சுப்பிரமணியம் போன்றோர் பேசப்படுகிற அளவுக்கு உங்களது பெயர் பிரபலமாகாமைக்குக் காரணம் என்ன?**

நாங்கள் அமைதியான சாத்வீகமான வழியில் எந்தப் பிரச்சியையையும் அணுகுவார்கள். பேச்சுவார்த்தை மூலம் எதையும்

தீர்த்துக்கொள்ளலாம் என்பது எனது நிலைப்பாடு. டானியல் எம்.சி.போன்றோர் தீவிரவாதப் போக்கைக் கடைப்பிடித்து வந்தனர். புரட்சியாளர்களாகத் தம்மைக் காட்டிக்கொண்டவர்கள். இதனால் தான் சிறுபான்மைத் தமிழர் மகா சபைக்குள்ளும் பிளவு ஏற்பட்டது. நான் சாதியை முதன்மைப்படுத்தி எந்த இடத்திலும் கதைத்தது கிடையாது. நாங்கள்தான் முதன்முதலில் ஆலயப் பிரவேசம் மேற்கொண்டோம். 09.07.1956 அன்று நானும் ஏ.எம்.செல்லத்துரை , கவிஞர் செல்லையா, சைவப்புலவர் வல்லிபுரம், , நல்லையா ஆகியோரும் மிக அமைதியான முறையில் தேவாரம் பாடிக்கொண்டு நல்லூர் வீதியை வலம் வந்தோம். இதே போல் தேனீர்கடைப் பிரவேசம் செய்த போதும் தேனீர்க் கடை முதலாளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களது பரிபூரண ஆதரவுடன் தேனீர்க்கடைப் பிரவேசம் செய்தோம். நாம் சமாதான வழியில் போனபடியால் எமக்கு உயர்சாதியினரின் ஆதரவும் இருந்தது. பொலிஸ் எத்தனை நாளைக்குப் பாதுகாப்பு தர முடியும். நான் சமாதான வழியில் போனபடியால் நான் வேளாளன் போல நடிக்க முயல்வதாக என் மீதுடானியல் போன்றோர் குற்றம் சுமத்தினார்கள். உயர்சாதியினருக்கு எமது பிரச்சினை களை உணர்த்தி அதன் மூலம் ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்தவே நாம் விரும்பினோம். ஏனென்றால், நாம் அவர்களுடன் தான் வாழப் போகிறோம். எம்மை ஆலயத்தினுள் செல்ல அனுமதிக்கவில்லை. என்பதற்காக ஆலய தேருக்கு நெருப்பு வைப்பதை நியாயப்படுத்த முடியாது. இதனால்தான் நான் மாவிட்டபுர ஆலயப் பிரவேசத்தில் கலந்து கொள்ளவில்லை. எனது பேத்தி ஒரு சமயம் டானியலிடம் கேட்டாள் உங்களுக்கு இந்தச் சாதியை விட்டால் வேறொன்றும் கிடையாதா எழுதுவதற்கு என்று எம்.சி.பிற்காலத்தில் பிராமண மற்றும் உயர் குல இளைஞர்களுக்குக் கூட அவர்களை தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறி ஆசிரிய நியமனம் பெற்றுக்கொடுத்ததாக பலர் என்னிடம் முறையிட்டிருக் கின்றார்கள்.

**உங்கள் கிராமத்தில் பௌத் பாடசாலை ஒன்று அமைக்கப்பட்டதாகவும், அந்தப் பாடசாலைக்குமாற்றலாகிச் செல்ல விரும்பிய மாணவர்களுககு நீங்கள் பாடசாலை விடுகைப் பத்திரம் வழுங்கவில்லையெனவும் கூறப்படுகிறதே?**

ஆம். எமது கிராமத்தில் பௌத்த பாடசாலை ஒன்று நிறுவப்பட்டது. நான் எனது பாடசாலையிலிருந்து பௌத்த பாடசாலைக்கு மாறிச் செல்ல விரும்பிய மாணவர்களுக்கு பாடசாலை விடுகைப் பத்திரம் வழங்கவில்லை.

இதனால் நான் கல்வி அதிகாரிகளின் பலத்த எதிர்ப்பைச் சம்பாதிக்க நேரிட்டதுடன் பின்னர் எனக்கு சேவை நீடிப்புக்கூட வழங்கப்படவில்லை.

**தமிழர்களுக்கென தனிநாடு ஒன்று உருவானால் மீண்டும் சாதி ஒடுக்குமுறை தலைதூக்கும் எனச் சிலர் கூறுகின்றார்களே. இது பற்றி....**

ஒருபோதும் இல்லை. அது முன்பு ஒரு காலத்தில் இருந்தது. இப்போது எல்லாம் அழிந்துவிட்டது. எனது பேரனுக்குக் கூட முன்பு இப்படியெல்லாம் நடந்தது என்று சொன்னால் நம்பமாட்டான்.

# 29

# தேவதூதன் பொதுநிறுவன ஒன்றியம்

விவசாய சம்மேளனம்
சி.நல்லதம்பி (தலைவர்)
இ.சிஞானம் (செயலாளர்) க.சீவரத்தினம் (பொருளாளர்)
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அமரர் கந்தர் முருகேசு அவர்களின் புத்தூர் வருகை 1957 இல் ஆரம்பமாகின. எமது ஆவரங்கால் கிழக்கு கிராமத்திற்கு ஒரு தேவதூதன் போல் வந்தார். அக்காலத்தில் எமது கிராமத்தில் வாழ்ந்த பல பெரியோர்களால் அவர்வரவு இன்முகத்தோடு வரவேற்கப்பட்டது.

அமரரின் பணி எமது ஸ்ரீவிஷ்ணுவித்தியாலயத்தில் தொடங்கி கிராமத்தின் பல பாகங்களிலும் சமூக முன்னேற்றங்கள் தங்கள் கால நேரத்தை முழுமையாக அர்ப்பணித்தனர். அவர்களில் அமரர் திரு.இ.நாராயணன், அமரர் திருசி.அரியகுட்டி, அமரர்.திரு.க.இளையதம்பி, அமரர் திரு.தே.வடிவேலு, அமரர்.திருச.கந்தையா திரு.த.மாப்பாணர், திரு.வே.மாசிலாமணி, திரு.வ.கனக சபை, அமரர்.கி.சின்னத்தம்பி, அமரர்.திரு.த.செல்லர், திரு.க.சின்னத்தம்பி கரதடியூர் (மேசன்) க.செல்லர், அமரர்.திரு. வ.பெருமாள், அமரர் திரு.வைத்தி லிங்கம் போன்றோர் அமரரின் நற்பணிகளுக்கு உறுதுணையாய் நின்று தீவிரமாக செயற்பட்டனர். அவற்றின் பெறுபேறாக வெளியூர்களான வசாவிளான், கட்டுவன், அச்சுவேலி, நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் கிழக்கு, புத்தூர் மேற்கு ஆவரங்கால் போன்ற கிராமத்திலிருந்தும் மாணவர் வரவு அதிகரித்தது.

ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம் என்ற பள்ளிச் சாலையை உருவாக்கி அதிலே ஐந்நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள்வரை கல்வி கற்க வழி அமைத்தார். அமரர் அவர்கள் சைவநெறியை போதித்தார் கல்வியுடன் கலாச்சாரங்களிலும் அதிக ஈடுபாடு செலுத்தினார். இதன் பெறுபேறாக திறமைமிக்க மாணவர்களை உருவாக்கினார். மாணவர்களிடையே திறமைகளை வெளிப்படுத்தி அவர்களை யெல்லாம் பிற மாவட்டங்களிலும் தொகுதிகளிலும், கூட்டிச் சென்று வெற்றிதேடி

புகழடையச் செய்தார். பலபோட்டி நாடகங்கள், விளையாட்டு, நடனம், கும்மி, சங்கீதம், அபிநயப்பாட்டு ஆகிய துறைகளில் மாணவர்களின் திறமைகளை உலகறியச் செய்தார். அமரர் அவர்களின் பிரயத்தனத்தால் கிராம, அயல் கிராம மக்கள் மத்தியில் மேலும் பக்தி, பாசம், அன்பு, வளரத் தொடகின. இக்கிராமத்திற்கு கிடைத்த "விடிவெள்ளி" என கிராமத்துப் பெற்றோரால் வர்ணிக்கப்பட்டார். மாணவர் மட்டத்திலும் பாடசாலை மட்டத்திலும் பாடசாலையின் புகழ் கொடி கட்டிப் பறந்தது. அது ஒரு மறக்க முடியாத காலம். 15 இற்கு மேற்பட்ட நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களை தம்பால் இணைத்துக்கொண்டார். பல மாணவர் களுக்கு இரவு நேர வகுப்புக்கள் வைத்து பாடங்கள் கற்பித்தார். அமரர் அவர் களின் திறமை மிக்க சைவச் சிந்தனையால் இக்கிராமத்தில் (அறிவாளி) முன்னோடி யாக அமரர் திரு.சி.அரியகுட்டி என்பவரால் நாயன்மார் குருபூசை வருடா வருடம் சிறப்போடு நடந்தமை சைவ பண்பாட்டிற்கு ஓர் உதாரணமாகும்.

கருணைக் கடலானார் அமரர். கிராமத்தின் இருமுனைகளிலும் இருக்கும் லிங்கன் மத்திய சனசமூக நிலையத்தையும் , கலையகம் சனசமூக நிலையத்தையும் தமது இருகண்களாகக் கருதினார்.

" சுழன்றும் ஏர்ப்பின்னது) உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

**வீடும் வயலும்**

சதுப்பு நிலத்தை மேடாக்கி நன்நிலமாக்கி நெற்பயிர் செய்தார். விளைதானியங்களைச் செய்தார். அழகான வீட்டுத் தோட்டம் அமைத்து அதிலே பழமரக்கன்றுகள் நட்டு பயன் பல பெற்றார். அமரர் அவர்கள் தமது 94 ஆவது வயதிலும் மண் வெட்டி கையில் எடுத்தார். நிலத்தைப் பண்படுத்தினார். அப்போதெல்லாம் விவசாயத்தில் அமரர் அவர் காட்டிய ஆர்வத் பலரினதும் மனதுகளை நெகிழ வைத்தது. அவர் ஒரு விவசாய மன்னன் என்பது எமது அமைப்பின் மதிப்பாகும்.

அமரர் அவர்களின் மூத்த பழைய மாணவர்களின் இதயத்தி லிருந்து............

"கந்தர் முருகேசு எனும் குரு முதலே
சராசரி மானுடத்தினிருந்தும்
மேலான சிந்தனைகளினூடே
மனிதத்தை சமூகத்தை நேசித்த பண்பாளனே !
நின் பெயர் நிலைத்திருக்க
புத்திஜீவிகளாக சமூக சேவகர்களாக, உரிமைவாதிகளாக
உலாவரும் உன் எச்சங்கள்
நிச்சயம் நினைவில் நிலைத்து நிறுத்தும்"



பதிப்பு: கரிகணன் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 2717,4590123